

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜூலை 03, 2014 | புரட்சி 13 | முழக்கம் 25 | விலை: ரூ.3.00


## தேசியப் பாதுகாப்புச் சட்டம் தகர்ந்தது

# 8 மாத சிறைவாசத்துக்குப் பிறகு கழகத் தோழர்கள் விடுதலை: உற்சாக வரவேற்பு





இராஜபக்சே, கொழும்பில் முன்னின்று நடத்திய நடந்த காமன்வெல்த் மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்கக் கூடாது என்று நாடு முழுதும் எதிர்ப்புகள், போராட்டங்கள் நடந்தன. அப்போது சென்னை மயிலாப்பூர், மந்தை வெளியில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களான அஞ்சலகம் மீது வெடி பொருள் வீசியதாக கழகத் தோழர்கள் உமாபதி, இராவணன், மனோகரன், மாரிமுத்து ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பின்னர், தமிழக அரசு, தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்ற அடக்குமுறைச் சட்டத்தை ஏவியது.

2013, அக்டோபர் 29 ஆம் தேதி கைது செய்யப்பட்ட தோழர்கள் புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

கழக வழக்கறிஞர் திருமூர்த்தி, துரை.அருண் ஆகியோர் வழக்கிற்கான அனைத்து முயற்சிகளையும் செய்தனர். வழக்கு விசாரணை தொடர்ந்து தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது. இறுதியாக 2014, ஜூன் 24 ஆம் தேதி நீதிபதி வி.தனபாலன், எம்.சொக்க லிங்கம் முன் விசாரணைக்கு வந்தது. மூத்த வழக்கறிஞர் என்.ஜி.ஆர். பிரசாத், கழகத் தோழர்களுக்காக வாதிட்டார். தேசியப் பாதுகாப்புச் சட்டம் முறை கேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறி நீதிபதிகள் தடுப்புக் காவலை நீக்கம் செய்தனர். 8 மாத சிறைவாசத்துக்குப் பிறகு கழகத் தோழர்கள் ஜூன் 25 மாலை தோழர்கள் விடுதலையானார்கள்.

மீர்சாகிப்பேட்டை மார்க்கெட்டிலிருந்து இராயப்பேட்டை பெரியார் படிப்பகம் வரை தோழர்கள் எழுச்சியான வரவேற்பு தந்து, ஊர்வலமாக அழைத்து வந்தனர். படிப்பக வாயிலில் சிறை மீண்ட தோழர்களுக்கும் கழக வழக்கறிஞர்களுக்கும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கருப்பு உடை போர்த்தி வரவேற்றார். தோழர்களை வரவேற்க லோகு. அய்யப்பன் தலைமையில் புதுச்சேரி கழகத் தோழர்களும் திரண்டிருந்தனர்.

அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஈழத் தமிழர் பிரச்சினைக்காக 4 கழகத் தோழர்கள் 8 மாதம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

# இதுதான் கெயில் நிறுவனம்!

ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கெயில் நிறுவனம், தனியார் மின் உற்பத்தி நிறுவனத்துக்குக் குழாய் வழியாக கொண்டு சென்ற எரிவாயு வெடித்து, 19 பேர் உயிரிழந்துவிட்டனர். எளிதில் தீப்பற்றக்கூடிய வாயுவை குழாய் மூலம் கொண்டு செல்வதில் மிகுந்த கவனமும் பராமரிப்பும் தேவை. ஆனால், வழமையான அதிகாரிகள் அலட்சியம்தான் மனித உயிர்களைப் பலிவாங்கியிருக்கிறது. இத்தகைய ஆபத்தான திட்டங்களை மக்கள் எதிர்த்துப் போராடினால் வளர்ச்சியை விரும்பாதவர்கள், வெளிநாட்டுப் பணம் பெறும் தொண்டு நிறுவனங்களால் தூண்டி விடப்படுகிறவர்கள் என்று குற்றம் சாட்டும் ஆட்சிகள், இந்த சாவுக்கு என்ன பதிலை கூறப் போகின்றன?

தமிழ்நாட்டில் மக்கள் எதிர்ப்பால் இந்த ஆபத்தான திட்டத்தை தமிழக அரசு நிறுத்தி வைத்திருப்பது சரியான முடிவு என்பதை இந்த விபத்து உறுதிப்படுத்தியிருக்கிறது.

‘கூடங்குளம்’ திட்டத்தை நியாயப்படுத்தும் ஆட்சியும், அதிகார வர்க்கமும் இந்த ஆபத்துகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா?

### மவுலிவாக்கம் அவலம்!

சென்னை மவுலிவாக்கத்தில் ஏரிக்கரை மீது எழுப்பப்பட்ட 11 அடுக்கு மாடிக் குடியிருப்புக்கள் சடசடவென்று சரிந்து விழுந்து, ஏழைத் தொழிலாளிகளைப் பிணமாக்கிவிட்டதே! இதற்கு யார் காரணம்? இடி மின்னல் மீது பழி போடுகிறார்கள் கட்டிட ஒப்பந்தக்காரர்கள். பெருநகர வளர்ச்சிக் குழும அதிகாரிகள் (சி.எம்.டி.ஏ.) மீது தவறு இல்லை என்று அவர்களைக் காப்பாற்றத் துடிக்கிறது - தமிழக அரசு. இத்தகைய பெரும் கட்டுமானங்களுக்கு துறையில் ஒவ்வொரு நிலையிலும் அதிகாரிகளை “கவனிக்க வேண்டும்” என்றும், ஒரு சதுர அடிக்கு 30 ரூபாய் வரை லஞ்சம் வாங்கப்படுகிறது என்றும் கூறுகிறார், ஓய்வு பெற்ற ‘சிம்.எம்.டி.ஏ.’ அதிகாரி ஒருவர்.

“விதி மீறி கட்டப்படும் கட்டிடங்களைக் கண்காணிக்க உயர்நீதிமன்றம் ஒரு குழு அமைத்தது. இந்தக் குழு சுதந்திரமாக செயல்பட முடியவில்லை. ஊழல் அதிகாரிகள் இருக்கும் வரை, விதிமீறல்களை தடுக்கவே முடியாது” என்கிறார், குழுவின் உறுப்பினரான முன்னாள் அய்.ஏ.எஸ். அதிகாரி தேவசகாயம். அடித்தட்டு மக்களின் உயிரோடு விளையாடுவது ஆளும் அதிகாரக் கும்பலுக்கு ஒரு பிரச்சினையே இல்லை போலும்!
என்னே கொடுமையடா!

### மனித உரிமை மீறல் : அய்.நா. விசாரணைக் குழு

இலங்கையில் ராஜபக்சே ஆட்சி நடத்திய மனித உரிமை மீறல் குறித்து விசாரணை நடத்த மூவர் குழு அமைக்கப்பட்டுள்ளது. பின்லாந்து நாட்டின் முன்னாள் அதிபரும் நோபல் பரிசு பெற்றவருமான மார்ட்டி ஆட்டி சாரி (77), நியூசிலாந்து நாட்டின் முன்னாள் ஆளுநர் சில்வியா கார்ட்ரெட் (70), பாகிஸ்தானின் முன்னாள் மனித உரிமை ஆணையத்தின் தலைவர் ஆஸ்மா ஜஹாங்கீர் (62) ஆகியோர் குழுவில் இடம் பெற்றுள்ளனர். உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இரு தரப்பிலும் நடந்த மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பாக, இவர்கள் இலங்கைக்குச் சென்று 10 மாதங்கள் விசாரணை நடத்துவார்கள். விசாரணைக் குழுவை வரவேற்றுள்ள அய்.நா. மனித உரிமை ஆணையத்தின் தலைவர் நவி பிள்ளை. குழுவினர் மூவரும் நேர்மையானவர்கள், சுதந்திர மானவர்கள், பாரபட்சமின்றி செயல்படக் கூடியவர்கள் என்று பாராட்டியுள்ளார். இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளதோடு, ஒத்துழைப்பு இல்லாவிடினும் விசாரணை தொடரும் என்று கூறியுள்ளார்.

(வினாக்கள்-விடைகள் உள்ளே)

**தலையங்கம்**

## இளவரசனை பலி கொண்ட ஜாதி வெறி

ஜூலை 4, வரலாற்றில் ஜாதியத்தின் கோர முகம் தலைவெறித்தாடிய நாள்! வன்னிய சமூகத்தைச் சார்ந்த திவ்யாவும், தலித் சமூகத்தைச் சார்ந்த இளவரசனும் ஜாதி கடந்து காதலித்தக் “குற்றத்துக்காக” ஜாதி வெறியர்களால் தண்டிக்கப்பட்டு, இளைஞன் இளவரசன் தனது வாழ்க்கையை ரயிலில் விழுந்து முடித்துக் கொண்ட நாள்! இளவரசன் மரணத்துக்குத் தூண்டியது – ஜாதி வெறியைக் கட்டமைத்து அரசியலில் குளிர்காய முனையும் ஒரு கூட்டம்! நீதிமன்றம் வரை பிரச்சினையை கொண்டுச் சென்று இளம் காதலர்களைப் பிரித்து அந்த சோகத்தைக் கண்டு மகிழ்ச்சிக் கூத்தாடியது இந்த ஜாதி வெறிக் கும்பல். இந்தக் கொடுமை தொடர்கிறது. தொடர்ந்து பாலியல் வன்முறைக்கு, படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள் தலித் பெண்கள். முதல் தலைமுறையாக இவர்கள் படிக்கத் தொடங்குவதும், சுயமரியாதையோடு வாழ விரும்புவதும் ஜாதி ஆதிக்கக் கும்பலுக்கு வேப்பங்காயாக கசக்கிறது.

தேர்தலுக்குப் பிறகு, பா.ம.க.வுக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக கடலூர் மாவட்டம் வடக்கு மாங்குடி கிராமத்தில் வாழ்ந்த தலித் மக்கள் தாக்கப்பட்டு, இருவர் மரணமடைந்துள்ளனர். சுற்றிலும் ஆதிக்க ஜாதியினரின் மிரட்டலுக்கிடையே தனித் தீவு போன்ற இடத்தில் வாழ்ந்து வரும் இந்த தலித் மக்கள், தங்கள் பாதுகாப்புக்காக ஊரை விட்டே வெளியேற விரும்பும் அவல நிலையை நேரில் சென்று ஆய்வு நடத்திய திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் உள்ளிட்ட மனித உரிமையாளர்கள் பங்கேற்ற ஆய்வுக் குழு அறிக்கை கூறுகிறது.

ஜூன் 25, 2014 ஆம் தேதி வெளி வந்த ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேடு, கடந்த சில மாதங்களாக நடந்த தலித் மக்கள் மீதான தாக்குதல்களைப் பட்டியலிட்டுள்ளது. புதுகை மாவட்டம் கருவேடத் தெரு கிராம பஞ்சாயத்தில், பஞ்சாயத்து தலைவர் ஏ. கலைமணி, ஒரு தலித் என்பதால் ‘குடியரசு’ நாளன்று அவர் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு ஜாதி வெறியர்கள் அனுமதிக்கவில்லை. கரம்பக்குடி அருகே உள்ள வன்டான் விடுதி கிராமத்திலுள்ள பஞ்சாயத்து நடுநிலைப் பள்ளி பெயர்ப் பலகையில் பஞ்சாயத்து தலித் பெண் பெயர் எழுதப்பட்டிருந்த காரணத்தால் பள்ளியை ஜாதி வெறியர்கள் அடித்து, நொறுக்கி சேதப்படுத்தியுள்ளனர்.

கரூர் அருகே உள்ள கே.பிச்சம்பட்டி கிராமத்தில் ‘பிளஸ் டூ’ முடித்துவிட்டு தனது கல்லூரிப் படிப்புக்காக பணம் சேர்க்க தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வந்த தலித் மாணவி வழி மறிக்கப்பட்டு, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

2013 நவம்பர் மாதத்தில் வேதாரண்யம் அருகே உள்ள புல்வேலி கிராமத்துக்கு செல்லும் பாதையில் சைக்கிளில் வந்த காயத்ரி என்ற 19 வயது தலித் மாணவி, ஒரு ஜாதி வெறியனால் வழி மறிக்கப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். காவல்துறை அலட்சியத்தால் குற்றவாளி தப்பித்துவிட்டார். பாதிக்கப்பட்ட தலித் பெண்கள், காவல் நிலையத்தில் புகார் தருவதை காவல் நிலைய அதிகாரிகளே விரும்புவதில்லை; தடுத்து வருகிறார்கள்.

அம்மூரில், பிப்.2012 இல் 19 வயது தலித் மாணவி, பாலியல் வன்முறைக்கு உள்ளாகி படுகொலை செய்யப்பட்டார். 2012 மார்ச் மாதத்தில் நாகை மாவட்டம் சீர்காழியில் 12 வயது தலித் மாணவி இதேபோல் கொல்லப்பட்டார். அதே ஆண்டு ஜூலையில், 15 வயதுள்ள வீட்டு வேலை செய்யும் தலித் பெண்ணை கொலை செய்த குற்றத்தில் பெரம்பலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார் கைது செய்யப்பட்டார். 2012 டிசம்பரில் நாகை மாவட்டம் தலைஞாயிறு கிராமத்தில், 8 வயது தலித் சிறுமி கொல்லப்பட்டார். 2013 ஜனவரியில் புதுக்கோட்டை மாவட்டம் நாகுடி கிராமத்தில் 17 வயது தலித் மாணவி கொல்லப்பட்டார். இப்படி பட்டியல் நீள்கிறது.

ஜாதி வெறியின் கோரத்தாண்டவம் தொடர்வது ஏன்? காவல்துறையும், அரசு நிர்வாகமும், தலித் சமூகம் என்றாலே இப்படி படுகொலைக்கும் பாலியல் வன்முறைக்கும் உட்படுவதை ஒரு சமூகப் பிரச்சினையாகக் கருதாமல் அலட்சியப்படுத்தும் மனோபாவம் எப்படி நீடிக்கிறது?

ஜாதியைக் கட்டமைத்துள்ள பார்ப்பனியம், பார்ப்பனியத்தை தலையில் ஏற்றிக் கொண்டு வெறி பிடித்து ஆடும் ஜாதி ஆதிக்க வெறி, அதிலும் இலக்கு வைத்து தாக்கப்படும் தலித் பெண்கள் என்று தொடர்ந்து அவலங்கள் அரங்கேறுவது இந்த சமூகத்துக்கே அவமானம், அல்லவா?

இளவரசனின் நினைவு நாளில் ஜாதி தீண்டாமைக்கு எதிரான இயக்கங்களை வலிமையோடு முன்னெடுக்க வேண்டும். ஜாதிக் கலவரங்கள், ஜாதிய ஒடுக்குமுறைகள் இவற்றுக்கு மூல ஊற்றாக இருக்கும் ஜாதி–ஜாதியமைப்பு–அதை நியாயப்படுத்தும் நிறுவனங்கள், மதங்கள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், அனைத்துக்கும் எதிரான விழிப்புணர்வு இயக்கங்கள் தீவிரமாக வேண்டும்; அந்நிலை உருவாகாத வரை இந்த அவலம் தொடரவே செய்யும்!

# ஜூலை 10: மத்திய தேர்வாணையம் முன் முற்றுகைப் போராட்டம் ஏன்?

மத்திய அரசு பணியாளர் தேர்வாணைக் குழுமம் எனப்படும் Staff Selection Commission மத்திய அரசு நிறுவனங்களில் ஏற்படும் பணியிடங்களை நிரப்பும் இந்திய அரசின் சட்டப்பூர்வ மத்திய அரசு நிறுவனமாகும். இக்குழுமம் 145 க்கும் மேற்பட்ட மத்திய அரசு நிறுவனங்களுக்கு பல கட்ட தேர்வுகளை நடத்தி ஊழியர்களை பணியமர்த்துகிறது.

2006 வரை மண்டல அளவிலேயே இப் பணியமர்த்தும் நடவடிக்கைகளை இக் குழுமம் மேற்கொண்டு வந்தது. (இந்திய அளவில் 7 மண்டலங்களாக இக்குழுமம் செயல்பட்டு வருகிறது ). இதனால் அனைத்து மாநில மக்களுக்கும் அந்தந்த மாநிலத்திலேயே வேலை வாய்ப்புகள் மத்திய அரசின் துறைகளில் கிடைத்து வந்தது.

2006ஆம் ஆண்டிற்குப் பிறகு மண்டல அளவில் நடத்தப்பட்டு வந்த இத் தேர்வுகள் அகில இந்திய அளவில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் மாற்றப்பட்டது. உச்ச நீதிமன்றம் அகில இந்திய அளவில் இத்தேர்வுகள் நடத்தப் பட வேண்டும் என கூறியிருந்தாலும்கூட 50 சதவீதப் பணியிடங்களையாவது மண்டல அளவில் நியமிக்க மத்திய அரசின் பணியாளர் நியமனத்துக்கான அமைச்சகத்திற்கு ஒரு பரிந்துரையை செய்தது. இப்பரிந்துரையைக் கூட கணக்கில் கொள்ளாத இந்திய அரசு உடனடியாக அனைத்து நிலையிலான தேர்வுகளையும் அகில இந்திய அளவில் நடத்த உத்தரவிட்டது.

இவ்வாறு அகில இந்திய அளவில் தேர்வுகள் நடத்தப்படுவதால் மத்திய அரசு நிறுவனங்களில் தமிழர்கள் பணியமர்த்தப்படுவது முற்றிலுமாக பறிக்கப்பட்டுள்ளது. உணவு இடைவேளையில் சென்னையில் உள்ள வருமான வரி உணவகத்திற்கு வந்தால் தமிழ் நாடா அல்லது வடநாடா என்ற அளவிற்கு பீகார், உ.பி-யை சேர்ந்தவர்கள் நிரம்பி இருப்பார்கள்.

பீகார் உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களே இங்கு அதிக அளவில் பணி அமர்த்தப்படுகின்றனர். இதற்கு அம்மாநிலத்தை சேர்ந்தவர்கள் தமிழர்களை விட அதிக மதிப்பெண்களை நுழைவுத் தேர்வுகளில் பெறுகிறார்கள் என ஒரு பொய்யான காரணம் கூறப்படுகிறது.

ஆனால் உண்மை அதுவல்ல. அம்மாநிலங்களில் நிலவும் அளவுக்கதிகமான வேலை வாய்ப்பின்மையை பயன்படுத்திக் கொண்டு லட்சக்கணக்கில் பணம் பெற்றுக்கொண்டு குறுக்கு வழியில் மோசடிகள் புரிந்து வேலை வாய்ப்புகளை பெற்றுத் தரும் பணிகளை லக்னோ, பாட்னா உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் உள்ள பயிற்சி நிறுவனங்கள் செய்யத் தொடங்கின. இதற்கு குழுமத்தில் உள்ள அதிகாரிகளையும், ஊழியர்களையும் கைக்குள் போட்டுக் கொண்டு கையூட்டு கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டன.

நுழைவுத் தேர்வுக்கான வினாத்தாள்களை தேர்வுக்கு முன்னரே வெளியிட்டுவிடுவது, தேர்வு நடைபெறும் மையங்களில் தேர்வு எழுதுபவர்களுக்கு கால அளவை கூடுதாக அளிப்பது, பணி நியமனத்திற்கு பணம் அளித்தவர்களை ஒரு குறிப்பிட்ட மையங்களில் மட்டுமே தேர்வெழுத வைத்து அவர்களுக்கு வினாக்களுக்கான விடையை அளித்து தேர்வில் தேர்ச்சி பெற வைப்பது என பல முறைகேடுகளை இப்பயிற்சி நிறுவனங்கள் அரங்கேற்றுகின்றன. ஒரே வீதியை சேர்ந்த பலர் பீகரில் இருந்தும் உ.பி-யில் இருந்தும் முறைகேடாக தேர்ந்தடுக்கப்பட்டு தமிழகத்தில் உள்ள மத்திய அரசு துறைகளில் இன்றும் பணியாற்றி வருகின்றனர் என்பதிலிருந்தே இதை புரிந்து கொள்ளலாம்.

இதில் உச்சகட்ட மோசடி கடந்த ஆண்டு வெளியுலகத்திற்கு தெரியவந்தது. இக்குழுமத்தினால் கணிசமான மாதச் சம்பளம் உள்ள வருமான ஆய்வாளர், சுங்கத் துறை தடுப்பு அதிகாரி, சுங்கத் துறை மதிப்பீட்டாளர் மற்றும் பல்வேறு பணிகளுக்கு CGLE-2013 (Common Graduate Level Exam-2013) என்ற பெயரில் நடத்தப்பட்ட தேர்வுகள் பீகாரில் உள்ள 7 மையங்களில் வினாத்தாள்கள் வெளியானதால் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படாமல் கடந்த ஓர் ஆண்டாக நிறுத்தப்பட்டிருந்தது. முறைகேடுகளை விசாரித்த நீதிமன்றம் இந்தியா முழுவதும் நடத்தப்பட்ட இத் தேர்வை ரத்து செய்து கடந்த ஏப்ரல் 2014ல் இத்தேர்வுகள் மீண்டும் நடத்தப்பட்டன.. இதற்கு முன்னர் இதேபோல முறைகேடாக தேர்வுகள் நடந்து வெளிச்சத்துக்கு வராமல் மறைக்கப்பட்டு வந்துள்ளன.

அதுமட்டுமல்லாமல் இத் தேர்வுகளின் வினாத்தாள்கள் அனைத்தும் ஆங்கிலத்துடன் இந்தியிலும் இருப்பதால், இந்தியை தாய்மொழியாக கொண்டவர்களுக்கு வினாக்களை எளிதில் புரிந்து கொண்டு விடையளிப்பதும் எளிதாக இருக்கிறது. மற்ற மொழிகளை தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கிலத்தில் மட்டுமே விடையளிக்க வாய்ப்புகளை இந்திய அரசு ஏற்படுத்திருப்பது இந்தி பேசும் மக்களுக்கு சாதகமாக உள்ளது. அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., பணியிடங்களுக்கு தேர்வுகளை நடத்தும் மத்திய தேர்வாணையம்கூட தேர்வுகளை தமிழில் நடத்துகிறது ஆனால் மக்களிடையே நேரடியாக தொடர்பு கொண்டு களத்தில் பணியாற்றும் இப்பணிகளுக்கு நாம் பலமுறை வலியுறுத்தியும் இந்திய அரசானது தமிழில் தேர்வுகளை நடத்த மறுக்கிறது.

இவ்வாறு இந்திபேசும் வேற்று மாநிலத்தை சேர்ந்தவர்கள் தமிழகத்தில் சிறு நகரங்களுக்கும், மாவட்ட தலை நகரங்களுக்கும் பணியமர்த்தப்பட்டு கடந்த 5 ஆண்டுகளாக பணியாற்றிவருகிறார்கள். இதனால் தமிழகத்தில் இந்தி மட்டுமே தெரிந்த வேற்று மாநில பணியாளர்களிடம் இந்தி தெரிந்தால் மட்டுமே அவ்வலுவலகங்களுக்கு செல்ல முடியும் என்ற அவல நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் இவ்வாறு இந்தி பேசும் பணியாளர்களை வைத்துக்கொண்டு நிர்வாகத்தை நடத்துவதில் தமிழகத்தில் உள்ள மத்திய அரசின் நிறுவனங்கள் பல சிக்கல்களை சந்திக்கின்றன. வேற்று மாநிலத்தில் இருந்து பணியாற்ற வரும் ஊழியர்கள் மீண்டும் தமது மாநிலத்திற்கே செல்ல பணியிட மாற்ற விண்ணப்பம் செய்து அப்பணியிட மாற்றத்திலேயே குறியாக இருப்பதால் பணிகளில் சுணக்கம் காட்டுகின்றனர். பணியிட மாற்றம் கிடைத்த பின்பு காலியாகும் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுவது இல்லை அவ்வாறு நிரப்பப்பட்டாலும் அதிலும் இந்தி பேசுபவர்களே மீண்டும் வருகிறார்கள். இவற்றைக் களையக்கோரி சம்பந்தப்பட்ட மத்திய அரசின் தலைமை அதிகாரிகளே பலமுறை இந்திய அரசிற்கு கோரிக்கை வைத்துள்ளனர் என்பதிலிருந்து நிர்வாக நெருக்கடிகளைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆகவே இந்திய அரசின் இப்போக்கினை கண்டித்து, முறைகேடான மோசடியான பணி நியமனங்களை எதிர்த்து தமிழர்களின் வேலை வாய்ப்பு உரிமைகளை நிலைநாட்டிட இந்திய அரசை வலியுறுத்தி மத்திய அரசின் பணியாளர் தேர்வாணைக் குழுமம் மாநில அளவிலேயே தேர்வுகளை நடத்த வேண்டும்; தேவையானால் அதற்கென அரசமைப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும் எனபதை மய்ய கோரிக்கையாக வலியுறுத்தியும்,

இந்திமொழி இடம்பெற்றிருப்பது போல அவரவர் தாய்மொழியிலும் வினாத்தாள்கள் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியும்

வருகிற ஜூலை மாதம் 10ஆம் தேதி சென்னையில் உள்ள தென்மண்டல மத்திய அரசு பணியாளர் தேர்வாணைக் குழுமத்தை முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்படுகிறது.

**மத்திய அரசுப் பணிகளில் தமிழர் வேலை வாய்ப்புப் பறிப்பு எதிர்ப்பு கூட்டியக்கம்**

# ‘முன்னோடி – பின்னோடி’ வாதங்களுக்கு மறுப்பு (2)

# சைவம் ‘பார்ப்பன புரோகிதத்தை’ மறுத்ததா?

*‘தமிழ்த் தேசிய தமிழர் கண்ணோட்டம்’ இதழில் வெளியான தோழர் பெ.மணியரசன் கட்டுரைக்கு மறுப்பு. சென்ற இதழ் தொடர்ச்சி.*

தமிழர் வாழ்க்கை நிகழ்வுகளில் புரோகிதர்களை நீக்கிட வேண்டும் என்ற இயக்கத்தை 1916 ஆம் ஆண்டிலேயே மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம் தொடங்கிவிட்டது என்றும், அதற்குப் பிறகு 1926இல் தான், பெரியார் அதைக் கையில் எடுத்தார் என்றும் தோழர் பெ.மணியரசன், ‘தமிழ்த் தேசிய தமிழர் கண்ணோட்டத்தில்’ (2014, மே 15) எழுதியிருந்தது உண்மைக்கு மாறானது என்பதை கடந்த இதழில் விளக்கியிருந்தோம். ‘புரோகிதர் விலக்கு’ பெரியாருக்கு முன்பே தொடங்கிவிட்டது என்று நிலைநாட்ட பெ.மணியரசன் செய்த ‘ஆராய்ச்சி’யை மறுத்து கீழ்க்கண்ட கருத்துகளை முன் வைத்தோம்.

முதலாவதாக ‘புரோதர் விலக்கை’ 1916இல் தொடங்கிய மறைமலையடிகள் 1927இல் நடந்த அவர் மகளின் திருமணத்தை பார்ப்பன புரோகிதரை வைத்தே நடத்தினார். இரண்டாவதாக பார்ப்பனப் புரோகிதர்கள் என்பவர்களே ஆதித் தமிழர்கள்தான் என்பதே மறைமலை அடிகளின் கருத்து. ‘பார்ப்பன புரோகிதர்கள்’ ஆதித் தமிழர்கள் என்று கருதிய மறைமலை அடிகள், ‘புரோகித விலக்கு’ கொள்கை எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்? கா.சு.பிள்ளை போன்ற தமிழறிஞர்கள்கூட மறைமலை அடிகள் தனது வீட்டுத் திருமணத்தை பார்ப்பனரை வைத்து நடத்தியதை விரும்பவில்லை.

மறைமலை அடிகள், மகள் திருமணம் முடிந்து ஓரிரு மாதங்களுக்குப் பிறகு தமிழறிஞர்களைச் சந்தித்து ‘புரோகித விலக்கம்’ குறித்து விவாதித்தனர்.

இந்தச் சந்திப்பு பற்றி ‘குடிஅரசு’ இதழில் (26.12.1928) மதுரை அ.சொ. அருணாசலம் என்பவர் ‘தமிழில் புரோகிதம் வேண்டும்’ என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடுகிறார். அதில் சிங்காரவேலர், கா.சு. பிள்ளை, மறைமலையடிகள், கஜேந்திர முதலியார், ஈ.வெ.ராமசாமி சந்தித்துப் பேசிய பிறகும் புரோகித விலக்குக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடுவதோடு, இந்த முயற்சி வெற்றி பெற புரோகித நம்பிக்கையாளர்கள் வட மொழியைத் தவிர்த்து தமிழில் வேண்டுதல் செய்வது அவசியம். அதன் மூலம் புரோகிதர் கொள்ளையைத் தடுக்க முடியும் என்று வலியுறுத்துகிறார்.

இவ்வளவுக்கும் பிறகு புரோகித பார்ப்பன எதிர்ப்பை தீவிரமாக நடத்தி வந்த சுயமரியாதை இயக்கத்தை ஒழிப்பதற்கே இந்த “புரோகித எதிர்ப்பு வீரர்கள்” தொடை தட்டிக் கிளம்பினார்கள் என்பதை ‘சைவ சமயம்’ என்ற தலைப்பில் பெரியார், ‘குடிஅரசு’ இதழில் (7.10.1928) எழுதிய தலையங்கம் வெளிச்சப்படுத்துகிறது.

பெரியாரின் தலையங்கம் - சைவ மதக்காரர்களின் பார்ப்பன புரோகித எதிர்ப்பையே கேள்விக்குள்ளாக்குகிறது. பெரியார், அத் தலையங்கத்தில் அழுத்தமாக எழுப்பும் கேள்விகள் முன் வைக்கும் வாதங்கள் என்ன?

*1. பார்ப்பன வேதம், பார்ப்பன புராணம், பார்ப்பன வேள்வி மற்றும் சங்கராச்சாரிகளை எதிர்ப்பதாகவும் அவற்றோடு தங்களுக்கு ஒட்டு உறவு கிடையாது என்றும் கூறும் சைவ சமயத்துக்காரர்கள் தங்கள் கடவுளான ‘சிவனு’க்குமட்டும் கந்த புராணம், சிவ மகாபுராணத்திலிருந்து ஆதாரம் தேடுவது ஏன்?*

*2. இந்தப் புராணங்களை ஒதுக்கிவிட்டால், சைவத்தில் சிவனுக்கு ஏதாவது இடம் இருக்கிறது என்று கூற முடியுமா?*

## ‘கண்டதைப் படிப்பவன்’

*3. சைவம் உட்பட இந்து, வைணவக் கடவுள்களை எல்லாம் எடுத்துக் கொண்டால் அந்தக் கடவுள்கள் எல்லாம் தேவர்களின் யாகத்தை எதிர்த்து வந்த ‘அரக்கர்’களை அழித்த வர்கள் என்கிற அடிப்படையில் சித்தரிக்கப்படுபவர்களாகவேத் தானே இருக்கிறார்கள்? தேவர்கள் யாகத்தைக் காப்பது என்ற ஒன்று மட்டுமே கடவுள் கோட்பாடாக இருப்பது ஏன்?*

*4. சைவ சமயத் தலைவர்கள் என்பவர்களும்கூட வேதங்களையும் யாகங்களையும் காப்பாற்றுவதற்கும் அவற்றை எதிர்த்தவர்களை அழிப்பதற்கும் தோன்றியவர்கள்தான் என்பதை மறுக்க முடியுமா?*

*5. வேதம், யாகம், அவற்றைக் காப்பாற்ற வந்த கடவுள்கள், ஆரியர்களால் புனையப்பட்ட புராணங்கள் இவற்றை ஒதுக்கி விட்டால் ‘சைவம்’ என்ற ஒன்றே வேறு இல்லை என்பதை மறுக்க முடியுமா?*

*6. தேவாரத்துக்கோ திருவாசகத்துக்கோ ‘தமிழ் மறைக்கோ’ சைவத்தில் எங்கேயாவது இட மிருக்கிறதா?*

*7. சைவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்ற வார்த்தைகளும் சைவக் கடவுள்களின் பெயர்களும் கடவுள்களின் மனைவி, பிள்ளைகளின் பெயர்களும் முழுதும் ஆரிய மொழியிலேயே இருப்பது ஏன்? அப்பெயர்களுக்கு புனையப்படும் கதைகளும் புராணங்களும் பெரும்பாலும் ஆரிய மூலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதாக இருப்பது ஏன்?*

- என்ற கேள்விகளை எழுப்பும் பெரியார் சமயம்-சைவம்-வைணவம் என்பவை பார்ப்பன ஆதிக்கத்துக்கு உழைக்கும் நிறுவனங்களாகவே இருக்கின்றன என்றும், இதை தெரிந்தோ, தெரியாமலோ துணைப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்றும் எடுத்துக் காட்டுகிறார்.

*(பெரியார் தலையங்கம் கீழே வெளியிடப் பட்டுள்ளது)*

தமிழ் மதம் எனக் கூறப்படும் சைவச் சமயத்தில் உள்ள ஆரியக் கூறுகளை விளக்கிக் கூறி தமிழர் மரபும், இந்து மதமும் - மரபு எது, மதம் எது என்று பிரித்துப் பார்க்க இயலாத வகையில் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்பதை பெரியார் விளக்கியுள்ளார்.

- இப்போது கூட ‘முருகனை’ தமிழ்க் கடவுளாகக் காட்ட சிலர் முனையும்போது சுப்பிரமணியன் வேறு முருகன் வேறு என்று பிரித்துக் காட்ட முடியாமலும், முன்னர் மனைவியாக இருந்த வள்ளி, ஆரிய ஊடுறுவலுக்குப் பின்னர் தெய்வானை என்ற சட்டபூர்வ மனைவிக்குப் பிறகு முருகனுக்கு வந்து சேர்ந்த வைப்பாட்டியாகத்தான் தமிழர் மனதில் ஆழ வேரூன்றியுள்ளார் என்பதையும் அறியமுடிகிறது.
- ‘மாயோன்’ என்பதில் மா என்ற சொல்லுக்குள்ள கருப்பு எனும் பொருளைக் கருதி திருமாலாக - கருமைநிறக் கண்ணனாக - விளக்குகிறார்கள். அந்த கண்ணன் எனும் தலைவனும் கூட நப்பின்னை என்ற தலைவியைத் தான் இணையாகக் கொண்டிருந்ததாகக் கூறுகின்றன பழந்தமிழ் நூல்கள் சில. இப்போது கண்ணனும் கிருஷ்ணனும் கலந்து போயுள்ள சூழலில் தலைவிகளாக பாமா, ருக்குமணியையும், அதைவிட வேடிக்கையாக பிறன் மனைவியாகிய இராதாவையும்தான் கருதும் போக்குள்ளதே தவிர நப்பின்னையை நினைப்போர் ஒருவரும் இலர்.
- பரிபாடல் திருமுருகாற்றுப்படை போன்ற சங்க இலக்கியங்கள் கூற்றுப்படி முருகனுக்கு வயது 2000. ஆனால், 1300 ஆண்டுகளுக்கு முன்பு மட்டுமே அறிமுகமான ‘வினாயகன்’ எப்படி முருகனுக்கு அண்ணன் ஆனான்?

இப்படி ஆரியம் சைவத்தை விழுங்கியுள்ள நிலையில் ‘புரோகித விலக்கு’ கொள்கையில் தனித் தமிழ் இயக்கம் தான் பெரியாருக்கு முன்னோடி என்பது புரட்டல் வாதமல்லவா? அதுமட்டுமல்ல, ‘புரோகித’ எதிர்ப்பை முன்னெடுத்த பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தையே எதிர்த்தவர்கள் இந்த சைவர்கள்.

இது குறித்து அடுத்த இதழில் எழுதுவோம்.

# சைவம் : பெரியார் எழுப்பும் கேள்விகள்!

*சமயம் என்பதைப்பற்றி சென்ற வாரம் ஒரு தலையங்கம் எழுதியிருந்தோம். இவ்வாரம் சைவ சமயம் என்பது பற்றி எழுதுகின்றோம்.*

கொஞ்ச காலமாக சைவ சமயத்தின் பேரால் சிலர் போடும் கூச்சல் அளவுக்கு மேல் போகின்றது. சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டும் என்று கட்சி சேர்க்கின்றார்களாம். அரசியல் பிழைப்புக்காரர்கள் சிலர் அப்படித்தான், அதாவது, “சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டும் , அதை ஒழிக்காவிட்டால் சுயராஜ்யம் தடைபட்டுப் போகும்” என்று கூச்சல் போட்டார்கள். கூலி கொடுத்தும் கூச்சல் போடச் சொன்னார்கள். அவ்வளவு கூச்சல்களையும் அடக்கிக்கொண்டு இப்போது நமதியக்கம் தலைநிமிர்ந்து நிற்கின்றதையும் அரசியல்காரர்களில் பெரும்பாலோரும் இதை ஆதரிப்பதையும் பார்த்து ஒருவாறு அடங்கிவிட்டார்கள். இப்போது சைவ சமயத்தார்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களில் சிலர் கிளம்பி சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க வேண்டுமென பிரச்சாரம் செய்து வருகின் றார்கள். இச்சைவ சமயத்தார்கள் என்பவர்கள், சுயமரியாதை இயக்கம் பார்ப்பனீயத்தையும், பார்ப்பனர்களையும் கண்டிக்கும் பொழுதும், வைணவ சமயத்தையும் வைணவர்களையும் கண்டிக்கும் பொழுதும் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு நம்மீதும் சுயமரியாதை இயக்கத்தின் மீதும் புகழ் புராணமும் கவியும் பாடிக்கொண்டிருந்தார்கள்.

அதாவது, பார்ப்பன ஆதிக்கத்தை கண்டித்து சங்கராச்சாரியாரை தாக்கி வரும் போது நமக்கு உதவியும் செய்தார்கள். பிறகு வைணவ புராணங்களின் வண்டவாளங்களை வெளியாக்கும் போதும் நமக்கு உதவி செய்து வந்தார்கள். இதுமாத்திரமல்லாமல், இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லையென்றும் இந்துமதம் என்று சொல்லப்படுவது பார்ப்பனாதிக்கக் கொள்கைகள் கொண்டது என்றும் சொல்லும் போதும் அதை ஆதரித்து அதற்கும் வேண்டிய ஆதாரங்கள் உதவி வந்தார்கள்.

கடைசியாக சைவ மதப் புராணங்கள் என்பவைகளின் முறையில் அவற்றின் யோக்கியதைகளை வெளியாக்க நேரிட்டபோது மாத்திரம் ‘சுயமரியாதை இயக்கம் சமயங்களுக்கு ஆபத்தை விளைவிக்கின்றது; மோட்சத்திற்குத் தடையாய் நிற்கின்றது’ என்று சொல்ல வந்து விட்டார்கள்.

எனவே சைவ மதம் என்றால் என்ன? அது பார்ப்பன மதமல்லாமல் வேறு தனி மதம் என்றோ அல்லது தமிழ் மக்கள் மதம் என்றோ யாராவது சொல்ல முடியுமா? என்பதை முதலில் கவனிக்க விரும்புகின்றோம்.

நம் நாட்டு சைவர்கள் பெரும்பாலும் தாங்கள் ‘பார்ப்பன மதத்தை வெறுக்கின்றோம்’ என்கின்றார்கள். அன்றியும் பார்ப்பனர்களது மத ஆதாரம் என்பவைகளாகிய நான்கு வேதங்கள் என்பதையும் சைவர்கள் தங்களுக்கு சம்பந்தப்பட்டதல்ல என்கின்றார்கள். பார்ப்பனர்களின் “மோட்ச” சாதனமான வேள்விச் சடங்குகளையும் தாங்கள் ஒப்புக் கொள்ளுகின்றதில்லை என்கின்றார்கள். மற்றும் புராணங்கள் என்பவைகளையும் ஆரிய சாஸ்திரங்கள் என்பவைகளையும் தாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது என்பதுடன் அவைகள் பொய் என்றும் கற்பனை என்றும் சொல்ல முன் வந்திருக்கின்றார்கள். பார்ப்பன ஆச்சாரியார்களும் அதாவது சங்கராச்சாரி போன்றார்களும் தங்களுக்கு சம்மந்தப்பட்டவர்கள் அல்ல என்றும் சொல்லுகின்றார்கள்.

மற்றும் எவ்வளவோ, அதாவது, “ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!” என்று ஆரியத்தையும் தமிழையும்

(4 ஆம் பக்கம்)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

DATE OF PUBLICATION 02.07.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பார்ப்பனியத்திலிருந்து சைவத்தைப் பிரிப்பது எது?

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்து ஆரியத்திற்கும், தங்களுக்கும் தங்கள் சைவ மதத்திற்கும் சிறிதும் சம்மந்தமில்லை என்றும் தாங்கள் தனித் தமிழ்ச் சமயத்தார் என்றும் சொல்லிக்கொள்ளுவதுடன் அதற்கு வேண்டிய ஆதாரங்களையும் கண்டு வைத்திருக்கின்றார்கள். உதாரணமாக 'தென்னாட்டு சிவனே போற்றி' என்றும் பிரித்துச் சொல்லுகின்றார்கள். எனவே இந்நிலையில், சைவ மதம் என்றால் என்ன?

முதலாவதாக, கற்பனை என்றும் பொய் என்றும் ஆபாசமென்றும் அசம்பாவிதம் என்றும் சொல்லும்படியான கந்தபுராணம், சிவமகா புராணம் முதலாகிய புராணங்களை ஒதுக்கி விட்டு பார்த்தால் சிவனுக்கோ, சைவத்திற்கோ ஏதாவது கடுகளவு இடம் இருக்கின்றதா என்பதை கூர்ந்து நோக்கும்படி வாசகர்களை கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இரண்டாவதாக, இந்து மதத்தையோ, வைணவ மதத்தையோ, சைவ மதத்தையோ தனித்தனியாகவோ பொதுவாகவோ எடுத்துக் கொண்டு பார்ப்போமேயானால் அவைகளிலுள்ள பொதுவான கடவுள்களும், வைணவ, சைவ கடவுள்களும், சுரர்கள் என்னும் "தேவர்"களின் வேள்வி என்னும் யாகத்தை அழித்து வந்த அசுரர்கள் என்னும் "அரக்கர்களை" கொன்று வென்று யாகத்தைக் காக்க வந்தது என்கின்ற அஸ்திவாரம் தவிர வேறு மார்க்கத்தில் வந்த கடவுள்கள் ஏதாவது எங்காவது இருக்கின்றனவா? என்று பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

அல்லது பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்களின் வேதத்தை ஒப்புக் கொள்ளாததினாலோ, நிந்தித்ததினாலோ உலகம் "நீதியும் ஒழுக்கமும் கெட்டுப் போய்விட்டது" என்று சொல்லிக் கொண்டு அவதாரம் செய்ததாகவோ தோன்றியதாகவோ அல்லாமல் வேறுவழியில் வந்த ஏதாவது கடவுள்கள் உண்டா? இருக்கின்றனவா?

இந்து, வைணவ, சைவ சமய சம்மந்தமான எந்த புராணமும் இதைத் தவிர வேறு என்ன காரணங்களாவது கற்பிக்கின்றனவா?

உதாரணமாக, சைவ சமயச்சாரியார்கள் என்பவர்களும், "வேத வேள்வியை மக்கள் நிந்தனை செய்ததால் தோன்ற வேண்டியவர்களானார்கள். வேத வேள்வியை நிந்தனை செய்த மக்களையும் அழித்து வேத வேள்விச் சமயத்தையும் கடவுள்களையும் ஆதரிக்க வேண்டியவர்களானார் கள்" என்பதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றும் வேதத்தையும் வேள்வியையும் தள்ளிவிட்டு அவற்றைக் காப்பாற்ற வந்த கடவுள்களையும் தள்ளிவிட்டு ஆரியர்களால் புனையப்பட்டது என்கின்ற புராணங்களையும் தள்ளிவிட்டால், தேவாரத்திற்கோ, திருவாசகத்திற்கோ மற்றும் "தமிழ் மறை"க்கோ எங்காவது இடமிருக்கிறதா என்று கேட்கிறோம்.

சிவம், சைவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்ற வார்த்தைகளும் ஆரியத்தை அடிப்படையாகக் கொண்டவை என்னும் வழக்கை சுலபத்தில் தள்ளிவிட முடியாது. மற்றும் சைவக் கடவுள்கள் பெயரும் அக் கடவுள்களின் பெண்ஜாதி பிள்ளைகளின் பெயரும் அனேகமாய் முழுதும் ஆரியபாஷைப் பெயர்களே தவிர வேறில்லை. மற்றும் அப் பெயர்களுக்கு ஏற்ற காரணங்களும் அக்காரணங்களுக்கு ஆரியர்களால் கற்பிக்கப்பட்ட கதைகள்தான் ஆதாரமே ஒழிய வேறில்லை. மற்றும் அப்பெயர்களுக்கும் கதைகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட புராணங்கள் என்பவைகளும் பெரிதும் ஆரிய மூலத்திலிருந்து மொழி பெயர்த்ததாகச் சொல்லப்படுப்பவைகளே யல்லாமல் வேறல்ல.

நிற்க. சைவ சமயம் தென்னாட்டில் பரவி இருக்கின்ற அளவு மற்ற நாட்டில் அதாவது வடநாட்டில் பரவி இருப்பதாக சொல்ல முடியுமா? வட நாடு முழுவதும் ஏறக்குறைய வைணவ மதம் என்றே சொல்ல வேண்டும்.

தென்னாட்டில் மாமிசம் சாப்பிடாதவனுக்கு எப்படி சைவன் என்று சொல்லப்படுகின்றதோ அதுபோல வடநாட்டில் மாம்சம் புசிக்காதவனுக்கு வைஷ்ணவன் என்று சொல்லுவதுண்டு.

தென்னாட்டிலும் சமயத்தை ஏற்றுக் கொண்டவர்கள் சிலர் என்றுதான் சொல்லவேண்டும். அதிலும் சைவ சமயத்தார்களோ சைவ சமயம் இன்னது என்று அறிந்தவர்களோ வெகு சிலர் என்றுதான் சொல்லவேண்டும். பாக்கியுள்ள மக்கள் அதாவது 100 - க்கு 90 - பேர்கள் மாரி, கருப்பன், மாடன், மதுரை வீரன், பேச்சி என்பது போன்ற கடவுள் வணக்கக்காரரும் மற்றும் ஒரு சிலர் சைவ வைணவக் கடவுள்களையும் இக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கின்றவர்களுமே தவிர வேறல்ல.

ஏதோ பழைய காலத்து அரசர்கள் தங்கள் மடமையினால் கட்டி வைத்த கோவில்களும் அவர்கள் விட்ட சொத்துக்களால் நடக்கும் உற்சவங்களும், இப்போது சில கொடுமைக்காரர்கள் மக்களிடத்திலிருந்து அநியாய வழிகளில் கொள்ளையடித்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு கீர்த்திக்கும் தங்களை உயர்த்திக் கொள்வதற்கும் சிலர் தாங்கள் செய்த கொடுமையினால் ஏற்படும் பாவத்தைத் தொலைப்பதற்கும் என்று பழுது பார்ப்பதும் புதுப்பிப்பதும் இல்லாவிட்டால் இவ்வளவு பெருமைகள் கூட சொல்லிக் கொள்ள வகை இருக்காது என்றே சொல்லலாம்.

சமயம் என்பதும், வைணவம் என்பதும், சைவம் என்பதும் என்ன என்று பொதுவாக யோசிக்குமிடத்தில் பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு தங்களை அறியாமல் பார்ப்பனியத்திற்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் உழைக்கும் சாதனங்களா அல்லவா என்பதை நிதானித்து நடுநிலைமையில் இருந்து பார்த்தால் யாருக்கும் விளங்காமல் போகாது.

எனவே இப்படிப்பட்ட சைவத்தைப்பற்றியோ சமயத்தைப் பற்றியோ ஏதாவது எழுத நேரிடுவதால் "நாட்டின் ஷேமத்திற்கோ மக்களின் மோட்சத்திற்கோ" எவ்விதமான ஆபத்துக்கள் எப்படி நேரிட்டு விடும் என்பதைப்பற்றி விருப்பு வெறுப்பின்றி நிதானமாய் யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம். (பெரியார், 'குடி அரசு' 7.10.1928)

# காஞ்சி மூத்த சங்கராச்சாரி கூறுகிறார்: 'ராமன்' நடத்தியது மநுதர்ம ஆட்சி

அயோத்தியில் 'ராமன்' கோயில் கட்ட வேண்டும் என்று பார்ப்பன சக்திகளும், சங்பரிவாரங்களும் பா.ஜ.க. ஆட்சியும், ஏன் துடிக்கின்றன? 'ராமன்' மநுதர்மப்படி ஆட்சி நடத்தியதுதான் இதற்குக் காரணம். இதை இறந்துபோன காஞ்சி மூத்த பார்ப்பன சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதியே கூறியுள்ளதை 'தமிழ் இந்து' நாளேடு அதன் ஆன்மிகப் பகுதியில் ஜூன் 26, 2014இல் வெளியிட்டிருக்கிறது. அந்தப் பகுதி இதோ:

"ராமராஜ்யம் ஏற்பட வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தவரின் வாரிசுகள் இப்போது ஜனநாயகம் சிருஷ்டி செய்து கொண்டிருக்கிறார்கள். ராமர் புதுசாக ராஜநீதி எதுவும் செய்து ராஜ்யபாரம் நடத்தவில்லை. தன் அபிப்பிராயம், தன் கார்யம் என்று சொந்தமாக எதுவும் இல்லாமல் முழுக்க முழுக்க சாஸ்திரத்தைப் பார்த்து, பூர்வீகர்களின் வழியைப் பார்த்து அந்தப்படியே பண்ணினவா ஒருவருண்டு என்றால் அது ராமசந்திர மூர்த்திதான். மநு நாடாண்ட காலம் முதலாக தசரத சக்ரவர்த்தி வரை எந்த தர்மசாஸ்த்ர ஆட்சி முறை நடந்ததோ அதையேதான் ராமரும் பின்பற்றி நடத்திக் காட்டினார்" - என்கிறார், மூத்த சங்கராச்சாரி.

## வினாக்கள்... விடைகள்...!

✦ எந்த அரசாலும் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்திட முடியாது. அதை இந்தப் புதிய அரசும் விரைவில் உணரத் தான் போகிறது.
– **ப. சிதம்பரம்**

அரசு ரகசியங்களையெல்லாம் இப்படி அம்பலப்படுத்தினா அது தேசத் துரோகமாயிடாதா சார்? அடக்கி வாசிங்க!

✦ காங்கிரஸ் அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் அந்த அரசுடனேயே சேர்ந்து வெளியேறிட வேண்டும்.
– **அமைச்சர் வெங்கய்யா நாயுடு**

நியாயமான பேச்சு. விருந்தினர் மாளிகை களை அடுத்து வரும் பயணிகளுக்கும் வழிவிட வேண்டும். ஏதோ விலைக்கு வாங்கின மாதிரி, குத்தகை எடுத்துக்க முடியாது!

✦ முன்னாள் மத்திய அமைச்சர் கபில்சிபல், அரசு வீட்டைக் காலி செய்து, வாடகை வீட்டில் குடியேறினார். மாத வாடகை ரூ.16 இலட்சம். – **செய்தி**

அடேங்கப்பா... இப்படி சொந்தமாக ஒரு வீடுகூட இல்லாத ஏழைப் பங்காளர்கள் காங்கிரசில் அமைச்சர்களாக இருந்திருக் கிறார்கள் என்ற செய்தி புல்லரிக்குது, போங்க!

✦ கங்கையில் முழுக்குப் போட்டால், புற்று நோய் வரும் ஆபத்து.
– **ஆய்வில் தகவல்**

அப்ப, கங்கையை தூய்மைப்படுத்தும் திட்டத்துக்கு 'புற்று நோய் ஒழிப்புத் திட்டம்' என்று பெயர் மாற்றம் செஞ்சிடுங்க.

✦ அரசு திட்டங்கள் மற்றும் சேவைகளை 'மொபைல்' போன் மூலம் வழங்கி சாதனை செய்த இந்திய அரசுக்கு அய்.நா. விருது அறிவிப்பு.
– **'தமிழ் இந்து' செய்தி**

"நீங்கள் தொடர்பு கொள்ள விரும்பும் வாடிக்கையாளர் – எந்த 'பொய்–புரட்டு பிரச்சாரத்தையும்' ஏற்க இயலாத நிலையில் உள்ளார். தயவு செய்து வேறு பொய் எதையாவது கண்டுபிடிக்க வும். அல்லது காத்திருக்க வைக்காமல் ஆளை விடவும்."

✦ ஹாலிவுட் திரைப்பட உலகில் யூதர்கள் தான் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று கூறியதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். யூதர்கள்தான் கடவுளின் முதல் குரலை கேட்டவர்கள்.
– **பிரிட்டிஷ் நடிகர் கேரி ஓல்ட்மேன்**

அந்தக் குரலுக்கு டப்பிங் வாய்ஸ் கொடுத்த ஹாலிவுட் நடிகரும் யூதர் தானா?

✦ மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களின் விருப்பத்துக் கேற்ப ஆளுநர்களை மாற்றவோ நீக்கவோ அரசுக்கு உரிமை கிடையாது.
– **குலாம் நபி ஆசாத்**

ஆமாம்! அவுங்கல்லாம், நம்ம ஊர் அர்ச்சர்கள் போல, அரசியல் சட்டம் எல்லாம் செல்லுபடி யாகாது.

✦ கிரிக்கெட் அணி கேப்டன் தோனியை மகா விஷ்ணுபோல் சித்தரித்து, அவரது கையில் 'ஷூ' இருப்பது போல வெளியான புகைப் படத்துக்கு எதிர்ப்பு. விசுவ இந்து பரிஷத் வழக்கு. – **செய்தி**

பன்றியாக அவதாரம் எடுத்த மகாவிஷ்ணுவையே ஏற்றுக் கொண்டவர்களுக்கு தோனியாக அவதாரம் எடுத்திருப்பதில் தான் அவமானம் வந்துருச்சாக்கும்! அட போங்கப்பா... நீங்களும், உங்க பக்தியும்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 3rd July 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜூலை 10, 2014 | புரட்சி 13 | முழக்கம் 26 | விலை: ரூ.3.00

# கொடைக்கானலில் நடந்த குழந்தைகள் பழகு–மகிழ்வு முகாம்





***தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் சார்பாக 2014 மே மாதம் 15.5.2014 முதல் 19.5.2014 முடிய 5 நாள்கள் கொடைக்கானலில் 8 முதல் 18 வயது குழந்தைகளுக்கான பழகு மகிழ்வு முகாம் நடத்தப்பட்டது. இதில் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 68 குழந்தைகள் கலந்து கொண்டனர். பதினைந்திற்கும் மேற்பட்ட அறிவியல் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு நெறிப்படுத்தினர்.***

15.5.2014 : தொடக்க நாள் நிகழ்வாக முற்பகல் அறிமுக வகுப்பு நடந்தது. குழந்தைகள் தங்களின் சுய விவரங்களையும், திறமைகள், பலம், பலவீனம் ஆகியன குறித்தும் சுவையாக பகிர்ந்து கொண்டனர். இவ்வகுப்பினை நீலாவதி நெறிப்படுத்தினார். பிற்பகல் படைப் பாற்றல் வகுப்பு நடந்தது. பல்வேறு தலைப்புகளில் கதை, கவிதை, நாடகம், பேச்சு, பாடல், ஓவியம், தனி நபர் நடிப்பு ஆகிய திறமைகளை குழந்தைகள் வெளிப்படுத்தினர். வகுப்பறை வன்முறைகள் குறித்தும், எப்படிப்பட்ட வகுப்பறை, எப்படிப்பட்ட ஆசிரியர், தங்களுக்கு வேண்டும் என்பதும் குழந்தைகளால் நடித்துக் காட்டப்பட்டது. மிகுந்த நகைச்சுவை உணர்வுடன் பெரியவர்களின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தும் விதமாகவும் குழந்தைகளின் வெளிப்பாடு நிகழ்ந்தது. இவ்வகுப்பினை ரஞ்சிதா, சிவகாமி வழி நடத்தினர்.

16.5.2014 : இரண்டாம் நாள் குழந்தைகள் 8 முதல் 13 வயது ஒரு பிரிவினராகவும் 14 முதல் 18 வயது முடிய ஒரு பிரிவினராகவும் பிரிக்கப் பட்டு உலகம் தோன்றிய வரலாறு, உயிரினம் தோன்றிய வரலாறு ஆகிய வகுப்புகள் நடந்தன.

சிவகாமி, ஜாக்குலின், ஜஸ்டின் ராஜ், சுப்பிரமணி ஆகியோர் வகுப்புகள் எடுத்தனர். விளக்கப் படங்கள், விவாதங்கள் என வகுப்பு பயனுள்ளதாக அமைந்தது.

பிற்பகல் நகுலன், பிரசாத் ஆகியோரால் “மூடநம்பிக்கைகளில் பில்லி சூனியம்” என்ற தலைப்பில் செய்முறை விளக்கம் நடந்தது. பில்லி சூனியம் எவ்வாறு எடுக்கப்படுகிறது. ஓமகுண்டத்தில் தானாகத் தீ பிடிப்பது எப்படி, செய்வினை வைத்தல் போன்றவற்றை நேரடியாகச் செய்து காட்டினர்.

சுடுகாட்டில் இருந்து எடுத்துவரப்பட்ட மண்டையோட்டினை குழந்தைகள் பயமின்றி கைகளில் எடுத்துப் பார்த்தனர். செய்வினை பற்றிய பயம், பேய், பிசாசு குறித்த பயம் ஆகியவற்றைப் போக்கி அறிவியல் தெளிவை ஏற்படுத்தும் வகுப்பாக இது அமைந்தது.

மாலை வகுப்பு பாலியல் கல்வி குறித்து நீலாவதியும், மனித உரிமைகள் குறித்து பேராசிரியர் சரசுவதியும் நடத்தினர். அடிப்படை உரிமைகள், கல்வி உரிமை, குழந்தைகளுக்கான உரிமைகள் பற்றிய அடிப்

(4 ஆம் பக்கம்)

# சங்கராச்சாரி – சீரடி சாய்பாபா பக்தர்கள் நேரடி மோதல்!

துவாரகா பீட பார்ப்பன சங்கராச்சாரி-சுவருப்பானந்தா சரசுவதி, சீரடி சாய்பாபாவை இந்துக்கள் வழிபடக் கூடாது என்று அதிரடியாக அறிவித்துள்ளார். இதனால், சாய்பாபா பக்தர்கள் கடும் ஆத்திரமடைந்துள்ளனர். சீரடி சாய்பாபாவை ‘இந்துக்கள்’ தங்கள் கடவுளாக நாடு முழுதும் கோயில் கட்டி வழிபடுவதோடு ஏழைகளுக்கு உணவளிப்பது போன்ற சேவைகளையும் செய்து வருகின்றனர். 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சீரடி சாய்பாபா - பிறப்பால் ஒரு முஸ்லீம். ஆனாலும் முஸ்லீம் மதத்தைவிட்டு விலகியவர்; சீரடி சாய்பாபா ஒரு கடவுள் இல்லை என்றும், இந்து கோயில்களில் அவர் படங்களை அகற்ற வேண்டும் என்றும் வாரணாசியில் இந்த சங்கராச்சாரி கூறியவுடன், சங்கராச்சாரி சீடர்கள் வாரணாசி தெருவில் இறங்கி, சாய்பாபாவுக்கு எதிராக முழக்கம் எழுப்பினர். இதற்கு பதிலடியாக சாய்பாபாவை வழிபடும் இந்துக்கள், துவாரகா பீட சங்கராச்சாரி உருவ பொம்மைகளை எரித்தனர். சாய் பாபா பக்தர்கள், சங்கராச்சாரிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர, அதைக் கண்டித்து பயங்கர ஆயுதங்களுடன் திரியும் ‘சாதுக்கள்’ வாரணாசியில் உண்ணாவிரதப் போரட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

காங்கிரஸ் ஆதரவாளரான துவாரகா பீட சங்கராச்சாரி, சாய்பாபா பக்தையான பா.ஜ.க. அமைச்சர் உமாபாரதியை கடுமையாக சாடியுள்ளார். ‘ராமன் கோயில்’ கட்ட வேண்டிய அமைச்சர், முஸ்லீம் பாபாவின் சீடராக இருப்பதா? என்று கேட்கிறார், 90 வயது பார்ப்பன சங்கராச்சாரி. சாய்பாபா பக்தர்களை எதிர்கொள்ள சூலாயதம், ஈட்டியுடன் திரியும் நாகா நிர்வாண சாதுக்களை களத்தில் இறக்கப் போவதாக பாகம்பரி மடத்தின் தலைவரான நதேரந்திர கிரி என்பவர் மிரட்டியிருக்கிறார். சீரடி சாய்பாபாவுக்கு உலகம் முழுதும் பக்தர்கள் உள்ளனர்.

இந்தியாவிலேயே சீரடி சாய்பாபா அறக்கட்டளைக்கு ஏராளமான சொத்துகள், பணம் இருக்கிறது. இந்தியாவிலேயே பணக்கார பக்தி நிறுவனங்களில் 3ஆவது இடத்தில் உள்ளது. சீரடி சாய்பாபாவை முஸ்லீம்கள் வழிபடுவது இல்லை. இந்து பக்தர்கள்தான் அதிகம் வழிபடுகிறார்கள். ஆண்டுதோறும் ‘ராம நவமி’ கொண் டாடப்படும் ஒரே இடம் சீரடிதான், என்கிறார் இதன் அறக்கட்டளை தலைவர் சயிலேஷ் குட்.

“இந்துக்களே ஒன்றுபடுங்கள்” என்று முழக்கமிட்டு வந்தவர்கள், இப்போது தங்களுக்குள்ளே மோதிக் கொள்கிறார்கள். “தர்மத்துக்கு ஆபத்து வரும்போது அவதாரம் எடுத்து வருவேன்” என்று கூறிய “கிருஷ்ண பரமாத்மா” இப்போதாவது வருவாரா?

## முஸ்லீம் பெண்களின் உரிமை குரல்!

முஸ்லீம் பெண்களுக்காக தற்போது பின்பற்றப்பட்டு வரும் மதச் சட்டங்கள் ‘குர்ரானுக்கு’ எதிரானது என்று குரல் கொடுத்திருக்கிறது. இஸ்லாமியர்களுக்கான பெண்கள் அமைப்பு; “பாரதிய முஸ்லீம் மகிலா அண்டோலன்” என்ற அமைப்பைச் சார்ந்த பெண்கள் முஸ்லீம் மதச் சட்டங்களில் கொண்டு வரப்பட வேண்டிய மாற்றங்களுக்கான மசோதா ஒன்றையும் உருவாக்கியுள்ளனர். இதன்படி திருமணம் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும். மூன்று முறை தலாக் கூறி விவாகரத்து செய்யும் முறையை அனுமதிக்கக் கூடாது. விவாகரத்துப் பெற்ற பெண், மீண்டும் அதே கணவரோடு சேர்ந்து வாழ விரும்பினால், அதற்கு முன் நிபந்தனையாக வேறு ஒரு ஆணை திருமணம் செய்து, அவரிடம் விவாகரத்துப் பெற வேண்டும் என்ற ‘ஹலாலா’ முறையை தடை செய்ய வேண்டும் என்று பல திருத்தங்களை கோருகிறது இந்த வரைவு. இந்த வரைவு நகலை சென்னையில் வெளியிட்ட அமைப்பைச் சார்ந்த சக்கிய செர்மன் மற்றும் நூர்ஜஹான் சஃபியா, செய்தியாளர்களிடம் பேசுகையில், “புனித நூலான ‘குர்ரானில்’ கூறப் பட்டுள்ள கருத்துகள் பலவும் திரிக்கப்பட்டுள்ளன என்றார்கள்.

தற்போதுள்ள சட்டப்படி, விவாகரத்துப் பெறும் இஸ்லாமிய பெண்கள், அதற்காக கணவன் வீட்டிலிருந்து எந்த உரிமையும் கோர முடியாது. குழந்தைகளுக்கான பாதுகாப்பையும் கேட்க முடியாது. இதற்கான உரிமைகளை இந்த மசோதா வலியுறுத்துகிறது. மதத்தின் பெயரால் பெண்கள், குழந்தைகள் உரிமைகள் மறுக்கப்படுவதை எதிர்த்து இஸ்லாமிய பெண்களே குரல் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். இஸ்லாமிய மக்களின் சமுதாய அரசியல் உரிமைக்கு குரல் கொடுப்பது என்பது வேறு. அதற்காக பெண்களுக்கு எதிரான பழமையான நடைமுறைகளை ஆதரிக்க முடியாது.

தலையங்கம்

## தேன் கூட்டைக் கலைக்கிறார்கள்!

மோடி பிரதமராக பதவியேற்றதிலிருந்து இந்தி மொழித் திணிப்பில் தீவிரம் காட்டத் தொடங்கிவிட்டது பா.ஜ.க. ஆட்சி. பிரதமர் இந்திமொழியை மட்டுமே தனது பேச்சு மொழியாகப் பயன்படுத்துவார் என்று முதல் அறிவிப்பு வந்தது. அது அவரது உரிமை. ஆனாலும்கூட குஜராத்தை தாய்மொழியாகக் கொண்ட அவர், இந்தியை ஏன் பேச்சு மொழியாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறது.

இரண்டாவதாக, சமூக வலைதளங்களில் மத்திய அரசு அதிகாரிகள் கருத்துக்களை வெளியிடும்போது, இந்தி மொழிக்கே முன்னுரிமை தரவேண்டும் என்று மோடி ஆட்சி அறிவித்தது. இதற்கு கடும் எதிர்ப்புகள் வந்தபோது இந்தி பேசும் மாநிலங்களுக்காக மட்டுமே இந்த அறிவிப்பு என்று சமாதானம் கூறினார்கள். ஆங்கிலத்தின் இணைப்பு மொழிக்கான பயன்பாட்டை, படிப்படியாக அகற்றிட வேண்டும் என்பதே இதற்கான உள்நோக்கம் என்பது எவராலும் புரிந்து கொள்ளக்கூடியதே யாகும்.

இப்போது தமிழ்நாட்டில் ‘தினத்தந்தி’ நாளேட்டில் (8.7.2014) மத்திய இரயில்வே துறை, இந்தி மொழியில் மட்டுமே ஒரு விளம்பரத்தைச் செய்துள்ளது. அந்த விளம்பரம் இரயில்வே துறைக்கானது என்பதை அத்துறைக்கான ‘அடையாள முத்திரை’ என்ற ஒன்றை மட்டும் வைத்துத்தான் புரிந்து கொள்ள முடிகிறது. மற்றபடி, அந்த விளம்பரத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பது தமிழ் வாசகர்களுக்குப் புரியாது. தமிழர்களை எழுதப் படிக்கத் தெரியாத ‘தற்குறிகளாக்கி’ யிருக்கிறது இந்த விளம்பரம். அரசு பணம் செலவிட்டு விளம்பரம் செய்வதற்கான அடிப்படை நோக்கமே, மக்களிடம் அதற்கான செய்திகளை கொண்டு சேர்க்க வேண்டும் என்பதுதான். மக்களுக்கே புரியாத மொழியில் அரசு பொருள் செலவில் விளம்பரங்கள் செய்வது, விளம்பரத்தின் நோக்கத்தையே அர்த்தமற்றதாகி விடுகிறது. இது அரசுத் துறைக்கான விளம்பரம் என்பதைவிட, இந்தி மொழியைத் திணிக்கத் துடிக்கும் ஆட்சியாளர்களின் வெறியையே விளம்பரப்படுத்துகிறது.

இதே நாளேட்டில் இதே நாளில் மத்திய அரசின் வருமானவரித் துறையின் விளம்பரம் ஒன்றும் வந்திருக்கிறது. அந்த விளம்பரத்தை முழுமையாக தமிழிலேயே மத்திய அரசு வெளியிட்டிருக்கிறது. காரணம், இது தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களிடமிருந்து மத்திய அரசு திரட்ட விரும்பும் வரி தொடர்பானது. எனவே, தமிழ் நாட்டிலிருந்து ‘வருமானம்’ என்று வரும்போது சுரண்டுவதற்கு மட்டும் இவர்களுக்கு ‘தமிழ்’ தேவைப்படுகிறது.

இப்படித்தான் தமிழ்நாட்டின் கோயில்களில் ‘ஆண்டவனிடம்’ பூஜை செய்வதற்கு எவருக்குமே புரியாத சமஸ்கிருதத்தை மட்டும் பார்ப்பனர்கள் பயன்படுத்துவார்கள். கேட்டால் அதுதான் ‘தேவ பாஷை’ என்பார்கள். அதே கோயில்களுக்குள் பக்தர்களிடம் பணம் பறிப்பதற்கான அத்தனைப் பிரிவுகளிலும் ‘சமஸ்கிருதத்தில்’ எழுத மாட்டார்கள். தமிழில்தான் எழுதுவார்கள். ‘உண்டியல் இங்கே இருக்கிறது’, ‘முடி காணிக்கை செலுத்துமிடம்’, ‘டோக்கன் வாங்குமிடம்’ இப்படி காசு பறிக்கும் இடத்தில் “தேவபாஷை” வராது; தமிழ் தான் வேண்டும்.

1938ஆம் ஆண்டில், இராஜகோபாலாச்சாரி, தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியபோது, தமிழ்நாட்டில் இந்திக்கான எதிர்ப்பு, பெரியார் தலைமையில் மக்கள் இயக்கமாக உருவெடுத்தது. அதற்கு முன்பாகவே 1929 ஆம் ஆண்டிலேயே வடநாட்டுத் தலைவர்களை சென்னை மாகாணத்துக்கு இந்திப் பிரச்சாரத்துக்காக காங்கிரஸ் பார்ப்பனர்கள் அழைத்து வந்தபோது, ‘இந்தி’யை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் பெரியார். ‘ஹிந்திப் புரட்டு’ என்று ‘குடிஅரசு’ ஏட்டில் (20.1.1929) எழுதி, பார்ப்பன மேலாதிக்கத்தைத் தங்க வைக்கும் சூழ்ச்சி என்று எச்சரித்தார்.

1949இல் தமிழ்நாட்டில், காங்கிரஸ் ஆட்சியில் கல்வி அமைச்சராகவிருந்த அவினாசிலிங்கம் அவர்களால் கட்டாய இந்தித் திணிப்பு ஆணை வந்தபோது மீண்டும் போராட்டம் வெடித்தது. 1950இல் இந்தித் திணிப்பு ஆணை நீக்கப்பட்டது. தொடர்ந்து 1952இல் டில்லியின் இந்தித் திணிப்பை எதிர்த்து, தொடர்வண்டி நிலையங்களில உள்ள பெயர்ப் பலகைகளில் இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தைப் பெரியார் நடத்தினார். தி.மு.க.வும், அந்தப் போராட்டத்தில் இணைந்து நின்றது. அந்தப் போராட்டத்தினால்தான் தொடர்வண்டி நிலையங்களின் பெயர்ப் பலகையில் முதலிடம் பெற்றிருந்த இந்தி நீக்கப்பட்டு, அந்த இடத்தில் தமிழில் எழுதப்பட்டது.

இப்போது, இந்தியாவில் ‘தேசிய மொழி’ என்று எந்த ஒரு மொழியும் கிடையாது. அரசமைப்புச் சட்டத்தின் 17 ஆவது அட்டவணையின்343 முதல் 351 ஆம் விதிகள் ஆட்சி மொழி பற்றிப் பேசுகின்றன. அரசியல் சட்டம் 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 முதல் அமுலுக்கு வந்தது. அதன்படி இந்திதான் ஆட்சி மொழி என்று கூறப்பட்டாலும் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலமே நிர்வாக மொழியாக இருந்த நடைமுறை தொடரும் என்று உறுதியளிக்கப்பட்டது. அரசியல் சட்டப்படி நடைமுறைகள் வகுக்கப்பட்டன. அதன்படி,

குடியரசுத் தலைவர் இரண்டு ஆட்சிமொழிக்கான ஆணையங்களை நியமித்தார். இக்குழுவின் பரிந்துரைகளை பரிசீலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. 1955 ஆம் ஆண்டு பி.ஜி. கெர் தலைமையில் 21 உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் குழு அமைந்தது. மேற்குறிப்பிட்ட ஆணையம் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1963 இல் ஆட்சி மொழிகள் சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டது. ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகப் பயன்படுத்துவதற்கு இந்தச் சட்டம் ஒப்புதல் வழங்கியது.

அதே காலகட்டத்தில் இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் கூடுதல் இணைப்பு மொழியாக இருக்கும் என்று பிரதமர் ஜவஹர்லால் நேரு நாடாளுமன்றத்தில் உறுதிமொழி அளித்தார். 1965இல் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்தது. தொடர்ந்து, முதல்வர் அண்ணா, தமிழ்நாட்டுப் பள்ளிகளில் ‘இந்தி’யை ஒரு பாடமாக கற்பிக்கும் முறைக்கு முற்றுப் புள்ளி வைத்து, இரு மொழிக் கொள்கையை அறிவித்தார். இது, இந்திய தேசியவாதிகளுக்கு இந்திக்கு எதிராக தமிழ்நாடு விடுத்த எச்சரிக்கை.

எந்த ஒரு மொழியையும் எவரும் விரும்பி கற்பது என்பது அவரவர் உரிமை. ஆனால், ஒரு தேசிய இனத்தின் அடையாளமாக அவர்களுக்கு தொடர்பில்லாத ஒரு மொழியைத் திணிக்க முயல்வதை சுயமரியாதையுள்ள எந்த தேசிய இனமும் ஏற்காது. இப்போது, பா.ஜ.க. ஆட்சி தேன் கூட்டைக் கலைக்கத் தொடங்கியுள்ளது.

“சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தக் கதை”யைத் தொடங்குகிறது. நாம் சொல்ல விரும்புவது எல்லாம் இதைத்தான்.

நன்றாக திணியுங்கள்! இந்தத் திணிப்புகள் தீவிரமாகும்போது தான், இந்தியாவிலிருந்து தமிழர்கள் தங்களைத் துண்டித்துக் கொள்ளும் போராட்டமும் தீவிரமாகும். அப்படி ஒரு வாய்ப்பை விரைவுபடுத்த, ‘இந்துத்துவா’ சக்திகளே முடிவு செய்துவிட்டால், நமக்கு வேறு வழிதான் என்ன?

“தமிழ்நாடு தமிழருக்கே” என்ற போர்ச் சங்கை கையில் எடுக்க வேண்டியதுதான்!

## வினாக்கள்... விடைகள்...!

✦ பணியிலிருந்து ஓய்வு பெற்றப் பிறகு, அரசு ஊழியர்கள் மீது கடந்தகால குற்றங்களுக்காக நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது. **– உச்சநீதிமன்றம் தீர்ப்பு**

இதேபோல் பதவியை இழந்த அமைச்சர்கள் மீது ஊழல் குற்றங்களுக்காக நடவடிக்கை எடுக்க முடியாது என்று தீர்ப்பு கூறி விட்டால், இந்தியாவில் அரசியல் சண்டைகள் அனைத்தும் முடிவுக்கு வந்துவிடும்!

✦ அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள் போன்ற முக்கிய பிரமுகர்களான ‘வி.அய்.பி.’ களுக்கு வழங்கப்படும் சிறப்புப் பாதுகாப்பை மத்திய அரசு மறுபரிசீலனை செய்யும். **– உள்துறை அமைச்சகம்.**

அவர்கள் ‘வி.அய்.பி.’க்கள்தான் என்பதற்கு இருந்த ஒரே அடையாளத்தையும் இப்படிப் பறித்தால் எப்படி?

✦ சீன எல்லைப் பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு இராணுவப் பயிற்சியளிக்க மத்திய அரசு திட்டம். **– ‘தினமலர்’ செய்தி**

அதேபோல், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா எல்லைப் பகுதியிலுள்ள மக்களுக்கும் இராணுவப் பயிற்சி வழங்குவது பற்றியும் பரிசிலிப்பது நல்லது!

✦ பேய், பில்லி, சூன்யம் விரட்டுவதாகக் கூறி திருநெல்வேலியில் ஒரு முதியவரின் தலையில் 3 அங்குல ஆழத்துக்கு ஆணி அடித்தார் மந்திரவாதி. **– செய்தி**

தலையில் கத்தி வைத்து மொட்டை அடிக்க அனுமதித்த கடவுள், சுத்தி வைத்து ஆணி அடிக்க அனுமதிக்க மாட்டாரா, என்று நினைத்து விட்டார் போலும்!

✦ ‘பட்ஜெட்’ விவரங்களை அச்சடிப்பதற்கு முன்பு நிதியமைச்சக ஊழியர்கள், அதிகாரிகள், அமைச்சர்களுக்கு சம்பிரதாயப்படி அல்வா தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. **– செய்தி**

அப்பாடா! இதுவரை புரியாமலே இருந்த ‘அல்வா தருவது’ என்ற வார்த்தைக்கான அர்த்தம், இப்போதுதான் புரிந்தது!

✦ நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் முதல் நாளே எதிர் கட்சிகள் அமளியால் ஒத்திவைக்கப்பட்டது. **– செய்தி**

அடுத்து தொடர்ந்து நடத்தவிருக்கும் ஒத்தி வைப்புகளுக்கு ஒத்திகைப் பார்த்திருக்கிறார்கள், மக்கள் பிரதிநிதிகள்! ஜனநாயகத்தை வாழவைக்க வேண்டுமே!

✦ நாடு முழுதும் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 97 லட்சம் பேர் வேலை கேட்டுப் பதிவு செய்துள்ளனர். **– மத்திய அமைச்சர் விஷ்ணு தியோசாய்**

நல்ல சேதி! இப்படியே தொடர்ந்தால், வேலை வாய்ப்பு அலுவகங்கள் பெருகி, அங்கேயாவது வாய்ப்புகள் குவியும் ஒரு பொற்காலம் வரட்டும்!

## கச்சத்தீவுக்கு ஒப்பந்தம் என்று ஒன்று இல்லை

தற்போதைய அரசு ஆவணங்களின்படி, இந்தியா-இலங்கைக்கு இடையில் கச்சத்தீவு ஒப்பந்தம் குறித்து எந்த ஒரு ஒப்பந்தமும் இல்லை. அதே நேரத்தில், இரு நாடுகளுக்கான கடல் நீர் எல்லை தொடர்பாக மட்டும் ஒப்பந்தம் உள்ளது. கோவையைச் சார்ந்த ஒருவர், தகவல் உரிமை சட்டத்தின் கீழ் வெளியுறவு அமைச்சகத்திடமிருந்து பெற்ற பதிலில் இந்த உண்மை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. கடல் நீர் எல்லை தொடர்பான வரையறையிலும், இரு நாடுகளுக்கிடையே எந்தவிதமான அரசு முத்திரையோ நாடாளுமன்ற அனுமதியோ அரசு அதிகாரிகளின் கையெழுத்தோ இல்லை. எனவே வெறும் வெற்றுத் தாளைக் காட்டி ஒப்பந்தம் என்று மத்திய வெளியுறவுத் துறை பார்ப்பன அதிகார வர்க்கம் ஏமாற்றி வருகிறது. அந்த அடிப்படையில்தான் தமிழக மீனவர்களுக்கு கச்சத் தீவில் மீன் பிடிக்கும் உரிமை இல்லை என்று காங்கிரஸ் ஆட்சி, நீதிமன்றத்தில் கூறியது.

இப்போது பா.ஜ.க. ஆட்சியும் இதே கருத்தை சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் உறுதிப்படுத்தியுள்ளது. இப்படித்தான் சட்டப்பூர்வ அங்கீகாரம் ஏதும் இல்லாமல் சி.பி.அய். என்ற புலனாய்வு அமைப்பு இயங்கி வருகிறது என்ற செய்தி சில மாதங்களுக்கு முன் உச்சநீதிமன்றம் வழியாக அம்பலமானது குறிப்பிடத்தக்கது.

## தமிழில் மட்டும் தீர்ப்பு!

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்களிலும் தமிழில் மட்டுமே தீர்ப்புகள் வழங்க வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றக் கிளை வரவற்கத்தக்க ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. 1956 இல் தமிழகத்தின் ஆட்சி மொழி சட்டம் அமுலானது. மாவட்ட நீதிமன்றங்களில், சாட்சி, விசாரணை தமிழில் நடத்தப்பட்டு, தமிழிலே தீர்ப்புகளையும் எழுத வேண்டும் என்று 1976இல் ஆட்சி மொழி சட்டம் திருத்தப்பட்டது.

அதன் பிறகு தமிழ் மொழி தெரியாத நீதிபதிகள், ஆங்கிலத்திலும் தீர்ப்பு எழுதலாம் என்று உயர்நீதிமன்ற பதிவாளர், சுற்றறிக்கை அனுப்பினார். இப்போது தமிழ் தெரியாத நீதிபதிகள், அரசு பணியாளர் நடத்தும் தேர்வாணையம் வழியாக தமிழில் தேர்ச்சிப் பெற்றாக வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. இதேபோல் உயர்நீதிமன்றத்திலும் தமிழ் கோலோச்சும் நிலை அடுத்து வரவேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு.

## ‘முன்னோடி – பின்னோடி’ வாதங்களுக்கு மறுப்பு (3)

# ‘சுயமரியாதை சைவர்’களையும் வசைபாடிய கூட்டம்

**சைவம் பேசிய தமிழறிஞர்கள், புரோகிதர்களை நீக்கக் கோரிய பெரியார் கொள்கைக்கு முன்னோடியாக திகழ்ந்தவர்கள் என்று பெ.மணியரசன் எழுதியதற்கு மறுப்பாக, ‘சைவம்’ மதத்துக்கான கடவுளே பார்ப்பனியத்தைத் தழுவியதாகவே இருப்பதை விளக்கி பெரியார் எழுதிய ‘குடிஅரசு’ தலையங்கத்தையும் அது தொடர்பான சில கருத்துகளையும் கடந்த இதழில் எழுதியிருந்தோம்.**

**மறைமலை அடிகள் போன்ற ‘தனித் தமிழ் இயக்கம்’ நடத்திய சைவர்களுக்கு எதிராக பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளையேற்று அவர் வழி நின்ற சுயமரியாதை ‘சைவர்’கள் இருந்தார்கள். அவர்கள் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் வழியில் புரோகித எதிர்ப்பு, ஜாதி எதிர்ப்பு, பெண்ணடிமை எதிர்ப்புக் கருத்துக்களை ஏற்று பரப்பி வந்தனர். இது எப்போது நடந்தது? தோழர் பெ. மணியரசன் கூறுவதுபோல் பெரியாருக்கு முன்னால் அல்ல; பெரியாருக்குப் பின்னர்தான் என்பது வரலாறு.**

**இது குறித்து சில செய்திகளையும் பார்ப்போம்.**

22.11.1925 அன்று காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் பார்ப்பனர்களின் கூடாரமாகி விட்டது; அதை ஒழிப்பதே இனி என் வேலை என்று கூறி பெரியார் அம் மாநாட்டிலிருந்து வெளியேறினார். அதைத் தொடர்ந்து முழுமையான சுயமரியாதைப் பரப்புரையே அவரது வேலைத் திட்டமானது.

அப்போது பெரியாருடன் பார்ப்பன எதிர்ப்பு, ஜாதி எதிர்ப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு தளங்களில் முழுமையாகவும் பகுதியாகவும் செயல்பட்ட ‘சைவர்கள்’ பலருண்டு; வ.உ.சிதம்பரனார் (வ.உ.சி.), சொ. முருகப்பா, கி.ஆ.பெ.விசுவநாதம், கே.எம்.பால சுப்பிரமணியம், மணி.திருநாவுக்கரசு முதலியார், கா.அப்பா துரை என பலருண்டு.

அவர்களில் வ.உ.சி அவர்கள் 1917 முதலே பார்ப்பனரல்லாத காங்கிரசாரால் நடத்தப்பட்ட சென்னை மாகாண சங்கத்தில் பெரியார், திரு.வி.க, வரதராசுலு நாயுடு ஆகியோரோடு இணைந்து பணியாற்றியவர். காஞ்சிபுரம் மாநாட்டுக்குப் பின்னர் 1925, 1926 ஆண்டுகளில் நீதிக்கட்சி மாநாடு களிலும் கலந்துகொண்டு தனது பார்ப்பனரல்லாதார் ஆதரவுக் கருத்துகளை கூர்மையாக வெளிப் படுத்தியவர்.

சுயமரியாதைப் பிரச்சார இயக்க நூலான “ஞான சூரியன்” என்ற நூலுக்கு அளித்துள்ள அணிந்துரையில் வ.உ.சி. தனது பார்ப்பன புரோகித எதிர்ப்பைக் கடுமையாக பதிவு செய்துள்ளார். “பிராமணப் புரோகிதர்களும், பூசாரிகளும் பிராமணரல்லாதவர்களுடைய பொருள்களைக் கவருவதற்காகத் தொன்று தொட்டுச் செய்து வரும் சூழ்ச்சிகளையும், மோசங்களையும், கொலைகளையும் எடுத்துக்கூறி பிராமணரல்லாதார்கள் இன்னும் பிராமணப் புரோகிதர்களையும், பூசாரிகளையும் விரும்பு கின்றார்களா என அவன் (ஞான சூரியன்) வினவு கின்றான்.

இந்து சமயம் என்பதன் பொய்களையும், புரட்டுகளையும், ஆபாசங்களையும், அச்சமயப் பெயரால் செய்யப்படும் சடங்குகளின் வாயிலாக பிராமணரல்லாதார்கள் தாழ்த்தப்படுவதையும், அக்கொள்ளைகளினின்றும், தாழ்வினின்றும் பிராமணரல்லாதார்கள் தப்புவதற்குரிய அவசியத்தையும், வழிகளையும் அவன் (ஞான சூரியன்) நன்கு விளக்குகின்றான்” என்றெல்லாம் ‘ஞான சூரியன்’ முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் 1927 ஆம் ஆண்டின் இறுதியில் தேவ கோட்டையிலும், காரைக்குடி மாணவர் மன்றத்திலும், பிற இடங்களிலும் ஆற்றிய உரைகள், வ.உ.சி யின் செட்டி நாட்டுச் சொற்பொழிவுகள் எனும் தலைப்பில் சுயமரியாதை இயக்கச் சார்பு ஏடான ‘குமரன்’ இதழில் ஜனவரி முதல் மார்ச் வரை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றில் “மனு நீதி கண்ட சோழனைப் பற்றிக் கூறிய பொழுது, இப்பொழுதிருக்கும் மனுஸ்மிருதியை நடத்திக் காட்டியமைக்காகவே ‘மனு நீதி கண்ட சோழன்’ என்று பெயர் வந்ததென்று பொருள்படும்படியே சேக்கிழார் கூறினாரென்று கூறினார்கள். அவர் அப்பொருட்படும்படி கூறியிருப்பாராயின் அவர் மனுஸ்மிருதியைப் படிக்கவில்லை என்று தான் கூற வேண்டும் .. எந்த நூலானாலும் குற்றமிருக்குமானால் அதனைத் தள்ளத் தயங்கக் கூடாது . பிழையிருக்குமானால் வள்ளுவரல்ல, சிவபெருமானேயாகட்டும் யார் கூறினாலும் தள்ளவேண்டியது தான் . கடவுளே எழுதினார் என்று கூறப்படும் நூலிலும் பிழையிருக்குமானால் அதனையும் தள்ளவேண்டியது தான் . வேதத்தில் பிழைகளிருக்கலாம் திருத்த வேண்டுவது தான். சைவத்திலும் அப்படியே தான். எந்த நூலில் பிழைகள் காணப்படுகின்றனவோ அவைகளைச் சீர்திருத்த வேண்டுவது இன்றியமையாததாகும் என்று வ.உ.சி. பேசியுள்ளார். . (தேவகோட்டை மாணவர் சங்க ஆண்டு விழாச் சொற்பொழிவு குமரன் 26-1-1928)

### ‘கண்டதைப் படிப்பவன்’

.. திருவள்ளுவர் ஓர் கவி, ஒப்பற்ற அறிஞர். நானும் அவரைக் கடவுள் என்றே போற்றுகிறேன். அவர் நூலில் வாளென்றும், வில்லென்றும் வேல் என்றும் இருக்கின்றதேயன்றித் துப்பாக்கியென்றாவது பீரங்கியென்றாவது இல்லை. இப்பொழுது யுத்தத்திற்கு சாதனங்களாக துப்பாக்கியும் பீரங்கியுமே இருக்கின்றன. யுத்தத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் நேரிடின் என் செய்வது. “வள்ளுவர் துப்பாக்கியைப் பற்றியும் பீரங்கியைப் பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை. எனவே அச்சாதனங்களைக் கொண்டு போர் புரிய மாட்டேன். வள்ளுவருக்கென்ன புத்தியில்லையா? அவரைக் காட்டிலும் நாம் என்ன மேதாவிகளாகிவிட்டோம்” என்று ஒருவன் இப்போது கூறிக் கொண்டு இருப்பானானால் அது எவ்வளவு மூடத்தனமென்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள் என்று கூறும் வ.உ.சி., பார்ப்பன புரோகிதர்களுக்கு ‘தட்சணை’ தருவதை நிறுத்த வேண்டும் என்றும் பேசியுள்ளார்.

> *“தென்புலத்தார் கடன் ஒப்புதல்” என்பதற்கு “பிதுர்க்கடன் செய்தல்” என்றே பொருள் வைத்துக்கொள்வோம். அப்பொழுதும் குறிப்பிட்ட வகுப்பார்க்கு வெள்ளி லோட்டா, தங்கத் தட்டு ஆகியவைகள் கொடுக்க வேண்டுமென்று காணப்படவில்லையே சபிண்டி, திதி முதலிய செய்யவேண்டுமென்று சொன்னால், “ஐயா, அது எங்களப்பனுக்குப் போகாது. நாங்கள் இப்பொழுது விழித்துக் கொண்டோம் இனி ஏமாற்ற முடியாது” என்று கூறிவிடுங்கள். கொசு யானையை விழுங்கி விட்டது என்று சொன்னால் இதை நம்ப முடியுமா?*
>
> *நண்பர் தியாகராஜன் செட்டியார், மனைவியுடன் பர்மாவுக்கு சென்று வந்திருக்கிறார். இதற்காக அவரை ஜாதியை விட்டு விலக்க வேண்டுமென்று சில இடங்களில் கூறப்படுகிறதாம். இது எவ்வளவு அறியாமை. மனைவியுடன் கப்பலேறிச் சென்றதற்காக ஒரு வகுப்பாருக்கு இரண்டாயிரம், மூவாயிரம் கொடுத்து பிராயசித்தம் செய்து கொள்வதா? பிராயசித்தமெல்லாம் நமக்குத் தான். அவர்களுக்கு வந்து விட்டால் “வேதப் பிரமாணமிருக்கிறது. அந்த நாயனார் அப்படிச் சொல்லியிருக்கிறார். இந்த நாயனார் இப்படிச் சொல்லியிருக்கிறார்” என்று கூறி விடுவார்கள் . பொதுக் கோயில்களில் அனைவருக்கும் சம உரிமை வேண்டும். லஞ்சம் வாங்காத நீதிபதியிடம் தரகர் வேண்டாம்..”*

- என்று புரோகிதர்களுக்கு எதிராக சாட்டையை சுழற்றுகிறார். வ.உ.சி ஆற்றிய காரைக்குடிச் சொற்பொழிவு ‘குமரன்’ 15-3-1928 இதழில் வெளியாகியுள்ளது.

சுயமரியாதை இயக்கத்தின் குரலாகவே அவரது குரல் ஒலித்தன. ஆனால், பெ. மணியரசனார் உயர்த்திப் பிடிக்கும் முன்னோடி ‘சைவம்’ - இதற்காக வ.உ.சி.யைக் கடுமையாக சாடியது.

எப்படி இந்து கலாச்சாரம், தேவ பாஷை சமஸ்கிருதம் என்பவற்றை பார்ப்பனர்கள் முகமூடிகளாகப் பயன்படுத்துகிறார்களோ, அப்படித்தான் தமிழ்ப் பண்பாடு, தனித்தமிழ் என்பதும் சைவர்களுக்கான முகமூடியாகவே பயன்படுத்தப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சைவர்கள் பார்ப்பனர்களை எதிர்த்தார்கள் என்பது உண்மை தான்; பார்ப்பனர் ஆதிக்கத்தை அவர்கள் எதிர்த்தார்களா என்றால் அதுதான் இல்லை. பார்ப்பனர்கள் இடத்தில் சைவர்கள் உட்கார்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் பார்ப்பனர்களை எதிர்த்தார்கள்.

வ.உ.சி.யின் கருத்துகளை கடுமையாக சாடி, ‘அரங்கின்றி வட்டாடல்’ என்ற தலைப்பில் பொ.முத்தையா பிள்ளை என்பவர் சைவ ஏடான ‘சிவநேசன்’ ஏட்டில் கட்டுரை எழுதினார்.

“முன்னோடி” சைவக் கூட்டத்தை வ.உ.சி.யின் இந்த ‘சுயமரியாதை முழக்கம்’ ஆத்திரத்தின் விளிம்புக்குக் கொண்டு போய் நிறுத்தியது.

வ..உ.சி. பேசியது முழுமையான சுயமரியாதை இயக்கத்தின் கருத்து என்பதால் உடனே ‘குடிஅரசு’ ஏட்டில் மறைமலையடிகள் தனது மகள் திருமணத்தைப் பார்ப்பன புரோகிதர் வைத்து நடத்தியதைக் கண்டித்து எழுதியதுதான் - அந்த மறுப்புக் கட்டுரையாளருக்கு (முத்தையா பிள்ளைக்கு) நினைவுக்கு வந்து விட்டது. “நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே” என்று ‘குடிஅரசு’ வெளியிட்ட தலைப்பை நினைவுகூர்ந்து, நக்கீரர் முழுமையான அறிவற்றவர் என்றும் “சிவபெருமானை” எதிர்த்ததால் கடும் துன்பத்தை அனுபவித்தவர் என்றும் நக்கீரனையே சாடுகிறார்.

இதோ பொ. முத்தையாபிள்ளை எழுதியது:

“இவர்கள் அனைவரும் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமேயென்று நக்கீரர் கூறியதை அடிக்கடி எடுத்துக் கூறுகின்றனர். கல்வி நிரம்பாமையால் நக்கீரர் அங்ஙனங் கூறினாரென்பதையும் (அப்படி) கூறியதால், அவரது துன்பத்தையும் சிறிதும் எண்ணினார்களில்லை” என்கிறார். அத்துடன் முடியவில்லை. வ.உ.சி. மீது அவர்கள் கோபம், இன்னும் மேலேபோய் பிரிட்டிஷாரை எதிர்த்து, வ.உ.சி. ‘சுதேசி’ கப்பல் விட்டதையே குறை கூறுகிறார்.

“பிடிவாதத்தால் கப்பல் விடப்போய் அதனால் கிடைத்த தண்டனையிலிருந்து பாடம் கற்காதவர்; சர்வ வல்லமைமிக்க பிரிட்டிஷாரின் கட்டளையையே மதிக்காதவர். அதேபோல்தான், கடவுள் கட்டளையானாலும் எதிர்க்க வேண்டும் என்று பேசுகிறார். இதற்கான துன்பத்தை அவர் அனுபவிப்பார்” என்று ‘சாபமிட்டு’ அச்சுறுத்துகிறார் - இதோ அவரது கட்டுரையின் மற்றொரு பகுதி:

“இவர்கள் சுதேசிக் கலகத்தின்போது தூத்துக்குடியில் தனக்குத் தோன்றிய யுத்தியே சாலச் சிறந்ததெனக் கூறி ஆரவாரஞ் செய்து, அதனால் தானடைந்த பயனையும் மறந்து, உலகத்துள் ஒரு பகுதியிலும் அரசரையும் அவர் கட்டளையையும் மதியாமையல், சில நாள் மிகக் கடுந்துன்பம் அனுபவித்தவாறுபோல, சர்வலோக நாடகராகிய கடவுளையும், அவர் கட்டளையையும் மதிக்கவில்லையாயின் நீண்டநாள் ஆற்றொணாத் துன்பத்தை யனுபவித்து வருந்துவார் என்பதையும் மறந்தமை வருந்தத்தக்கது”.

‘புரோகித விலக்கு’க்கு முன்னோடியாக விளங்கியவர்கள் கதை இதுதான் மறைமலையடிகள் கூட்டம் - புரோகிதர் விலக்கு எதையும் செய்யவில்லை. தங்கள் வீட்டுத் திரு மணத்துக்கே புரோகிதர்களையே அழைத்தார்கள். அதற்குப் பிறகு நடந்த கலந்துரையாடலிலும், எந்த ஒரு முடிவுக்கும் வர மறுத்தார்கள்.

அதே நேரத்தில் 1926இல் ‘புரோகிதர் நீக்கம்’ என்ற முழக்கத்தோடு தொடங்கிய சுயமரியாதை இயக்கம், வடமொழி நீக்கம், நகை ஆடம்பரங்கள் நீக்கம், பட்டாடைகள் நீக்கம், அறிவுக்குப் பொருந்தாத சடங்குகள் நீக்கம், பெண்ணடிமை நீக்கம் என்று தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் முன்னேறிக் கொண்டே இருந்தது.

(அடுத்த இதழில்)

DATE OF PUBLICATION 09.07.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பிரிய மனமின்றி பிரிந்துச் சென்ற குழந்தைகள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையான செய்திகளைக் குழந்தைகள் தெரிந்து கொள்ளும் வகுப்பாக இது இருந்தது. பின்னர் து.சோ.பிரபாகரின் ‘அச்சம் தவிர்’ குறும் படமும், பூங்குழலியின் ‘தீ வரைவு’ ஆவணப்படமும் திரையிடப்பட்டது.

17.05.2014 : பாலின சமத்துவம் குறித்து பூங்குழலி, ஜஸ்டின்ராஜ் ஆகியோர் வகுப்புகளை நடத்தினர். ஆண்களும் பெண்களும் சமூகத்தில் வேறுவேறான நிலைமைகளில் வைக்கப்பட்டிருப்பதையும், சமத்துவ சமூகம் படைப்பதற்கு நாம் செய்ய வேண்டிய வேலைகளையும் பற்றிய விவாதமாக இவ்வகுப்புகள் நடந்தன. 8 முதல் 13 வயது குழந்தைகள் குழுக்களாக பிரிக்கப்பட்டு, செய்தித் தாள்களில் உருவங்கள் செய்து தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தினர்.

முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4 மணி முடிய கலிலியோ அறிவியல் மையத்தைச் சார்ந்த சத்யமாணிக்கம், தேவி ஆகியோர் கோளரங்கம் அமைத்து நிகழ்ச்சி நடத்தினர். இதில் கோளரங்கம் அமைக்கப்பட்டு, ‘நட்சத்திரப் பயணம்’ என்ற தலைப்பில் உலகம் உருவான விதம் பற்றிய காட்சிகள் காட்டப் பட்டன. குட்டி ராக்கெட் மாதிரி வடிவம் குழந்தைகளால் தயாரிக்கப்பட்டது. கோளரங்கத்தை நேரில் சென்று பார்க்க முடியாத மாணவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

மாலை வகுப்பில் பாலியல் கல்வி வகுப்பில் மறுத்தல் திறன், உடலமைப்பு முதலியன குறித்த விளக்கங்கள் ஜவகர், நீலாவதி, பூங்குழலி ஆகியோரால் விளக்கப்பட்டது.

7 மணி முதல் 8 மணி முடிய மூட நம்பிக்கைகள் என்ற தலைப்பில் சிவகுமார், வீரன் ஆகியோர் வகுப்புகளை எடுத்தனர். குழந்தைகளைக் குழுக் களாகப் பிரித்து மூடநம்பிக்கைகளைப் பட்டியலிடச் செய்து அவற்றைப் பற்றிய விவாதம் நடந்தது. அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் விதமாக இவ் வகுப்பு அமைந்தது. 14 முதல் 18 வயதிலானவர் களுக்கு இரவு உணவிற்குப் பின்னரும் இவ்வகுப்பு சுவையான விவாதங்களுடன் வீரனால் நடத்தப் பட்டது.

18.5.2014 : நான்காம் நாள் சுற்றுச் சூழல் வகுப்பு நடந்தது. வகுப்பறையில் உட்கார்ந்து சுற்றுச் சூழலைக் கற்காமல் நேரடியாகப் பார்த்து கற்கும் பொருட்டு குழந்தைகள் பேரீஜ்ஜம் ஏரிப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சுற்றுச் சூழலைப் பற்றிய வகுப்பு பாரதிதாசன், பிரவீன்குமார் ஆகியோரால் நடத்தப் பட்டது.

பாரதிதாசன் - சூழலியலுக்கும் உயிரினங் களுக்கும் உள்ள தொடர்பு குறித்தும், நீர் ஆதாரங்களின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார். பிரவீன்குமார், வௌவால்களின் வகைகள், அவற்றின் வாழ்க்கை முறை, அவற்றை காக்க வேண்டியதன் தேவை குறித்தும் விளக்கினர்.

கோவையிலிருந்து வந்து முகாமில் கலந்து கொண்ட தமிழீழம், ஓவியா ஆகியோர் பாம்பு களுடன் எவ்வாறு பழக வேண்டுமென்பதையும் விளக்கினார். பின்னர் கொடைக்கானல் பூங்காவிற்குச் சென்று பல்வேறு மலர்களையும், இயற்கைக் காட்சிகளையும் கண்டு களித்தனர்.

19.5.2014 : இறுதி நாளான திங்கள் கிழமை காலை முதல் வகுப்பு உணவு முறைகள், சாப்பிட வேண்டிய உணவுகள், தவிர்க்கப்பட வேண்டிய உணவுகள் முதலியவை குறித்து செயல்பாடுகள் வடிவில் கல்பனா ஒருங்கிணைத்தார்.

பின்னர் முகாம் குறித்த நிறைகுறைகள், குழந்தைகள் கற்றுக்கொண்ட செய்திகள், மாற்றப்பட வேண்டியவைகள் என முழுமை யான பின்னூட்டங்கள் குழந்தைகளால் வழங்கப்பட்டு முகாம் நிறைவு பெற்றது.

முகாம் நடைபெற்ற எல்லா நாள்களும் குடியரசு, பிரவீன் ஆகிய விளையாட்டு ஆசிரியர்கள் காலை, மாலை வேளைகளில் உடற்பயிற்சி விளையாட்டுகளை சிறப்பாக நடத்தினர். சிவிச் சக்ரவர்த்தி என்ற 14 வயது மாணவர் ஸ்கேட்டிங் பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தார்.

முகாம் நடந்த நாள்களில் ஒருங்கிணைப்புப் பணிகளை தமிழ்ச்செல்வனும், முகாம் செம்மையாக நடைபெறத் தேவையான அனைத்து உதவிகளையும் மணிகண்டன், இராவணன், தாமரைக்கண்ணன், பாலு, அவினாசி ஆகியோர் செய்து கொடுத்தனர். குழந்தைகளின் உடல்நலம் பேண ஓமியோபதி மருந்துகளை திருப்பூர் மருத்துவர் திருவேங்கடம் கொடுத்துதவினார்.

பல்வேறு தோழர்களின் பொருளாதார உதவி யாலும், ஆலோசனைகளாலும், பெற்றோர்கள் ஒத்துழைப்பினாலும் ஒரு இனிய முகாமாக இது நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது. முகாம் முடிந்து பேருந்தில் ஏறும்போது குழந்தைகள் ஒருவரை யொருவர் பிரிய மனமின்றி அழுதுகொண்டே அடுத்த குழந்தைகள் பழகு மகிழ்வு முகாமில் சந்திப்போம் என்ற நம்பிக்கையுடன் விடை பெற்றனர்.

**செய்தி : ஆசிரியர் சிவகாமி**

# கழகப் பரப்புரைக்கு ஈரோடு மாவட்டக் கழகம் ஊர்தி வாங்கியது



கழகத்தின் பரப்புரைக்கு ஈரோடு மாவட்டக் கழகம் மற்றொரு ஊர்தியை வழங்கியுள்ளது. இது கழகத்துக்கான இரண்டாவது ஊர்தி, புதிய ஊர்தியாகும். இது குறித்து ஈரோடு மண்டல செயலாளர் இரா. இளங்கோவன் தந்துள்ள செய்தி:

“நமது பிரச்சார உத்திகளை இன்றைய காலத்திற்குகேற்ப மாற்றி அமைத்திட வேண்டிய அவசியமான சூழலில் உள்ளோம். ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்து நடத்திட வேண்டுமானால் குறைந்தது ரூ.20,000/- வரை தற்போது செலவா கின்றது. நமது தோழர்கள் ஒரு பொதுக் கூட்டம் நடத்தினால் மீண்டும் அடுத்தக் கூட்டம் நடத்துவதற்கு 6 மாதம் அல்லது ஒரு வருடம் ஆகின்றது. தோழர்களும் பொருளாதாரப் பற்றாக்குறையால் சோர்ந்து போகின்றனர். வெறுமனே பொதுக் கூட்டம் போட்டு ஒலி பெருக்கி மூலம் மணிக்கணக்கில் பேசினாலும் பொது மக்கள் விரும்பி அக் கூட்டத்தை முழுமையாகக் கேட்பதில்லை.

ஆகவே, நமது பிரச்சாரங்களை வீடியோவாக, படங்கள் மூலமாக, சாதி ஒழிப்பு, உலகம் தோன்றிய வரலாறு, உயிர்கள் உருவான வரலாறு, மூடநம்பிக்கை ஒழிப்புப் போன்ற வற்றின் செய்திகளை படக் காட்சி களாக குறும்படங்கள் மூலமாக புரொஜெக்டர் வைத்து திரைப் படங்களாக ஒளிபரப்பும்போது பொது மக்களை வெகுவாகத் திரட்டவும், செய்திகளை அனைவரும் வெகுவாக உள்வாங்கும் நிலையினை உருவாக்கவும் முடியும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், பிரச்சார வாகனம் மூலமாக இந்த ஏற்பாடுகள் அனைத்தும் உள்ள வகையில் தினம் ஒரு ஊரில் பிரச்சாரம் செய்வது வாய்ப்பாக இருக்கும்.

அந்த நோக்கத்தோடு, ஈரோடு மாவட்டக் கழகத்தின் சார்பாக தோழர்கள் அனைவரும் சேர்ந்து கலந்து பேசி அனைவரின் ஒருமித்த கருத்தாக தற்போது நன்கொடை மூலம் ரூ.5,00,000/- (ஐந்து இலட்சம்)க்கு டெம்போ டிராவலர் வாகனம் வாங்கி அதில் ஒலி பெருக்கி, புரொஜெக்டர், திரை, புத்தகங்கள், ஜெனரேட்டர் அனைத்தும் உள்ள வகையில் பிரச்சார வாகனம் தயாராகிக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் சேர்ந்து மொத்தம் ரூ.7,00,000/- (சுமார் ஏழு இலட்சம்) செலவில் இந்த பரப்புரை வாகனம் தயார் படுத்தப்பட்டுள்ளது)

இதன் கணக்கு வழக்குகள் அனைத்தும் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்திலும், காலம் முழுவதும் இந்தப் பணி எந்த தடையுமின்றி தொடர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும், “கோபிசெட்டிபாளையம் பகுத்தறி வாளர் சங்கம்” என்ற பெயரில் ஒரு அறக்கட்டளை உருவாக்கி அதன் மூலம் நமது கழகத்தின் கொள்கைகளை, கோட்பாடுகளை விளக்கவும், பரப்பவும் இந்தப் பணிகளை துவக்கியுள்ளோம்.

ஈரோடு மாவட்டம் முழுவதும் முதற் கட்டமாக இந்த பிரச்சார யுக்தியின் மூலம் பல புதிய கிளைகளை உருவாக்கிட ஏராளமான புதிய தோழர்களை உருவாக்கிட உறுதி எடுத்து களத்தில் இறங்கி உள்ளோம். பின்னர் அனைத்து மாவட்டங்களிலும் இதன் அடிப்படையில் தோழர்களை உருவாக்கி, ‘திராவிடர் விடுதலைக் கழகத்தை’ பெரியார் இயக்கத்தின் கோட்டையாக மாற்றிட, பெரியார் காண விரும்பிய சாதியற்ற, சமத்துவ, சமதர்ம உலகு படைத்திட எங்கள் அனைவரின் முயற்சியின் முதல் படிக்கட்டு இது.”

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

**போராட்டம்: தேதி மாற்றம்**

சென்னையில் ஜூலை 10 ஆம் தேதி நடக்க விருந்த தேர்வாணைய முற்றுகைப் போராட்டம் ஜூலை 17 அன்று தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

– **போராட்டக் குழு**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 10th July 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜூலை 17, 2014 | புரட்சி 13 | முழக்கம் 27 | விலை: ரூ.3.00


## கடவுள்–மத மறுப்புக் கொள்கைகளுடன்

# நூறு ஆண்டைக் கடந்து வாழும் பெரியார் தொண்டருக்கு பாராட்டு விழா

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பாராட்டுரை



***திராவிடர் விடுதலைக் கழகத்தின் சேதுபாவாசத்திரம் ஒன்றிய அமைப்பின் தலைவர் அழகியநாயகபுரம் ப.அ. வைத்தியலிங்கம், அவர் நூறு வயதை நிறைவு செய்துள்ளார். அய்யா வைத்தியலிங்கம் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் பங்கேற்று, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை:***

நூற்றாண்டு நிறைவு விழா காணும் விழா நாயகர், திராவிடர் விடுதலைக் கழகத்தின் சேதுபாவா சத்திரம் ஒன்றியத் தலைவர் அய்யா அழகிய நாயகிபுரம் ப.அ.வைத்திய லிங்கம் அவர்களே! அவரது வாழ்விணையர் காசியம்மாள் அவர்களே! பூரிப்போடும் பெருமிதத்தோடும் இவர்களுடைய நூற்றாண்டு விழாவை நடத்திக் கொண்டிருக்கும் அன்பிற்குரிய அம்மா மேகலை அவர்களே! இளையரசி அவர்களே! கோமதி அவர்களே! அவரது அன்பு மகன் கலைநேசன் அவர்களே! அவர்கள் குடும்பத்தார்களே! இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிற உறவினர்களே! நண்பர்களே! தோழர்களே! உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நாம் பெருமிதத்தோடு கலந்து கொண்டிருப்பதற்கான காரணத்தை பலரும் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, பெரியார் இயக்கத்தினர் - பெரியாருடைய கொள்கையை ஏற்றுக்கொண்ட ஒருவர், கடவுள் நம்பிக்கையை புறம் தள்ளிய ஒருவர், கடவுள் நம்பிக்கை என்பது காலத்தை நீட்டிப்பதற்கு - வாழ்நாளை நீட்டிப்பதற்கு காரணமான ஒன்று அல்ல என்பதை மெய்ப்பித்து காண்பித்துள்ளார் என்று மகிழ்ச்சி கொண்டிருக்கலாம். அவர்களுடைய பிள்ளைகள், பெற்றோருடைய நீண்ட வாழ்வினை பற்றிப் பெருமைப்படுவார்கள். அவரோடு வாழ்ந்து இப்பகுதியில் இருக்கிறவர்கள் நம் பகுதியில் ஒருவர் இப்படி என்ற மகிழ்ச்சி இருக்கும். இதை எல்லாம் இந்த விழாவில் காணமுடிந்தது. இந்த நிலையில் பெரியாரியல் இயக்கத்துக்காரனாக நான் என் மனதில் பட்டதை சிலவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

வழக்கமாக பெரியார் இயக்கங்களில், குறிப்பாக இப்பொழுது எங்களுடைய திராவிடர் விடுதலைக் கழகத்தில், மேடைகளில் சால்வை போடுவதை ஏற்றுக் கொள்வதில்லை; வேண்டாம் என்று விட்டு விட்டோம். அது ஒரு சடங்காகிப் போய் விட்டது. துண்டு, சால்வை அணிவிக்கும் முறை எப்படித் தோன்றியது என்பதை எங்களுடைய பரப்புரை செயலாளர் பால்பிரபாகரன் சொன்னார். கானாடுகாத்தானில் ஒரு திருமண விழாவில், பெரிய நாதசுர இசைக் கலைஞர் மதுரை சிவக்கொழுந்து நாதசுரம் வாசித்துக்கொண்டு வருகிற போது, தோளிலே துடைப்பதற்கு போட்டிருந்த சிறு துணியை (அங்கவஸ்திரத்தை இடுப்பில் தான் கட்டியிருந்தார்) எடுத்துவிட்டுத் தான் அவர் வாசிக்க வேண்டும் என்று சொன்னபோது “கஞ்சன்” பெரியார், “அவர்கள் வேண்டாம் என்று சொன்னால் வரச்சொல், பணத்தை நாம் கொடுக்கலாம்” என்று சொல்லியிருக்கிறார். (அதுவும் எச்சரிக்கையாக சொல்லியிருக்கிறார்) வை.சு.சண்முகம் என்கிற மிகப் பெரிய பணக்காரரும் பெரியார் அருகில் இருந்திருக்கிறார். அழைத்து வாங்க, சண்முகம் என்ன கொடுக்காமலா போய்விடுவார் என்று சொல்லியிருக்கிறார். (பெரியார், தான் கொடுக்கிறேன் என்று சொல்லவில்லை) (சிரிப்பு.)

அப்படித் தான் முதலில் தோளில் துண்டு போடுகிற பழக்கம் தோன்றியது. பெரியார் இயக்கத்தில் மேடையில் மரியாதை செய்யப்படுகிறது என்று சொல்லி, துண்டு போடும் வழக்கம் தொடங்கியது. அது பெருமைக்குரியதாக பார்க்கப்பட்டது. தொடக்கத்தில் நம் எல்லோருடைய துண்டும் இடுப்பில் தான் இருந்தது. அக்கிரகாரத்திற்கு போகிற போது பெரிய ஜாதிக்காரன் துண்டும் இடுப்பில்தான் இருந்தது. தன்னை விட கீழ் ஜாதிக்காரன் தன் வீதிக்கு வருகிற போது துண்டை இடுப்பிலே கட்டிக்கொண்டு வா என்று அக்கிரகாரத்தில் இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு போனவன் சொன்னான். பிறகு அந்த துண்டு கக்கத்திற்கு வருவதற்கே ஒரு நூற்றாண்டு கடந்திருக்கும். பிறகு கக்கத்தில் இருந்த துண்டு தோளில் ஏறுவதற்கு பெரியாரின் சுயமரியாதை

(2 ஆம் பக்கம்)

## வினாக்கள்... விடைகள்...!

+ நாட்டில் நிதிநிலை மோசமாகி விட்டது; வரி விதிப்பின் மூலம் தான் ஓரளவு சரி செய்ய முடியும். **– நிதியமைச்சர் அருண் ஜெட்லி**

வணிகவரி, வருமான வரி அலுவலகங்களைப்போல் “மோசமான நிதிநிலையை சரிப்படுத்தும் வரி” அலுவலகங்களையும் நிரந்தரமாக தொடங்கிடுங்க...!

+ குற்ற வழக்குகளில் ஆளுநர்களை விசாரிக்கும் உரிமை நீதிமன்றங்களுக்குக் கிடையாது. **– ஆளுநர் ஷீலா தீட்சத்**

ஏன், சுற்றி வளைச்சுப் பேசுறீங்க மேடம்... செய்த ஊழல்களுக்கு வழங்கப்பட்ட கவுரவம்தான் கவர்னர் பதவின்னு போட்டு உடைக்க வேண்டியதுதானே?

+ நாடாளுமன்றத்தில் விலைவாசி உயர்வு பற்றி நடந்த விவாதத்தின்போது ராகுல் காந்தி தூங்கியதாக பா.ஜ.க. புகார். **– செய்தி**

கூச்சல், குழப்பம் இல்லாம அமைதியாக தூங்குவதற்குக் கூட நாடாளுமன்றத்தில் ‘ஜன நாயகத்துக்கு’ நேரம் கிடைக்குதே; அதுக்காக பெருமைப் படுங்க...

+ போலி என் கவுன்டர் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள அமித் ஷாவுக்கு பா.ஜ.க. தலைவர் பதவி. **–செய்தி**

அதுக்காக உண்மையான என் கவுன்டர்களை நடத்தாமல் இருந்தால் சரி.

+ இந்து மக்கள் கட்சியினர் இந்து தர்மத்தின்படி வேல், பிச்சுவா கத்தி போன்ற ஆயுதங்களை வைத்துக் கொள்ள வேண்டும். **– அர்ஜுன் சம்பத்**

ஆமாம்! இனியும் நாம் வணங்கும் கடவுள்கள் நம்மைக் காப்பாற்ற வருவார் என்று எவரும் கற்பனையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்.

+ காந்தி கொலை வழக்கு தொடர்பான ஆவணங்கள் அழிப்பு; மோடி மீது எதிர்க் கட்சிகள் புகார். **– செய்தி**

ஆவணங்கள் அழிந்தாலும், ஆவணங்களின் ஆன்மாவை அழிக்க முடியாது என்ற பகவான் கிருஷ்ணனின் கீதை உபதேசத்தைத்தான் மோடி செயல்படுத்துகிறார், புரியாமப் பேசாதீங்க!

+ 1939இல் மீனாட்சியம்மன் கோயிலில் தாழ்த்தப்பட்டோர் ஆலயப் பிரவேசத்துக்கு துணை நின்றவர், முத்துராமலிங்க தேவர். **– தேவர் பேரவை அறிக்கை**

அன்றைக்கே தேவர் காட்டிய அந்த நல்ல வழியை இன்றைக்கு தொடரக் கூடாதா?

***தோழர் பெ. மணியரசனுக்கு மறுப்பு : கட்டுரைத் தொடர் அடுத்த இதழில்***

தலையங்கம்

## தனியார் மயமாகும் தொடர்வண்டித் துறை!

உலகின் பொதுத் துறை நிறுவனங்களிலேயே மிகப் பெரியது இந்திய தொடர்வண்டித் துறை. ஒவ்வொரு நாளும் 2 கோடியே 30 இலட்சம் மக்கள் பயணிக்கும் இந்தத் துறையின் அடிப்படை நோக்கமே, ஏழை எளிய மக்களுக்கான சேவை என்பதுதான். ஆனால், இந்த அடிப்படை நோக்கத்தையே மாற்றி வசதிப் படைத்த பணக்காரர்களுக்கும், இந்தி பேசும் மாநிலங்களுக்குமான துறையாக (Pro Ritch-Pro Hindi) மாற்றுவதையே நோக்கமாகக் கொண்டு மோடி ஆட்சியின் தொடர்வண்டித் துறைக்கான நிதிநிலை அறக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு ஒரு சில நாள்களுக்கு முன்பு பயணிகள் கட்டணத்தில் 14.2 சதவீதமும், சரக்குக் கட்டணத்தில் 6.5 சதவீதமும் உயர்த்திவிட்டார்கள். இப்போது பயணிகள் கட்டணத்தை அவ்வப்போது உயர்ந்து கொண்டிருக்கும் எரிபொருள் விலையோடு இணைத்து விட்டார்கள். இனி, எரிபொருள் விலை உயரும் போதெல்லாம் பயணிகள் கட்டணங்களும் உயரும்.

“உலகம் கடவுளுக்குக் கட்டுப்பட்டது. கடவுள் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவர். மந்திரம் ‘பிராமணர்’ களுக்குக் கட்டுப்பட்டது” என்ற ‘வேத’ சுலோகத்தைப்போல் “கட்டண உயர்வு, எரிபொருள் விலைக்குக் கட்டுப்பட்டது; எரிபொருள் விலை உயர்வு, பன்னாட்டுச் சந்தைக்குக் கட்டுப்பட்டது; பன்னாட்டு சுரண்டலுக்கு மக்கள் கட்டுப்பட்டவர்கள்” என்ற நிலையை உருவாக்கிவிட்டார்கள்.

தொடர்வண்டி நிலையங்களில் பிளாட்பாரங்களில் ‘கையால் மலம்’ எடுக்கும் இழிவுக்கு இன்னும் முற்றுப்புள்ளி வைக்கவில்லை. ஆனால் 65 ஆயிரம் கோடி செலவில் புல்லட் ரயில்களை அறிமுகப்படுத்தப் போகிறார்களாம். துறையில் காலியாக உள்ள 3 இலட்சம் காலிப் பணியிடங்களைப் பூர்த்தி செய்வது குறித்து எந்த அறிவிப்பும் இல்லை. அதில் பெரும்பான்மைப் பணியிடங்கள் பாது காப்புத் துறை சார்ந்தவை என்று கூறப்படுகிறது. ஆனால், பயணிகள் பாதுகாப்புக் குறித்து அறிக்கை மிகவும் கவலைப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகாலங்களில் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் ரூ.60,000 கோடி மதிப்பீட்டில், 99 புதிய இரயில் பாதைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டாலும், ஒரே ஒரு இரயில் பாதைதான் இன்றுவரை நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற அதிர்ச்சியான தகவலை இந்த அறிக்கை அம்பலப்படுத்தியிருக்கிறது. நியாயம் தான்!

ஆனால், கடந்த காலங்களில் இப்படி கிடப்பில் போட்ட திட்டங்களை அமுல்படுத்துவதற்கான, எந்த அறிவிப்பும் அறிக்கையில் இல்லாமல் போனது ஏன்? அறிவிக்கப்பட்டுள்ள 58 புதிய தொடர்வண்டிகளில் 5 தொடர்வண்டிகள் மட்டும் தமிழ் நாட்டின் வழியாகக் கடந்து செல்லும்; அவ்வளவுதான்! இதில் 3 தொடர்வண்டிகள் வட நாட்டிலிருந்து வரும் வழியில் சென்னையை யும், ஒரு தொடர் வண்டி மதுரை, ஒசூரையும் கடந்து செல்கின்றன. மற்றபடி, தமிழ்நாட்டுக்கு பட்டை நாமம்! நவீன வசதிகள், கூடுதல் வேகம், சுகாதாரமான உணவு என்றெல்லாம் நிதிநிலை அறிக்கை கூறுவது மகிழ்ச்சிக்கும் வரவேற்புக்கும் உரியதுதான். ஆனால், இந்த வசதிகளுக்கு சாமான்ய மக்களை பலி கடாவாக்குவது நியாயமா? அது பார்ப்பனியப் பார்வை அல்லவா?

அன்னிய நேரடி முதலீட்டை எதிர்த்து தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் முழங்கியவர்கள் இப்போது தொடர் வண்டித் துறையில் அதற்கு கதவு திறந்துவிட்டார்கள். ‘அரசு–தனியார்–பொதுமக்கள்’ என்ற மறைமுக தனியார் திட்டத்தையும் (PPP) திணித்து விட்டார்கள். ஆக, தொடர்வண்டித் துறையை தனியார் மயமாக்கிட மோடி ஆட்சி முடிவு செய்துவிட்டது.

சாமான்ய மக்களுக்கான சேவைத் துறையை வணிகத் துறையாக மாற்றி, வசதிப் படைத்தவர்களுக்கான நலன்களை மட்டுமே நோக்கமாகக் கொண்டதே தனது தொடர்வண்டித் துறைக்கான கொள்கையாக இந்துத்துவ–பார்ப்பன சக்திகள் பிரகடனப்படுத்தி யிருக்கின்றன. இந்துக்களுக்கான உரிமைகள் என்று பேசிக் கொண்டே பார்ப்பன மேலாதிக்கத்துக்கு சேவை செய்யும் அதே அணுகுமுறையைத்தான் அரசுக்கான திட்டங்களிலும் நுழைக்கத் துடிக்கிறார்கள்.

இந்திய மக்கள் அனைவருமே ‘பாரதத் தாயின்’ வயிற்றில் பிறந்த ‘ஒரே மக்கள்’ என்று பேசி வரும் கட்சி பா.ஜ.க. ‘எனது மதமே இந்தியா’தான் என்று தேர்தல் கூட்டங்களில் பேசியவர் மோடி. ஆனால், ‘பாரத மாதா’வின் புதல்வர்கள் அனைவரையும் சமமாகக் கருதாமல் குஜராத்துக்கும், இந்தி பேசும் மாநிலங்களின் ‘புதல்வர்’களுக்கு மட்டுமே அரசின் திட்டங்களைக் குவித்துக் கொள்வது என்ன நியாயம் என்று கேட்கிறோம்.

‘இந்தியா’வில் உள்ள அனைத்து மாநில மக்களையும் சம உரிமையோடு மதிக்கும் எந்த நிதிநிலை அறிக்கையையும் ‘இந்திய தேசியவாதி’களாலும், ‘இந்துத்துவ’ தேசியவாதிகளாலும் சமர்ப்பிக்கவே முடியாது என்பதே உண்மை. அதிகாரத்தில் இருக்கும் கட்சிகளும், அமைச்சர்களும் தங்கள் மாநில நலன் சார்ந்தே விருப்பு வெறுப்புப் பார்வையில் செயல்படும் வாய்ப்புகளை உருவாக்கித்தரும் அரசியல் அமைப்புதான் ‘இந்தியா’. இந்த ஏற்றத்தாழ்வு மற்றும் பாகுபாடுகளை அனைத்து மாநில மக்கள் மீது திணிப்பதும், இதைத் தட்டிக் கேட்பவர்களை ‘தேச விரோதிகள்’ என்று முத்திரை குத்துவதும் இனி நீண்டகாலம் நீடிக்கப் போவது இல்லை. சமர்ப்பிக்கப்பட்டு வரும் நிதிநிலை அறிக்கைகளே இதற்கு சாட்சியங்களாக நிற்கின்றன!

# கல்வி, மருத்துவத்திற்கு வாரி வழங்கிய ‘கஞ்சன்’ பெரியார்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இயக்கம் தேவைப்பட்டது. அந்த பெருமையை பகிர்ந்து கொள்வதற்காக திராவிடர் இயக்கத்தைச் சார்ந்த எல்லோரும் துண்டணியத் தொடங் கினார்கள். வருவோர்க்கு எல்லாம் துண்டு அணிவித்து தான் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

பழைய படங்களைப் பார்த்தால் தெரியும்; எம்.ஜி.ஆர். பழைய படங்களில் சட்டையும், பேண்டையும் போட்டு இன் பண்ணிக்கொண்டிருப்பார்; ஆனால் தோளில் துண்டு போட்டிருப்பார். துண்டு அணிய வேண்டும் - அந்த துண்டு அணிகிற உரிமை எங்களுக்கு ஏன் இல்லை என்பதை கேட்பதற்காகத் தான் அவ்வாறு அணியப்பட்டது. அந்த நினைவோடு அந்த சால்வையை அய்யாவுக்கு போட்டோம்.

பெரியார் தொண்டர்கள் நூற்றாண்டு என்கிறபோது சிலர் சொல்லுவார்கள், எங்களிடம் கூட கேள்வி வைத்ததுண்டு. சங்கராச்சாரி 101 ஆண்டு இருந்தார்; பெரியார் 95 வயதில் செத்து போய்விட்டார் என்று சொல்வார்கள்.

ஏன், பெட்ரடண்ட்ரசல், கடவுள் இல்லை என்று சொல்லியவர் மட்டுமல்ல, நாத்திக சங்கத்தை நடத்தியவர் 101 ஆண்டுகள் வாழ்ந்துதான் இறந்தார். இன்னொன்று, சங்கராச்சாரியார் 100 ஆண்டு இருந்தார்; பெரியார் 95ஆண்டுகள் வாழ்ந்தார். (கை தட்டல்) இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது. அவர் இருந்தார்; இவர் வாழ்ந்தார். பெரியார் மக்களோடு பேசினார், கடைசி நாளுக்கு (சாவதற்கு) நான்கு நாள்களுக்கு முன்புகூட பொதுக்கூட்டத்தில் பேசினார். அதுபோன்ற பெருமை தான் அய்யா வைத்திலிங்கம் அவர்களுக்கும். நூறாண்டு இருக்கிறார் என்பதும், வாழ்கிறார் என்பதும் அதை விடப் பெருமை. மகிழ்ச்சி.

ஆனால், அய்யா மகிழ்ச்சியுடன் இருப்பார் என்று எங்களுக்குப் படவில்லை; என்னடா இவ்வளவு நேரம் ஒரே இடத்தில் கட்டி போட்டு விட்டார்களே என்று எரிச்சலோடு தான் இருப்பார் என்றே புரிந்து கொள்கிறேன். இவ்வளவு நேரம் தோட்டத்திற்கு போகாதது - வீட்டில் இருந்தது இன்றாகத்தான் இருக்க முடியும் எங்களை பொருத்தவரைக்கும். எப்பொழுது வந்தாலும் தோட்டத்திலிருந்து வந்துதான் எங்களை சந்திப்பார். ஒருவேளை முன்னரே சொல்லியிருந்தால் வீட்டில் இருப்பார். அப்படிப்பட்ட ஒருவர் இருக்கிறார் என்ற மகிழ்ச்சியில் வாழ்கிறார் என்ற மகிழ்ச்சி, அதை விட மகிழ்ச்சி. பயனுள்ள வாழ்வை வாழ்ந்திருக்கிறார். வாழ்வது கூட வாழ்ந்திருக்கலாம்; நடமாட்டத்தோடு வாழ்ந்திருக்கலாம். அதை விட சிறப்பு, பொது வாழ்க்கையில், பயனுள்ள பொதுநல வாழ்வை, தொண்டற வாழ்வை வாழ்ந்திருக்கிறார் என்பது.

அவருடைய சிக்கனத்தை எல்லாம் சொன்னார்கள். அதே சமயம் இரண்டு பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்கள் சில செய்திகளைச் சொன்னார்கள். அவர் பள்ளிக்காக எவ்வளவு உதவியிருக்கிறார் என்று. இந்த மருத்துவமனைக்கு 2½ ஏக்கர் நிலம் வழங்கியதை, செய்த உதவிகளை எல்லாம் சொன்னார்கள். இதை பெரியாருடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். பெரியார் அப்படித்தான் இருந்திருக்கிறார். பள்ளத்தூரில் அமைந்திருக்க வேண்டிய ஆரம்ப சுகாதார நிலையம் இந்த ஊருக்கு வந்ததற்குக் காரணம் இவர் கொடுத்த நிலத்தின் காரணமாகத்தான் என்று சொன்னார்கள்.

அதுபோலவேதான் பெரியார் வாழ்க்கையிலும். அப்போது ஈரோடு, கோவை மாவட்டத்தில் இருந்தது. கோவை மாவட்டத் தலைமை மருத்துவமனை, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக மாற்றப்பட்ட போது, மாவட்ட மருத்துவமனையை எங்கே கொண்டு போவது, ஈரோட்டிற்கா, திருப்பூருக்கா என்ற கேள்வி எழுந்த போது, அப்போது ஒரு இலட்சம் எந்த ஊர் தருகிறதோ, அந்த ஊருக்கு கொண்டு போவது என்று அரசினர் கூறினர். அப்போது ஈரோட்டின் சில செல்வந்தர்கள் சேர்ந்து பெரியாரிடம் வருகிறார்கள். நாம் நூறு பேர் சேர்ந்து, 1000 ரூபாய் வீதம் போட்டு, ஒரு லட்ச ரூபாய் கட்டிவிட்டால் ஈரோட்டிற்கு மாவட்ட தலைமை மருத்துவமனை வந்துவிடும் என்று பெரியாரிடம் கேட்கிறார்கள். வந்தவர்களில் ஒரு செல்வந்தரைப் பார்த்து, ‘எதுக்கு ஆளுக்கு ஆயிரம்? நீங்கள் ஒருவர் ஒரு இலட்சம் தரமுடியாதா?’ என்று பெரியார் கேட்டாராம். இல்லைங்க என அவர் நெளிந்தாராம் அவ்வளவு பெரிய பணக்காரர். பெரியார் சொன்னாராம் ‘வசூல் எல்லாம் வேண்டாம்; நான் ஒரு இலட்சம் ரூபாய் தருகிறேன்; ஈரோட்டிற்கு மருத்துவமனை வரட்டும்’ என்று. ஒரு இலட்சம் ரூபாயை உடனே எடுத்து பெரியார் கொடுத்தார். பெரிய பணக்காரர்கள் “ஆயிரம் ஆயிரம் நூறு பேர் போடலாம்” என பெரிய சாதனை போல் செயல் திட்டமாக கொண்டு வந்தபோது, ‘கஞ்சன்’ பெரியார் “இதை ஏன் எல்லோரிடமும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் ? ஒன்று நீ கொடு இல்லை நான் தருகிறேன்” என கொடுத்து விட்டார்.

பின்னர் ஒருமுறை திருச்சியில் உள்ளவர்கள் எல்லாம் குழந்தைகளுக்கான தனி மருத்துவமனை இல்லை, அவ்வாறு ஒரு கட்டிடம் கட்ட வேண்டும், அதற்கு அரசிடம் மக்கள் பங்காக ஒரு இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். பெரியார் திருச்சி குழந்தைகள் மருத்துவமனைக்கென ஒரு இலட்சம் அப்போது தந்தார். இன்றும் அந்த குழந்தைகள் பிரிவு கட்டிடம் பெரியார்-மணியம்மை குழந்தைகள் பிரிவு என இருப்பதைக் காணலாம்.

அதுமட்டுமல்ல தோழர்களே, திருச்சியில் சில பேர் வந்து அய்யாவிடம், “இங்கு அரசு கல்லூரிகளே இல்லை. ஜமால் முகமது கல்லூரி இருக்கிறது; செயிண்ட் ஜோசப் கல்லூரி இருக்கிறது; நேஷனல் கல்லூரி மூன்று தான் இருக்கின்றன. செயிண்ட் ஜோசப் கல்லூரி கிறித்துவ கல்லூரி; ஜமால் முகமது கல்லூரி இசுலாமியக் கல்லூரி; நேஷனல் கல்லூரி பெத்தாச்சி செட்டியார் கட்டியது - ஆனால் இப்போது பார்ப்பான் கல்லூரியாக மாறி விட்டது - அவன் கைக்கு போய் விட்டது. கட்டிய குடும்பத்தினர் எவரும் கல்லூரி பொறுப்பில் இல்லை. பார்ப்பனர் கைப்பற்றிக் கொண்டனர். அரசு கல்லூரி ஏதும் இல்லை. எனவே, சாதாரண உழைக்கும் சமுதாயப் பிள்ளைகள் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பே இல்லை. குறைந்த பட்சம் நீங்களாவது ஒரு கல்லூரி கட்டுங்கள்” என்று பெரியாரிடம் கேட்கிறார்கள். “இந்த கல்லூரி கட்டுவது எல்லாம் எனக்கு வேண்டாம். அது என் இயக்க வேலையை கெடுத்து விடும்” என்று கூறிவிட்டு, பெரியார் கேட்கிறார் திரு. சுந்தரவடிவேலுவிடம், “அரசே கல்லூரிக் கட்ட என்ன பண்ணனும்?” என்று. “ஒரு ஐந்தரை இலட்சம் பணம் அரசிடம் செலுத்த வேண் டும்” என்று அவர் கூறுகிறார். பெரியார் தமிழக அரசுக்கு சொன்னார், “நான், 5½ இலட்சம் பணம் கொடுக்கிறேன்; நீங்கள் கல்லூரி கட்டிக் கொள்ளுங்கள்.” இது 1966-இல். பக்தவச்சலம் முதல்வராக இருந்த காலத்தில் கொடுத்தார்; அது தான் பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி என்று இருக்கிறது. அது பெரியார் கல்லூரி என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். அந்த கல்லூரிக்கு பெரியார் பணம் கொடுத்ததால் பெரியார் பெயர் வைத்திருக்கிறார்கள். **(அவ்வாறு பெரியார் பணத்தில் கட்டப்பட்ட கல்லூரித் திறப்பு விழாவில் அது அரசு விழா என்று காரணம் கூறி பெரியாரை அந்நிகழ்ச்சியில் பேசக்கூட அனுமதிக்கவில்லை என்பது ஒரு தனி செய்தி)**

அப்படி ’கஞ்சன்’ பெரியார் தான் ஐந்தரை இலட்சம் பணத்தைக் கொடுத்து கல்லூரியைக் கட்ட சொன்னார். பயனுள்ளதற்கு செலவு செய்யலாம்; பயனற்ற செலவு செய்யக் கூடாது. தேவைக்கு மேல் செலவு செய்வது ஊதாரித் தனம். தேவைக்கே கூட செலவு செய்யாதது கருமித்தனம். தேவைக்கு மட்டும் செலவு செய்வது சிக்கனம். இதை தான் பெரியாரும் செய்திருக்கிறார்; பெரியார் தொண்டர் அய்யா வைத்திலிங்கமும் செய்திருக்கிறார்.

(3 ஆம் பக்கம்)

# பெரியார் வழியில் வாழ்ந்து காட்டுகிறார், அய்யா வைத்திலிங்கம்

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*கல்வியும் மருத்துவமும் தான் மக்கள் சமுதாயத்திற்கு மிகவும் அடிப்படை தேவையானவை. 1990 களில் அரசாங்கம் உலகமயமாக்கல் கொள்கையை ஏற்றதால், கல்வி, மருத்துவம் இரண்டையும் அரசாங்கம் செய்யக்கூடாது என்கின்றன உலகவங்கி போன்றவைகள். அவர்கள் கடன் தருவதற்கு முன்வைக்கிற நிபந்தனைகள் ஒரு காரணம். ஒருவர் கடன் வாங்குவதாக வைத்துக் கொள்ளுங்கள். ஒரு கல்யாணத்திற்கு கடன் வாங்குகின்றீர்கள். ஒரு இலட்சம் கடன் கொடுங்கள் வட்டியுடன் திருப்பித் தருகிறேன் என்கிறீர்கள். தருகிறேன். நீ 30 பேருக்குத் தான் சோறு போட வேண்டும் என்றோ, 300 பேருக்குத் தான் போட வேண்டும் என்றோ, ஒரு பொரியல் தான் வைக்கணும் என்றோ கடன் கொடுப்பவன் சொன்னால் உங்களுக்குக் கோபம் வரவேண்டும் அல்லவா? இதையெல்லாம் ஏன் என்னிடம் சொல்கிறீர்கள்? நீங்கள் கடன் கொடுக்கிறீர்கள்; நான் வட்டியுடன் திருப்பித் தருகிறேன் அவ்வளவுதான், அதற்குமேல் எதற்கு இவ்வாறான வீண்சொற்கள் என்றுதானே கோபிப்பீர்கள்? இப்படித்தான் உலக வங்கியில் கடன் கொடுக்கும் போது சொல்கிறான். இந்தியா கடன் கேட்கிறது. கடன் கொடுங்கள். பள்ளிக்கூடம் கட்டணும் என்று. உலக வங்கிகள், கடன் கொடுக் கிறோம், ஆனால் மருத்துவத்திற்கு செலவு செய்யக் கூடாது. கல்விக்கு செலவு செய்யக்கூடாது. வேளாண்மைக்கு, விவசாயத்திற்கு கொடுக்கிற மானியத்தை இரத்து செய்து விட வேண்டும் அரசாங்கங்கள் கண்டபடி செலவு செய்கிறீர்கள்; விவசாயத்திற்கு மானியம் கொடுக்கிறீர்கள்; அவை யெல்லாம் கூடாது என்கிறான். விவசாயத்தைவிட தொழிலதிபர்களைப் பற்றி தான் நமது மந்திரிகளுக்கு அதிக கவலை. சரிங்க, நாங்கள் விவசாயத்திற்கு கொடுக்கிற மானியத்தை எல்லாம் இரத்து செய்து விடுகிறோம் கல்வியைத் தனியாருக்கு கொடுத்து விடுகிறோம். மருத்துவ மனையும் அவர்களிடமே கொடுத்து விடுகிறோம். நாங்கள் இனி மருத்துவமனை, பள்ளிக்கூடம், கல்லூரி எல்லாம் கட்ட மாட்டோம் என்ற நிலைக்கு இப்பொழுது அரசினர் வந்து விட்டார்கள். வெளிநாட்டுக்காரர் நிபந்தனை களுக்குப் பணிந்து போகிறார்கள் நம் ஆட்சி யாளர்கள். எனவே கல்வி மருத்துவம் போன்ற சேவைகளுக்கு அரசு செலவு செய்யக்கூடாது என்று வந்து விட்ட பின்னால் முழுக்க முழுக்க அரசு மருத்துவமனையில் தருகிற மருத்துவத்தின் தரம் மருத்துவம் பெறாமல் விட்டு விடலாம் என்ற நிலைக்கு போய்விட்டது. எனவே இப்படிப்பட்ட அரசு மருத்துவமனையோ அரசு பள்ளிகளோ அதை காப்பாற்ற வேண்டியது அதை ஒழுங்காக நடைபெறச் செய்ய வேண்டியது நம் கடமை. சமூக அக்கறை உள்ளவர்கள் கடமை அது. நாம் தான் அதை செய்ய வேண்டும். இல்லை என்றால் சாமானிய மக்களுக்கு கிடைக்காது. எங்கள் கலை நிகழ்ச்சியில் சொல் வார்கள். "எப்பங்க பிரசவம் ஆகும்? வலிச்சா பிரசவமாகும்" என்று கொஞ்சம் அமைதியாக நின்று விட்டு, "தனியார் மருத்துவமனையா ?" என்று கேட்பார். "அரசு மருத்துவமனை என்றால் வலித்தால் பிள்ளை பிறக்கும்; தனியார் மருத்துவமனை என்றால் கிழித்தால்தான் பிள்ளை பிறக்கும்" என்பார். தனியாரிடம் எதுவானாலும் ஆபரேசன் தான். எனவே இப்படி எல்லாம் போன பின்னர் நமக்கு மருத்துவம் எட்டாத ஒன்றாக மாறிவிடும். நம்மால் மருத்துவம் செய்து கொள்ள முடியவில்லை என்ற நிலை வருகிற போது, இவர்கள் செய்த சிறந்த கொடைகள், மருத்துவமனை இந்த பகுதியில் வருவதற்கு நன்கொடைக் கொடுத்தார் என்று சொல்கிறபோது நெஞ்சம் நிறைத்து பாராட்ட வேண்டும். அப்படிப்பட்ட முயற்சி, அந்த எண்ணம் யாருக்கெல்லாம் வரும் என்றால் இப்படிப்பட்ட சமூக அக்கறையுள்ள இயக்கத்தை சார்ந்தவர்களுக்குத் தான் வரும். அது பெரியார் இயக்கம் மட்டுமல்ல. எந்த இயக்கம் என்றாலும் சரி.*

*நம்மவர்கள் 100 ஆண்டு ஆயுளை நினைத்ததே இல்லை. எப்பொழுதும் நினைத்தது இல்லை. மனிதன் 60 ஆண்டுகள்தான் இருப்பான் என்று உறுதியாக நம்பினார்கள். அதனால் தான் ஆண்டுக் கணக்கே 60 என்று வைத்துக் கொண்டார்கள். தமிழ் ஆண்டு என்று சொல்வார்கள். அதன் பெயர்களில் ஒன்று கூட தமிழ் இல்லை. பிரபவ, விபவ,சுக்கில, பிரமோதுத, இதில் எது தமிழ்? தமிழே இல்லை. இது தமிழாண்டு. எப்படியானாலும் 60 தான் வைத்திருந்தார்கள். கர வருஷத்தில் பிறந்தால், இன்னொரு கர வருஷத்தில் அவருக்கு ஒரு வயது என்றா கணக்கு போடுவீர்கள்? 60 ஆண்டு சுழற்சி முறையை வைத்தார்களே அன்றி தொடர் ஆண்டு நம்மிடமில்லை. தொடர் ஆண்டை வள்ளுவரை வைத்து, தை முதல் நாளை புத்தாண்டு என நாம் வைத்தோம், அதை ஒழிச்சாங்க. எப்படியோ ஒரு தொடர் ஆண்டு முறை இப்பொழுது இருக்கிறது. அப்பொழுது இல்லாமல் இருந்ததற்குக் காரணம் 60 வருஷத்துக்கு மேலே மனிதன் இருக்க மாட்டான் என்று நினைத்தார்கள். இப்படிப்பட்ட நம்பிக்கை இருந்த நாட்டில் அய்யா 100 ஆண்டுகளைக் கடந்துள்ளார்.*

*நம்மை அறியாமல் நம்மை அடிமைப்படுத்துகின்ற இந்து மதத்திற்கு எதிரானவர்கள் தான் பெரியார் இயக்கத்துக்காரர்கள். மதத்துக்கு அல்ல. மதவாதிகளுக்கு எதிரானவர்கள். மத நம்பிக்கையாளர்களுக்கு எதிராக என்றுகூட இல்லை; மதவெறியர்களுக்கு எதிரானவர்கள். என்னுடைய கடவுளை நான் வணங்குகிறேன் என்பது மத நம்பிக்கை; என்னுடைய கடவுளைத்தான் அனைவரும் வணங்க வேண்டும் என்பது மதவாதம். ஆனால் அந்த இந்து மதம் போதித்தவை நமது மூளையில் நிறைய ஏறிப்போச்சு. அய்யா வைத்திலிங்கம் அவர்களை வாழ்த்துகிற போது ஒருவர் சொன்னார், "திரைகடல் ஓடியும் திரவியம் தேடினார்" என்று, இது இந்து பண்பாடல்ல. இந்து பண்பாடு என்பது கடலைத் தாண்டினால், மதத்தை விட்டு தள்ளி வைத்து விடுவார்கள், சாதியை விட்டுத் தள்ளி வை, சமுதாயத்தை விட்டு விலக்கி வை என்று சொன்னார்கள் இந்து மதத்தில். அப்பொழுது எல்லாம் கடல் தாண்டி விட்டு வரமுடியாது. தள்ளி வைச்சிருவான். ஆனால் தமிழர் பண்பாடு அப்படியல்ல. திரைகடல் ஓடியும் திரவியம் தேடலாம். நமது இலக்கியத்தில் கூட நெய்தல் திணை என்று வைத்திருந்தார்கள். ஒருவர் கல்விக்குப் போகலாம். தூதுக்குப் போகலாம். போருக்குப் போகலாம் கடல் கடந்து போகலாம். நமக்கே ஒரு திணை. நெய்தல் திணை என்ற ஒன்று இருந்தது. அதை பிரிவு என்ற அடிப்படையிலே ஏராளமாக இலக்கியம் படைத்த தமிழ் சமுதாயத்தில், கடல் தாண்டினால் குற்றம் என்கிற இந்து மதத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். சங்கராச்சாரி கடல் தாண்டி போகக்கூடாது என்று சங்கரராமன் வழக்குப் போட்டார். சங்கராச்சாரி கடல் தாண்டி சீனாவிற்கு போகலாம்னு நினைச்சாரு. கடல் தாண்டக் கூடாது என்று வழக்கு போட்டார். வழக்குப் போட்டவரது வாழ்வு முடிந்து விட்டது. வழக்கு முடியவில்லை. ஆனால் இவர் திரை கடல் ஓடி திரவியம் தேடி வந்தவர், வந்தபின் அதை மக்களுக்கு பயன்படுத்தியவர்.*

*அடுத்து இப்போது மேடையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தோம், கொள்கை உறுதியைக் காட்டினார். கொள்கைக்கு விரோதமான ஒன்றை அனுமதித்தார். பார்த்துக் கொண்டிருந்தோம். பல பேர் காலில் விழுந்தபோது தடுத்துப் பார்த்தார், முடியவில்லை. போ எத்தனை தடவை நான் குனிந்து நிமிர்ந்து கொண்டிருப்பது என்று இயலாமையால் விட்டு விட்டார். ஆனால் ஒருவர் குங்குமத்தை அவரது துணைவியாரின் நெற்றியில் வைக்க வேண்டும் என வலியுறுத்தினார். ஆனால் அய்யா அவர்கள் தொடவே இல்லை. முடியாது என்று மறுத்தார். இந்த சினிமா வந்து, சின்னத் திரையும், பெரிய திரையும் இரண்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். தாலிக்கு பேக்ரவுண்ட் மியூசிக் கொடுக்கும் போது அணுகுண்டுக்கு கொடுக்கிற மாதிரிதான் பின்னணி இசைக் கொடுப்பான். இன்னொன்று குங்குமம். நமக்கு குங்குமம் எல்லாம் தெரியாது. கருவேலங்காய் என்பதை உரசி, கருப்பு பொட்டுதான் நாம் வைத்துக் கொண்டிருந்தோம். குங்குமம் அண்மையில் தான் வந்தது. குங்குமம் தமிழ்ப் பண்பாடு என்பார்கள். என்ன தமிழ்ப் பண்பாடு? இதற்கு முன் எங்கிருந்தது தமிழ்ப் பண்பாடு? சும்மா இப்படி எல்லாம் கொண்டு வந்து திணித்துக் கொண்டிருக்கிறான் நம்மீது. நாமும் அதை ஏற்றுக் கொண்டோம்.*

*முன்பெல்லாம் கிராமங்களில் பேசிக் கொள்வார்கள். "பையன் எப்படி இருந்தாங்க? நல்லா இருந்தான், சும்மா கர்லாக் கட்டை மாதிரி - கருங்காலி மாதிரி இருப்பான், கருகருன்னு கருநாகப் பழம் மாதிரி இருப்பான்" என்று சொல்வார்கள். ஆனால் இப்போது கருப்பு என்றால் அசிங்கம் என்று நம்மை நம்ப வைத்துவிட்டானே. ஆப்பிரிக்காவில் இயக்கம் தொடங்கினார்கள்; அமெரிக்காவில்* (Beauty Beyond Colour) *என்ற அமைப்பு வைத்தார்கள். 'வண்ணங்களை கடந்த அழகு' என்று சொன்னார்கள். கறுப்பை அப்படிச் சொன்னார்கள். இப்ப "பிளாக் இஸ்" பியூட்டி* (Black is Beauty) *என்று மாற்றிக் கொண்டார்கள். ஏன்? எங்கள் நிறம் எப்படி அழகு இல்லாமல் போகும் என்று கேட்பது, தன்னம்பிக்கையை ஊட்டுவது. ஆனால் நம்மவர்கள் எப்படி ஆகி விட்டார்கள்? சிவப்புதான் அழகு என்கிறார்கள். எல்லாம் வெளிநாட்டுக்காரன் திணித்தது தான். இந்து மதம் என்று ஆரியர் என்று வந்த வெளி நாட்டுக் காரர்கள் திணித்த மாதிரி. அதனால்தான் சிவப்பு அழகுக்கு நிறைய விளம்பரம் வருது: விற்பனை நடக்கிறது.*

*நம்ம நிறம் என்னடா என்று எண்ணிக் கொள்ளாமல் நம்மீது பலவற்றை திணித்தார்கள். நாம் ஏற்றுக் கொண்டோம். அடிமையாகிப் போனோம். அடிமைப்படுத்தும் பண்பாட்டிலிருந்து மீட்டவர் தான் பெரியார். மீளச் செய்ய, இந்து மடத்தனத்தை விட்டு, ஆரியப் பண்பாட்டு ஆதிக்கத்தில் இருந்து வெளியே வாருங்கள் என்றவர் பெரியார்.*

*ஒரு ஆணுக்குக் கல்வி கொடுப்பது ஒரு தனி மனிதனுக்குக் கல்வி கொடுப்பது, ஒரு பெண்ணுக்குக் கல்வி கொடுப்பது, ஒரு குடும்பத்திற்குக் கல்வி கொடுப்பது - என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு, பெரியாரும் பெண் கல்வியை வலியுறுத்தினார் பெண் விடுதலைக்காக. அய்யா வைத்திலிங்கம் அவர்களின் மகன் பட்டப் படிப்போடு இருக்க, அவர்களின் மூன்று பெண் மக்களுக்கும் முதுகலைப் பட்டமும், அதற்கும் மேலாகவும் கல்வியைக் கொடுத்திருக்கிறார் என்பது பெரியாரை அவர் சரியாகப் புரிந்துகொண்டுதான் பின்பற்றியிருக்கிறார் என்பதையே காட்டுகிறது.*

*ஒரு பெரியாரியல்வாதியாக அவரது தனிப்பட்ட வாழ்வில் நான் பார்த்ததை சொல்கிறேன். நம் தோழர்கள் திருவேங்கடம், கண்ணன் போன்றோரெல்லாம் அவரிடம் இயக்கக் கூட்டங்களைப் பற்றி சொல்ல மாட்டார்கள். ஏன் சொல்ல மாட்டார்கள் என்றால் அவரிடம் சொன்னால் வந்து விடுவார், அவரை தொல்லைப் படுத்த வேண்டாம் என்று. அவர் 'டி.வி.எஸ் 50' வண்டியை எடுத்துக் கொண்டு வந்து விடுவார் எங்கே என்றாலும் வந்து விடுவார். இரவு கூட்டம் முடித்து திரும்பி வருவார். எனவே நிகழ்ச்சி முடிந்த அடுத்த நாள் தான் போய், "அய்யா நேற்று கூட்டம் நடந்தது" என்று சொல்வார்கள். அவர் கோபித்துக் கொள்வார். இப்போது கடந்த மாதம் கூட தோழர் பெரியசாமி அவர்கள் தந்தையாரின் இறப்புக்காக அவரது இல்லத்திற்கு வந்தபோது அய்யாவே வண்டியிலே வந்து விட்டார் அங்கே. ஒரு இடத்திற்கு போகிறபோது, ஒரு தோழரை நீங்கள் பின்னால் உட்காருங்கள், உங்களுக்கு வழி தெரியாது என்று டி.வி.எஸ் 50-ல் டபுள்ஸ் வைத்து ஓட்டுகிறார். இது ஒரு மாதத்திற்கு முன்பு நடந்தது.*

*அய்யா அவர்களது தூய்மையான வாழ்க்கை நெறிகளைப் பற்றி, அவரிடம் எந்தவிதமான தேவையற்ற பழக்கங்களும் இல்லாததைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஒருவர் சொல்வதைவிட, நடந்து காட்டுவதுதான் அதிக பலனைக் கொடுக்கும். அதற்கு அய்யா ஒரு நல்ல எடுத்துக்காட்டு. நான் எங்களுடைய தோழர்களிடம் பேசும்போது சொல்லுவேன். நீங்கள் ஐந்தாண்டுகளாக இருக்கும் சிகரெட் பழக்கத்தை, பழகிவிட்டது விட முடியவில்லை என்கிறீர்கள்; மதுப் பழக்கத்தை மூன்றாண்டுகளாக பழகிவிட்டோம் விடமுடியவில்லை என்கிறீர்கள், ஆனால், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நம்பிக் கொண்டிருக்கும் கடவுள் நம்பிக்கையை விடச் சொல்கிறோம். ஆயிரம் ஆண்டுகளாக நம்பிக் கொண்டிருக்கும் ஜாதியை விடச் சொல்கிறோம். ஐந்து வருட பழக்கத்தை விட முடியாத நாம் போய் ஆயிரமாண்டு கால கடவுள் நம்பிக்கையையும், நூற்றாண்டுகளாய் நம்பும் ஜாதியையும் விட்டுவிடச் சொல்வதில் நமக்கு என்ன தகுதி இருக்கிறது என்று யோசித்து பாருங்கள். சில ஆண்டுகளாக பழகியதை விட்டு ஒழித்துவிட்டுப் பேசினால் தான் சரியாக இருக்கும். அப்படிப்பட்ட பழக்கத்தை தன்னிடம் வைத்துக் கொள்ளாமல் அய்யா விட்டுவிட்டுத் தான் பலவற்றை சொல்லி கொண்டிருக்கிறார். மருத்துவ குறிப்பு எல்லாம் அய்யாவிடம் கேட்டுக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அவர் எளிமையான குறிப்பை சொல்லி விட்டார். பசித்தப் பின்புதான் சாப்பிடுவது என்று. பெரியாரிடம் கேட்டார்கள்.*

*1970 ம் ஆண்டு ஒரு நிகழ்ச்சியில் 92 ஆம் ஆண்டு பிறந்த நாள். அப்போது சேலத்தில் சிலை அமைக்கப் பட்டது. அப்பொழுது மத்திய அமைச்சராக இருந்த சந்திர சேகர் (அவர்தான் குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை கொண்டு வந்தவர்.) ஆனால் அதற்கு முன்பே 1928 ஆம் ஆண்டு முதலாக பெரியார் பரப்பியது பல பேருக்குத் தெரியாது. 1928 ஆம் ஆண்டே பெரியார் பேசத் தொடங்கி 1930 இல் 'கர்ப்ப ஆட்சி' என்ற புத்தகத்தை வெளியிட்டார். தேவையற்ற குழந்தைகளை ஏன் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு பெண்களுடைய விடுதலை என்பது*

*(4 ஆம் பக்கம்)*

DATE OF PUBLICATION 16.07.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பெரியார் 'இளமைக்கான' இரகசியம்!

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தை பேற்றில் தான் முடக்கப்பட்டு விடுகிறது என்பதை எல்லாம் பெரியார் சொன்னார். எப்படி யிருந்தாலும் அவர் பேசினார். அந்நிகழ்ச்சியில் பேசுகிறபோது டாக்டர் சந்திரசேகர் சொன்னார் ஆங்கிலத்தில் பேசினார். 90 year youth என்று ஆரம்பித்தார். 90 year old என்று சொல்வார்கள் அல்லவா, அதை 90 years youth என்று சொன்னார். அப்படிப்பட்ட பெரியாரை நான் கேட்டேன் உங்கள் இளமைக்கான இரகசியம் என்ன என்று கேட்டேன். அப்போது அவர் சொன்னார். "கொஞ்சம் சோறு, நிறைய கறி" என்றாராம். உணவுமுறை பற்றிக் கேட்ட போது என் நாவிற்கு பிடிக்காததை சாப்பிட மாட்டேன் என்றுகூட சொல்லாமல் என் மூக்கிற்கு பிடிக்காததை மட்டும் சாப்பிட மாட்டேன், அவ்வளவு தான். மற்றவற்றை எல்லாம் சாப்பிடுவேன். இவ்வளவு தான் என் உணவு முறை என்று சொன்ன தாக சொன்னார். ஆனால் அய்யா வைத்திலிங்கனாரின் உணவு முறை. பசித்தபின் உண்பது இதை வள்ளுவனும் சொன்னான். விவேக சிந்தாமணியிலும் சொல்லி இருந்தது. அதை நாம் பேணுவது. இப்போது தேவையாகிவிட்டது. இப்பொழுது மருத்துவத்திற்கு ஆகும் செலவைப் பார்த்தால் நாம் உடல் நலத்தை பேணியாக வேண்டும் நம்மை நாமே. செயற்கையாக. சிலவற்றை நம்பிக் கொண்டு சிலவற்றை பின்பற்றி பலவற்றை விட்டுவிட்டோம். நமக்கு சொந்தமான பலவற்றை விட்டுவிட்டோம்.

தஞ்சை மாவட்டத்துக்காரர்கள் நெல்லைப் பற்றி முன்பே அறிந்திருந்திருக்கலாம். எங்கள் சேலம், கோவை பகுதிகளில் நெல் எல்லாம் இல்லாத காலம். காவிரி பாசனம் வந்த பிறகு அங்கும் நெல் வந்திருக்கலாம். ஆனால் அப்பொழுது நெல் இல்லாத காலம். சட்டமன்றத்தில் ஒரு முறை கோவை மாவட்டத்தைச் சார்ந்த காங்கிரஸ் உறுப்பினர் வெள்ளியங்கிரி கவுண்டர் பேசியிருக்கிறார். நெல் விலை பற்றி - நெல்லைப் பற்றி பேசியிருக்கிறார். அவர் பெரியாரின் நண்பர்தான். பெரியார் எழுதுகிறார், "ஏன் உனக்கு சம்பந்தமில்லாததை பேசுகிறாய், கோவையில் பிறந்த நீ சோளத்தை பற்றி, ராகியை, கம்பு சாப்பிடுங்கள் என்று பேசுவதை விட்டு விட்டு நீ நெல்லைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாயே. நீ ஏன் தஞ்சாவூருகாரனாக மாறுகிறாய். நீ நம்ம பகுதியில் உள்ள தானியங்களை உண்ணுவதைப் பற்றி பேசு" என்று, அப்பொழுதும் எழுதினார். பின்னாளிலும் சொன்னார். இப்பொழுது எல்லோரும் சொல் கிறார்கள். சிறு தானியம் சாப்பிடுங்கள், நெல்லை விட்டு விடுங்கள் என்று. வெள்ளையானதை சாப்பிடாதீர்கள். வெள்ளை நஞ்சு என்று பிற நாடுகளில் விவரிக்கப்படும் அரிசி, சீனி, உப்பு இந்த மூன்றையும் தான் விடாமல் சாப்பிடுகிறோம். மற்றதை எல்லாம் விட்டு விட்டோம். திராவிடர் கழக மாநாட்டில் 1990களில் கம்பு, ராகி, சோளம் ஆகியவற்றை உண்ணும் பழக்கத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் போடப் பட்டது. அதை எல்லாம் இந்த வேளையில் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எவற்றை யெல்லாம் இழந்தோமோ அவை உயர்வானவை - நமக்குப் பொருத்தமானவை; பாதுகாப்பானவை. அவற்றை எல்லாம் விட்டு விட்டு நமக்குப் பாதுகாப்பு இல்லாததை - செலவு அதிகம் வைப்பதை - அடிமை தனத்தின் தத்துவத்தை பின்பற்றுகிறோம்.

அய்யா நூற்றாண்டு நிறைவு விழாவில் எண்ணு வோம், சிந்திப்போம். அவர் வழிகாட்டியாய் இருக்கிறார் என்று புரிந்து கொள்வோம். அவரைப் பாராட்டுவது நட்புக்காக - அறிமுகத்திற்காக என்பதை விட, வாழ்ந்த வாழ்க்கை நெடிய வாழ்க்கை மட்டுமல்ல. பயனுள்ள வாழ்க்கை வளமான வாழ்க்கை செல்வமான வாழ்க்கை. எல்லாவற்றிலும் சரியாக வாழ்ந்த வாழ்க்கை. எல்லாவற்றையும் நாம் புரிந்து கொண்டு அதை பின்பற்றுவோம் என்று சொல்லி எமது அன்பார்ந்த அய்யா அவர்களுக்கு பலரும் பாராட்டை சொன்னார்கள். வாழ்க என்றால் வாழ்ந்து விடுவார், வீழ்க என்றால் வீழ்ந்து விடுவார் என்றால் உலகத்தில் யாரும் இருக்கமாட்டார்கள். உலகில் எல்லோருமே திட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே வாழ்த்துவது கூட மூட நம்பிக்கையில் ஒன்று தான் என்று சொல்வார் பெரியார்; ஆனால் வெறுமனே வாழ்க என்று சொல்லாமல் இவ்வாறு வாழுங்கள் என்று வாழ்த்தலாம் மண மக்களுக்கு என்று சொல் வார். இப்படி அய்யாவை சொல்ல முடியாது. எனவே நாங்கள் பின்பற்றக்கூடிய வாறு நீண்ட வாழ்க்கையை நீங்கள் வாழுங்கள். எங்களுக்கு வழிகாட்டுங்கள் என்று சொல்லி விடை பெறுகிறேன் என்றார், கழகத் தலைவர் கொளத்தூர் மணி.

# சுகாதார மய்யம் அமைக்க நிலம் வழங்கியவர்: அய்யா வைத்திலிங்கம் நினைவலைகள்



விழா மேடையில் அய்யா வைத்தி லிங்கம் ஏற்புரையாற்றும்போது, தான் வாழ்ந்துவரும் அழகியநாயகிபுரத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்காக நிலம் கொடுத்ததைப் பற்றிக் கூறினார்.

கவிஞர் பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரத்தின் ஊரான நாட்டுச்சாலை தான் இவரது சொந்த ஊர். கவிஞரின் அண்ணன் கணபதியும் இவரும் மிக நெருங்கிய நண்பர் களாக இருந்துள்ளனர். அவரது வழிகாட் டலில்தான் இவர் சிங்கப்பூர் சென்றிருக் கிறார். அப்போது கடவுச் சீட்டு எடுக்கும் போது அதிக நாள் பணியாற்றலாம் என்று கூறி, நான்காண்டுகள் வயதைக் குறைத்துக் காட்ட 11-4-1918 என்று தனது பிறந்த நாளை மாற்றிப் பதிந்த கதையையும் இவர் நகைச் சுவை பொங்கக் கூறுவதுண்டு. நீண்ட நாட்கள் குழந்தைப் பேறு இல்லாதிருந்த நிலையில் அவரை பலர் கேலி பேசியதையும், அவமானப்படுத்தியதையும் எடுத்துரைத்தார். ஒரு திருமண வீட்டில் அவரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் மொய் எழுதத் தொடங்கியபோது குழந்தைப் பேறு இல்லாதவன் திருமண மொய் எழுதக்கூடாது என்று மொய் ஏட்டைப் பிடுங்கிச் சென்ற பின்னரே குழந்தைப் பேற்றுக்காக ஒரு சீன மருத்துவரிடம் அவரது மனைவியை அழைத்து சென்று மருத்துவம் பார்த்திருக்கிறார். குழந்தைப் பேற்றுக்காக அவரது மனைவியை பலர் கோவில்களுக்கு அழைத்து சென்றதற்கு மாறாக அப்போதே சுயமரியாதை சிந்தனைகளில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் அறிவியல் பார்வையோடு மருத்துவம் செய்ததையும் நினைவு கூர்ந்தார். 40 வயதைக் கடந்த பின்னரே முதல் குழந்தை பிறந்ததாகவும் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரில் அப்போது இருந்துவந்த அவருக்கு 1962ல் சேதுபாவாசத்திர ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், தாங்கள் 2 ஏக்கர் நிலம் கொடுத்தால் மட்டுமே இவ்வூரில் மருத்துவமனையைக் கொண்டுவர முடியும் எனக் கடிதம் எழுதிக் கேட்டதையும், ஊர் சார்பாகவும் பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இங்கு வந்து 2 ஏக்கர் 2 செண்ட் நிலத்தை எழுதிக் கொடுத்துவிட்டு அன்றே சிங்கப்பூர் திரும்பியதையும் கூறினார். மீண்டும் மேலும் 25 செண்ட் நிலம் தேவைப் படுகிறது என ஆணையாளர் கடிதம் எழுதிக் கேட்டதனால் மீண்டும் வந்து அதையும் பதிவு செய்துக் கொடுத்திருக்கிறார். இப்போது பல கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நிலத்தின் ஒரு பகுதியை ஒருசில சுயநல சக்திகள் ஆக்கிரமித்துக் கொண்டதை எதிர்த்து அரசுத் துறை தரப்பில் எதையும் செய்யமுடியாமல் இருந்தபோது, தனிமனிதராக சுமார் நான்கு இலட்சம் ரூபாய்களுக்கும் மேலாக செலவு செய்து அதை மீட்டதையும் நினைவு கூர்ந்து உரையாற்றினார்.

முதல்முறை நிலத்தைப் பதிவு செய்துவிட்டு வந்தவுடன், அந்நினைவுகளை ஒரு கவிதையாக எழுதியிருக்கிறார். அழகியநாயகிபுரத்தின் கிழக்கு எல்லையாக உள்ள – தொடக்கத்தில் மாட்டுமந்தையாக பயன்படுத்தப்பட்டு வந்த 'கணக்கன் கொல்லை' என்றழைக்கப்பட்ட அந்நிலத்தில், தானே கோலேந்தி மாடு மேய்த்ததையும், அந்நிலத்தில் வரவிருக்கும் மருத்துவமனையால் மக்கள் நலம் உயரும் என்பதையும் கூறும் அக்கவிதையின் தொடக்க வரிகளையும் கூறினார்.

ஆ கூடி அமர்ந்து நின்ற கணக்கன் கொல்லை
அழகிய நாயகி புரத்தின் கிழக்கின் எல்லை
கோல் ஏந்தி கோ மேய்த்தோன் கொடுத்த கொல்லை
குறைவின்றி மக்கள் துயர் தீர்க்கும் – அய்யமில்லை !
- என்பதே அவ்வரிகள்.

ஏங்கித் தவித்தேன் – பல
இன்னல் அனுபவித்தேன் – எதிர்காலம்
நமக்கில்லை என நினைத்தேன் – சொந்த
ஊரைத் துறந்து கடலைக் கடந்தேன்
சோம்பலின்றி உழைத்தேன்
சொல் தவறாது நடந்தேன்
சுய மரியாதையால் துணிவுற்றேன்
பெரியாரியலில் பெரிதும் மகிழ்ந்தேன்
குடும்ப வாழ்வில் குறைவின்றி வாழ்ந்தேன்
பகுத்தறிவைப் பெற்று, மூடநம்பிக்கை அற்று –
பெரியாரின் முன்னறிவில் என் வாழ்வு
நூறாண்டு நிறைவு பெற்று
தொடர்வதுதான் உண்மை எனக் கூறி
பெரியாரின் தொண்டர்களை பெரிது(உ)வந்து
வாழ்த்துகிறேன்.


சொந்த ஊரை விட்டோடி கடலைக் கடந்தேன்
உழைத்துப் பொருள் தேடி
ஊருக்கு வந்தேன் – பெற்ற
பிள்ளை பெண்டிற் சுற்றத்தாருடன் சேர்ந்து
சுகமடைந்தேன் – நல்ல
சுயமரியாதையால் துணிவு பெற்றேன் – தந்தை
பெரியாரியலில் பெருமையுற்றேன்
பேரின்பம் என்பது பொய் – தந்தை
பெரியார் சொன்னதே மெய்
இயற்கை என்பது மெய் – உலகில்
இறைவன் என்பது பொய்
பகுத்தறிவு சிந்தனைதான் வாழ்வு
பக்தி என்று நம்புவது தாழ்வு
பிணி மூப்பு சாக்காடு உண்மை – சாமி
பிழைக்க வைக்கும் என்பது பொய்மை!

தெய்வத்தால் கிடைக்காது மகப்பேறு – நல்ல
மகப்பேறு மருத்துவரைச் சென்று பாரு
இரு தாரம் செய்தும் மிக நீண்ட காலம் – இல்லை
எனக்கு ஒரு செல்லப் பிள்ளை – தெய்வ
நம்பிக்கை கொண்டலைந்தும்
நன்மையில்லை – அதனால்
வெந்து மனக் கண்ணீர் மல்க விரும்பவில்லை
நாற்பது வயதுக்கு மேல் ஏது பிள்ளை – என்ற
நலமற்ற விமர்சனத்தை நம்பவில்லை – தன்
நம்பிக்கை எந்நாளும் குறையவில்லை – இறுதியில்
மகப்பேறு மருத்துவந்தான் கடைசி எல்லை – அதன்
பயனால் கிடைத்தது நான்கு பிள்ளை
முதன்மை மகள் பெற்ற எனதன்பு பேத்தி – வைஷ்ணவி
மகப்பேறு மருத்துவரானதால் – நான்
மகிழ்ச்சி அலையதனில் மிதக்கின்றேனே.

**ப.அ.வைத்திலிங்கம்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 17th July 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜுலை 24, 2014 | புரட்சி 13 | முழக்கம் 28 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...!

+ பள்ளிகளில் ‘சமஸ்கிருத வாரம்’ கொண்டாட வலியுறுத்தும் மோடி ஆட்சிக்கு தமிழக அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்பு.

**– செய்தி**

அதேபோல், கல்யாணம், கருமாதி, அர்ச்சனை என்று 365 நாள்களும் சமஸ்கிருத நாளாகவே, காதைத் துளைக்கிறதே, அதையும் சேர்த்து இந்த கட்சிகள் எதிர்க்கக் கூடாதா?

+ திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயிலில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, உடம்பில் சட்டை இல்லாமல் பூணூலுடன் சாமி தரிசனம் செய்தார்.

**– செய்தி**

இது ‘ஆன்மிகக் கிளப்’புகளுக்கான ‘டாப்லெஸ்’ (மேலாடையில்லாத) கலாச்சாரம்; இதில் தலையிடும் அதிகாரம் உச்சநீதி மன்றத் துக்கே கிடையாது. மூச்...

+ ‘மங்கள்யான்’ செயற்கைக் கோள் – திட்டமிட்டப்படி செப்டம்பர் 24இல் செவ்வாய் கிரகத்தை அடையும்.

**– விஞ்ஞானி மயில்சாமி**

அச்சச்சோ... மங்கள்யானுக்கு செவ்வாய் தோஷம் புடுச்சிடுமே! உடனே பரிகார பூஜைகளுக்கு ஏற்பாடு செய்தாகணும், ஓய்!

+ 298 பேருடன் பறந்த மலேசிய விமானத்தை சுட்டு வீழ்த்தியது யார்? மர்மம் நீடிக்கிறது.

**– செய்தி**

ப்பூ... இதைக்கூட கண்டுபிடிக்க முடியாதா; இதோ, நாங்க சொல்றோம்; விமானப் பயணத்தில் சாவு நடக்கணும்னு அவாளோட விதி; அதுதான் சாவுக்குக் காரணம்; புரியுதோ!

+ வடக்கேபடை அனுப்பி வடவரை வீழ்த்திய இராஜேந்திர சோழன், அங்கிருந்து கொண்டு வந்த கங்கை நீரைக் கொண்டு, தான் தலைநகரில் கட்டிய கோயிலுக்கு நன்னீராட் டினான்.

**– ‘தினத்தந்தி’ கட்டுரை**

வடவரை வீழ்த்தினாலும், இந்த சோழர்களுக்கு புனிதமாகத் தெரிவது வடநாட்டு கங்கை தான். தமிழ்நாட்டுக் காவிரிகூட அல்ல! என்னடா, தமிழா?

+ பழனி முருகன் கோயிலுக்கு ‘பட்டா’ இல்லை; 100 ஆண்டுகளாக போராடுகிறது ‘தேவஸ்தானம்’. **– செய்தி**

பத்திரத்தில் கையெழுத்துப் போட ஆட்சியர் அலுவலகத்துக்கு முருகன் வந்திருந்தால், பிரச்சினை எப்போதோ முடிஞ்சிருக்கும்.

+ முருகன் கோயிலைச் சுற்றி மருத மலையில் சிறுத்தைகள் நடமாட்டம்; கூண்டு வைத்துப் பிடிக்க வனத்துறைக்கு பக்தர்கள் கோரிக்கை. **– செய்தி**

இதுக்கெல்லாம் முருகனிடம் கோரிக்கை வச்சா எதுவும் நடக்காதுன்னு, பக்தர்களுக்கு நல்லாவே புரியுது! முருகன் மீது அம்புட்டு நம்பிக்கை!

# மத்திய அரசு அலுவலகங்களில் குவியும் வடவர் ஆதிக்கம்!

# தேர்வாணையம் முற்றுகை; கைது




தமிழகத்தில் மத்திய அரசுத் துறைகளான வருமான வரித் துறை, சுங்கத் துறை, கலால் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உ.பி., பீகார் போன்ற வடமாநிலத்தவர் ஆதிக்கம் பெருகி வருகிறது. தமிழ்நாடு உள்பட தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 90 சதவீதம் பேர் தமிழ்நாட்டில் வடமாநிலங்களைச் சார்ந்தவர்களாகவே உள்ளனர். இதற்கு முக்கிய காரணம், மண்டல அளவில் நடத்தப்பட்டு வந்த தேர்வு முறைகள் 2006 ஆம் ஆண்டுக்குப் பிறகு உச்சநீதிமன்றத் தீர்ப்பால் அகில இந்தியத் தேர்வுகளாக மாற்றப்பட்டதுதான் காரணம். இந்தத் தீர்ப்பில்கூட 50 சதவீத இடங்களை மண்டல அளவில் தேர்வு செய்யலாம் என்று உச்சநீதிமன்றம் பரிந்துரை செய்தும், நடுவண் ஆட்சி அதை ஏற்காமல், அகில இந்திய அளவிலேயே நடத்தியது.

அகில இந்திய தேர்வு முறை காரணமாக - லக்னோ, பாட்னாவிலுள்ள தேர்வுக்கான பயிற்சி நிறுவனங்கள் ஊழல் முறைகேடுகளைச் செய்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு குறுக்கு வழியில் அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்டு விண்ணப்பத்தாரர்களை தேர்வுகளில் வெற்றி பெற வைத்து விடுகின்றனர். ஒரே ஊர், அதிலும் ஒரே வீதியைச் சார்ந்தவர்களே ஏராளமாக தேர்வு செய்யப்படுவதிலிருந்தே இந்த மோசடியைப் புரிந்து கொள்ள முடியும். அது மட்டுமின்றி, வினாத்தாள் ஆங்கிலத்தோடு, இந்தியிலும் இருப்பது அவர்களுக்கு வாய்ப்பாக அமைந்து விடுகிறது. இந்த வாய்ப்பு தமிழ்நாட்டுக்கு இல்லை; தமிழில் கேள்வித்தாளும் இல்லை; தமிழிலும் விடை எழுத வாய்ப்பில்லை. எனவே, அகில இந்திய தேர்வு முறையை நீக்கம் செய்து, மாநில அளவிலே தேர்வுகள் நடத்தக் கோரியும், மாநில மொழிகளில் தேர்வுகள் நடத்தக் கோரியும் 17.7.2014 அன்று சென்னையிலுள்ள தென் மண்டல மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுமத்தை முற்றுகையிடும் போராட்டம் நடந்தது.

திராவிடர் விடுதலைக் கழகம், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, எஸ்.டி.பி.அய். கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம், மே 17, இளந்தமிழகம் இயக்கம், தமிழ்நாடு மக்கள் கட்சி ஆகிய அமைப்புகள் கூட்டாக இணைந்து நடத்திய இந்தப் போராட்டத்துக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். வேல் முருகன் (தமிழக வாழ்வுரிமை கட்சி), அப்துல் சமது (த.மு.மு.க.), செந்தில் (இளந்தமிழகம்), கரு. அண்ணாமலை

(4 ஆம் பக்கம்)

## தேர்வு மய்யத்தின் முன் கழகத்தினர் திடீர் முற்றுகை; கைது!

தமிழ்நாட்டில் செயல்படும் மத்திய அரசு அலுவலகங்களில் வடநாட்டவர் ஆதிக்கத்தைக் கண்டித்து ஜுலை 17 ஆம் தேதி முற்றுகைப் போராட்டம் நடந்தது. இந்த நிலையில் வடநாட்டில் தேர்வுகள் நடத்தியதில் நடந்த முறைகேடுகளால் கடந்த ஓராண்டாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தேர்வுகள் மீண்டும் 20 ஆம் தேதி நடத்தப்படும் செய்தி, 19 ஆம் தேதி கிடைத்தவுடன் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் உடனடியாக களத்தில் இறங்கினர். கடந்த 20 ஆம் தேதி திருவல்லிக்கேணி லேடி வெலிங்டன் பகுதியில் தேர்வுகள் நடப்பதை அறிந்து தேர்வு மய்யத்துக்கு எதிரே சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தத் திரண்டனர்.

“மாநில அளவில் தேர்வுகளை நடத்து; தமிழில் வினாத் தாள் வழங்கு” என்று முழக்கமிட்டனர். மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு. தனசேகரன், கழக வழக்கறிஞர் துரை. அருண், சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் உமாபதி, ஜான், சுகுமாறன், வேழவேந்தன், ஏசு, தெட்சிணாமூர்த்தி, விஜய. இரணியன், விழுப்புரம் அய்யனார், காஞ்சி மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் தினேஷ், செங்குட்டுவன் உள்ளிட்ட 30 தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர் கள் அனைவரும் கைது செய்யப்பட்டு மாலையில் விடுவிக்கப் பட்டனர்.



## தலையங்கம்

# சமஸ்கிருத வாரம்!

‘சமஸ்கிருத வாரம்’ கடைபிடிக்க வேண்டும் என்று மோடி ஆட்சியில் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் வலியுறுத்தியிருப்பது, சி.பி.எஸ்.ஈ.போன்ற மத்திய அரசு கட்டுப்பாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமல்ல, தமிழக அரசின் கீழ் செயல்படும் பள்ளிகளுக்கும்தான். பல்வேறு அரசியல் கட்சிகள் இதை எதிர்த்திருப்பதோடு, தமிழக முதல்வரும் எதிர்த்து பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். பாரதிய ஜனதா கட்சி ஒன்றைத் தவிர, அநேகமாக அனைத்துக் கட்சிகளும் இந்தத் திணிப்புக்கு எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளது பாராட்டி வரவேற்கப்பட வேண்டியதாகும்!

சமஸ்கிருதம் – ஒரு மொழி மட்டுமல்ல; அது, பார்ப்பன மேலாதிக்கத்தின் குறியீடும் ஆகும். மோடியின் பா.ஜ.க. ஆட்சி, பார்ப்பனப் பண்பாடே இந்தியப் பண்பாடு என்ற கொள்கைப் பார்வையோடு இந்த முயற்சிகளில் இறங்கியிருப்பதை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவிலேயே ‘சமஸ்கிருதத்தை’ பேசுவதாக 2001 மக்கள் தொகை அறிக்கையில் பதிவு செய்திருப்போர் 14,135 பேர் மட்டுமே. இதுவும்கூட 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 49,736 ஆக இருந்து 10 ஆண்டுகளில் பாதியாகக் குறைந்து விட்டது. சடங்குகள், சாஸ்திரங்கள், வழிபாடுகளின் மொழிக்கான தகுதி சமஸ்கிருதத்துக்கு மட்டுமே உண்டு என்று பார்ப்பனர்கள் தங்களின் ‘வேத கலாச்சாரத்தை’ திணிக்கிறார்கள். இந்தியாவின் தேசிய மொழிக்கான தகுதியுடையது ‘சமஸ்கிருதம்’ தான் என்பதே ஆர்.எஸ்.எஸ். கொள்கை. இதை ஆர்.எஸ்.எஸ்.சுக்கு கொள்கை வகுத்த அதன் தலைவர் கோல்வாக்கர் எழுத்து மூலம் பதிவு செய்துள்ளார். (‘Bunch of thoughts’ நூல்) திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது தமிழ். இந்தோ-ஜெர்மானிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததுதான் சமஸ்கிருதம் 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆய்வாளர் சர். வில்லியம் ஜோன்ஸ் முன் வைத்த கருத்து இது. அப்படியே ஹூம்போல்ட், மாக்ஸ்முல்லர் போன்றோர் இதை வழி மொழிந்து, ஆரிய பெருமையைப் பேசினர்.

“பிராமணர்கள் தங்கள் சொந்த மொழி (சமஸ்கிருதம்), இலக்கியம், மதம் ஆகியவற்றின் தாக்கத்துக்கு உட்பட்டிருக்கும் உன்னதமான இந்துக்கள்” என்று உச்சி மீது தூக்கி வைத்து ஆடினார், ஜெர்மானியரான மாக்ஸ் முல்லர்.

பார்ப்பனப் பண்பாட்டின் அடையாளமாக சமஸ்கிருதத்தை முன்வைத்து, ‘இந்து’, ‘இந்திய தேசியம்’, ‘இந்தியப் பண்பாடு’ என்ற கருத்தாக்கத்தை அமெரிக்காவில் 1875 இல் உருவான ‘தியாசபிக்கல் சொசைட்டி’ (பிரம்ம ஞான சபை) முன் மொழிந்தது. இதை உருவாக்கிய கர்னல் ஓல்காட், பிளாவுட்ஸ்கி அம்மையார் போன்றோர் ‘சமஸ்கிருதத்தை’ தேசியப் பொது மொழியாக்கி, ‘இந்திய தேசிய உணர்வை’ வளர்த்தெடுக்க தியாசபிக்கல் சொசைட்டியின் தலைமையகத்தை பம்பாய்க்கு மாற்றினார்கள். ‘ஆரிய வர்த்தத்தைச் சார்ந்தவர்கள்’ என்ற பெருமிதத்தை உருவாக்குவதே தமது தலையாய நோக்கம் என்று புறப்பட்ட பிரம்ம ஞான சபையில், அயர்லாந்து நாட்டிலிருந்து வந்த அன்னிபெசன்ட்டும் சேர்ந்து கொண்டார். பார்ப்பனர்கள் பூரித்து மகிழ்ந்தார்கள். பார்ப்பன மேலாதிக்கத் திணிப்பு இப்போதும் தொடரவே செய்கிறது. அதனால்தான் மோடி ஆட்சியில் மாநிலங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் இந்திய மொழிகளுக்கு எல்லாம் தாய் சமஸ்கிருதம் என்று கூறுகிறது.

இந்தியாவில் நடுவண் ஆட்சியில் அதிகாரத்தைத் தொடர்ந்து கைப்பற்றி வரும் பார்ப்பன அதிகார வர்க்கம், சமஸ்கிருதப் பண்பாட்டைத் திணிப்பதில் தீவிரம் காட்டி வருகிறது. 1967 இல் சாகித்ய அகாடமி, சிறந்த சமஸ்கிருத படைப்புகளுக்கு விருது வழங்கும் திட்டத்தை அறிவித்தது. ஆனால், எந்தப் படைப்பும் வரவில்லை. 2009 இல் தான் சத்யவாத் சாஸ்திரி எனும் பார்ப்பனர், சமஸ்கிருத படைப்புக்காக ‘ஞான பீட’ விருது பெற்றார். 1974 முதல் அகில இந்திய வானொலி சமஸ்கிருத செய்தியை நாள்தோறும் ஒலிபரப்பி வருகிறது. 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பார்ப்பன மேலாதிக்கத்திலுள்ள இந்திய விண்வெளித் துறை அதன் முதல் அய்ந்து செயற்கைக் கோள்களுக்கும் ‘பிரித்வி, அக்னி, ஆகாஷ், நாகீ, திரிசூல்’ என்ற சமஸ்கிருதப் பெயர்களையே சூட்டியது. இந்தியாவின் முதல் போர் விமானத்துக்கும் ‘எச்.ஏ.எல்.தேஜாஸ்’ என்ற சமஸ்கிருதப் பெயரையே சூட்டினார்கள். சமஸ்கிருதத்துக்காக இந்தியா முழுதும் 17 பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன. இதில் நடுவண் அரசே புதுடில்லியில் மட்டும் இரண்டு சமஸ்கிருத பல்கலைக்கழகங்களை நடத்துகிறது. ஒன்று 1962 இல் தொடங்கப்பட்ட “லால்பகதூர் சாஸ்திரி கேந்திய சமஸ்கிருத வித்யா பீடம்”; மற்றொன்று 1970 இல் தொடங்கப்பட்ட “இராஷ்டிரிய சமஸ்கிருத சன்ஸ்த் தான்”. இந்திய அரசு சின்னத்தில் இலட்சினையாக பொறிக்கப்பட்டுள்ள ‘சத்யமேவ ஜெயதே’ (வாய்மையே வெல்லும்)வும்கூட சமஸ்கிருதம்தான்.

> “ஆதிக்கம் செலுத்த விரும்பும் எந்த ஒரு வர்க்கமும் தன்னையே ஒரு தேசமாக்கிக் கொண்டு ஒரு தேசம் முழுமைக்கும் தனது ஆளுமைக்குட்பட்டதாகவே வெளிப்படுத்த விரும்பும்”

என்று கூறுகிறார், இத்தாலிய மார்க்சிய அறிஞரான கிராம்ஷி.

இதே கருத்தை பெரியார் இவ்வாறு கூறுகிறார்:

> “ஆரியர்கள் இந்நாட்டில் என்று காலடி வைத்தார்களோ அன்று முதல் இன்று வரை, பலவித வஞ்சகங்களாலும், சூழ்ச்சிகளாலும் இந்நாட்டு மக்களை ஏமாற்றி அவர்களைச் சின்னாபின்னமாகப் பிரித்து, ஆபாசக் கற்பனைகளையும், நடத்தைகளையும், வேதமாகவும், மோட்ச சாதனமாகவும் ஆக்கி, இந்நாட்டு மக்களுக்கு அவர்களே ஆதிக்கக்காரர்களாகவும், ‘இகம்’, ‘பரம்’ இரண்டிற்கும் தர்மகர்த்தாக்களாகவும், சமுதாயம், அரசியல் இரண்டிற்கும் தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும், எஜமானர்களாகவும்கூடத் தங்களை ஆக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.” (‘குடிஅரசு’ 10.9.1949)

இன்றைக்கும் சமுதாயம் – அரசியல் இரண்டுக்கும் தாங்களே ‘எஜமானர்கள்’ என்பதை பார்ப்பனர்கள் வெளிப்படுத்துவதுதான் இந்த ‘சமஸ்கிருத வார’ அறிவிப்பு.

# கழகத்தின் தீர்மானங்கள் விளக்க பரப்புரைக் கூட்டங்கள் தொடங்கின



சு.க.ப.க. தோழர்கள் நடத்திய நாடகம்

கோவையில் கூடிய திராவிடர் விடுதலைக் கழகச் செயலவையில் நிறைவேற்றப்பட்டபடி தீர்மானங்கள் விளக்கப் பொதுக் கூட்டம் திட்டமிட்டபடி ஜூலை 15 ஆம் தேதி பழனியில் தொடங்கியது. அதே நாளில் ‘அகமண முறை அகற்றுவோம்’ என்ற முழக்கத்தை முன் வைத்து ஒரே ஜாதிக்குள் நிகழும் திருமணங்களால் உருவாகும் உடல் மனநலச் சீர்கேடுகளை விளக்கிடும் பரப்புரைப் பயணம் பழனியில் தொடங்கியது. திண்டுக்கல் மாவட்டத்தில் 10 நாள் இந்தப் பரப்புரைப் பயணம் நடக்கிறது. மாவட்டச் செயலாளர் நல்லதம்பி தலைமையில் நடந்த பயணத் தொடக்க விழா பொதுக் கூட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் க.சந்தானம், விடுதலை சிறுத்தைகள் கட்சிப் பொறுப்பாளர் உலக நம்பி, ஆதித் தமிழர் பேரவையைச் சார்ந்த திண்டுக்கல் நாகராஜன், த.பெ.தி.க. சார்பில் துரை. சம்பத், ‘தமிழ்ப் புலிகள்’ சார்பில் அழகி. ராவணன், தமிழர் விடுதலை முன்னணி நிறுவனர் பழனி சிவா, மாவட்ட தலைவர் பெரியார் நம்பி, பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத் தோழர்கள் அகமண முறைகேடுகளை விளக்கிடும் நாடகத்தை நடத்தினர். மக்கள் பெருமளவில் திரண்டு கருத்துகளைக் கேட்டனர். முன்னதாக பிற்பகல் 3 மணியளவில் தீபம் ஓட்டல் அரங்கில் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

### காரைக்குடியில்




இரண்டாம் நாளான 16.7.2014 அன்று காரைக்குடி அய்ந்து விளக்குப் பகுதியில் திராவிடர் விடுதலைக் கழக தொடக்க விழாவாக பொதுக் கூட்டம் பெரியார் முத்து தலைமையில், செல்வராஜ் முன்னிலையில் நடந்தது. உறவு கா.செ.பாலசுப்பிரமணியம், பேராசிரியர் கோச்சடை, தமிழக மக்கள் சனநாயகக் கட்சி மாவட்ட செயலாளர் சகுபர் சாதிக், இம்மானுவேல் பேரவை மாவட்ட செயலாளர் லெ.கிருட்டிணமூர்த்தி, காளையார் கோயில் நா. முத்துக்குமார், திராவிடர் கழகத் தோழர் பெரியார் குணா, கழகப் பொருளாளர் இரத்தினசாமி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். அரசியல் கட்சிகளிடம் விலை போகாமல் பெரியார் கொள்கைக்காக தன்மையற்ற தலைவர்களால் வழி நடத்தப்படும் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இளைஞர்கள் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று பேராசிரியர் கோச்சடை வேண்டுகோள் விடுத்தார். காரைக்குடிக் கூட்டத்தை முடித்துக் கொண்டு, சென்னை திரும்பிய கழகத் தலைவர், பொதுச் செயலாளர் மத்திய தேர்வாணைய முற்றுகைப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

### நெல்லையில்

மூன்றாவது நிகழ்வாக - நெல்லை மாவட்டம் பாவூர் சத்திரத்தில் மாவட்ட கலந்துரையாடல் கூட்டமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. நெல்லை மாவட்ட கழகத் தலைவர் சு.வடிவேல் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் சு. அன்பரசு, மண்டலச் செயலாளர் கோ.அ.குமார், மாவட்டத் தலைவர் சி.அம்புரோசு, மாவட்ட செயலாளர் க.மதன், குமரி மாவட்டத் தலைவர் ஜா.சூசையப்பா, நெல்லை மாவட்ட செயலாளர் சி.ஆ.காசிராசன், குமரி மாவட்ட அமைப்பாளர் அ.சேவியர், நெல்லை மாவட்ட தலைவர் சு.வடிவேல், கீழ்பாவூர் கழகத் தோழர் அ.மாசிலாமணி, கழகப் பரப்பரைச் செயலாளர் பால். பிரபாகரன், பொருளாளர் இரத்தினசாமி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். முன்னதாக துரை. தாமோதரன், ‘மந்திரமா? தந்திரமா?’ நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதி வரை மக்கள் திரண்டிருந்து கருத்துகளைக் கேட்டனர்.

தமிழ்நாடு மாணவர் கழக மாநில அமைப்பாளர் சிவக்குமார் இந்தப் பயணத்தில் தொடர்ந்து பங்கேற்று வருகிறார்.

பயணத்தின் இரண்டாம் சுற்று ஜூலை 23 முதல் மன்னார்குடியிலிருந்து தொடங்குகிறது.


கழகத்தின் பரப்புரை வாகனம்

## ‘முன்னோடி – பின்னோடி’ வாதங்களுக்கு மறுப்பு (4)

# பெண்ணுரிமைக்கு எதிராக வந்த ‘தமிழ்த் திருமணம்’

***பு**ரோகித விலக்கு – இந்தி எதிர்ப்பு – தனிநாடு கோரிக்கைகளுக்கு பெரியாருக்கு முன்னோடியாக செயல்பட்டவர்கள் சைவத் தமிழறிஞர்கள் என்று எழுதிய தோழர் பெ.மணியரசன் கட்டுரைக்கான மறுப்பு.*

‘புரோகித நீக்கம்’ என்ற கொள்கைக்கு முன்னோடியாக செயல்பட்ட பெரியார் இயக்கம் - சுயமரியாதைத் திருமணங்களில் ‘புரோகித நீக்கம்’ என்பதையும் தாண்டி முன்னோக்கிச் சென்றதை 10.7.2014 இதழில் குறிப்பிட்டோம்.

28.5.1929இல் அருப்புக்கோட்டை அருகே சுக்கில நத்தத்தில் ஒரே மேடையில் 3 புரோகித மறுப்பு திருமணங்கள் நடந்தன. அது குறித்து ‘குடிஅரசு’ இதழில் வெளிவந்த செய்தி இது:

*சாதாரணமாய் அணிந்திருக்கும் நகையன்றி, திருமணத்துக்கென வேறு நகை எதுவுமின்றி, பட்டாடை விலக்கி, கதராடை அணிந்து (அதுவும் புத்தாடை அன்று . பெரியாரும் அதுவரை கதரை ஆதரித்துக் கொண்டுதான் இருந்தார்) ஒரு முழு சுயமரியாதைத் திருமணமாக அருப்புக்கோட்டை சுக்கிலநத்தத்தில் 28-5-1928 அன்று மூன்று திருமணங்கள் ஒரே மேடையில் நடந்தேறியது, அந்தத் திருமணத்தில் ஒரு வயதான மூதாட்டி குத்துவிளக்கு ஏற்ற நெருப்புக் குச்சியை உரைக்கும் போது, மணமகனின் தகப்பனாரான ஸ்ரீ துரைசாமி ரெட்டியார் எழுந்து “எதற்காக இங்கு விளக்குப் பற்ற வைக்கவேண்டும்? பகல் 11-00 நேரத்துக்கு இங்கு இருட்டாகவா இருக்கிறது? அனாவசியமாக அர்த்த மில்லாததைச் செய்யாதீர்கள்” என்று தடுத்து விட்டார். தவிர வேறெந்த சடங்கையும் வைத்துக் கொள்ளவில்லை. மற்றபடி ஒரே ஒரு சடங்கில்தான் எல்லோரும் ஈடுபட்டிருந்தார்கள். அதாவது பகல் 12 மணி முதல் இரவு 2-00 மணி வரையிலும் வந்திருந்த சுமார் 5000 பேருக்குக் குறையாமல் சோறுபோட்ட வண்ணமாக இருந்தார்கள் (குடிஅரசு 3-6-1928 பக்12) அதுதான் குடிஅரசு குறிப்பிடும் அந்த ஒரே ஒரு சடங்கு.*

அதே நாளில் 12-00 மணிக்கு மூன்றாவது திருமணத்தையும் நடத்தி முடித்துவிட்டு, மதுரைக்கு சென்று அங்கேயும் நண்பகல் 1-30 மணிக்கு மற்றொரு முழு சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைத்ததும் இதே காலகட்டத்தில் தான்.

இவற்றையெல்லாம் விட திருமணத்தை நிகழ்த்தி வைக்க வந்த பெரியாரை, மணமகள் இரத்தினம்மாள் (அவர் ஒரு தீவிர குடிஅரசு வாசகர்; சுயமரியாதைக் கொள்கையர்) “ஞானக் குணா நவ மணியே வருக” என்ற பாடலைப் பாடி வரவேற்றதும் (1928இல்) ஒரு கூடுதல் செய்தி.

மேலும் பெரியார் பெண் விடுதலைக்கு பிள்ளைப் பேறும் ஒரு தடையே என்ற அடிப்படையில் ‘கர்ப்ப ஆட்சி’ (இன்றைய குடும்பக் கட்டுப்பாட்டு முறை) குறித்து சுயமரியாதை திருமண மேடைகளில் 1928 இல் பேசத் தொடங்கியிருந்தார்.

ஆக, தனித் தமிழ் இயக்கம் பார்ப்பன, வடமொழி விலக்கு திருமணங்களுக்கு முன்னோடியாக இல்லை என்பது மட்டுமல்ல; ஒரு சரியான பின்னோடியாகவாவது இருந்தார்களா என்றால், அதுவும் இல்லை.

1937-1939 ஆம் ஆண்டுகளில் சுயமரியாதை இயக்கமும், தனித் தமிழ் (சைவ) இயக்கமும் இந்தி பார்ப்பனியம் என்ற பொது எதிரியை வீழ்த்தும் ஓரம்ச சட்டத் திட்டத்தோடு இணைந்து செயல் பட்டனர். கருத்தியல் அடிப்படை என்றில்லாமல், நடைமுறை தந்திரத்தின்பாற்பட்டதாய் அமைந்தது அந்த கூட்டணி (இரண்டாம் உலகப் போரினால், காங்கிரசு அமைச்சரவை பதவி விலக) கட்டாய இந்தியும் கூடவே ஒழிந்ததன் பின் பழையபடியே அந்தக் கூட்டணி பிரிந்தது.

அப்போது தான் தனித்தமிழ் இயக்கத்தார் (சைவர்கள்), தமிழர்கள் சுயமரியாதை இயக்கத்தின் பால் பற்று கொண்டு பார்ப்பனர், சமஸ்கிருத விலக்கு மட்டுமின்றி சாஸ்திர, சடங்குகள் மறுப்பு, ஆணாதிக்க எதிர்ப்புப் பார்வையில் தாலி மறுப்பு

### ‘கண்டதைப் படிப்பவன்’

போன்ற புரட்சிகர கூறுகள் கொண்ட சுயமரியாதை திருமணங்களை செய்துகொள்ள தலைப்பட்டு விடுவார்களே என்ற அச்சத்தோடு, இந்தி எதிர்ப்புப் போர் நடந்து முடிந்த சில மாதங்களுக்குள் (சைவர்கள்) ஒன்று கூடி தமிழர் திருமண மாநாட்டைச் சென்னையில் 16-7-1939 அன்று நடத்தினர் (கூடியது சைவர்கள்; நடந்தது தமிழர் திருமண மாநாடு) பார்ப்பனர் சடங்கு வடமொழி விலக்கிய பகுத்தறிவு சார்ந்த - திருமணம் என்பது ஒப்பந்தம் தான்; தாலி என்பது அடிமைச் சின்னம் - எனும் பெண்ணுரிமை பேணும் சுயமரியாதைத் திருமணத்தை தமிழர் திருமணமாக வரையறுத்தார்களா என்றால் அதுதான் இல்லை.

“வடமொழி மந்திரங்களுக்குப் பதிலாக சைவப் பாடல்கள். பார்ப்பனர்களுக்குப் பதிலாக சைவர்கள். இவ்வளவுதான் சைவர்கள் வகுத்த தமிழர்த் திருமணம்” (குமரன் 27-7-1939)

1916 ஆம் ஆண்டு மறைமலை அடிகளார் தொடங்கிய ‘தனித் தமிழ் இயக்கம்’ மொழித்தூய்மை மட்டும் பேசவில்லை; சமற்கிருதம் உள்ளிட்ட பிற மொழிச் சொற்களைத் தமிழிலிருந்து நீக்குவது போல், தமிழர் வாழ்வியல் சடங்குகள் ஆகியவற்றிலிருந்து சமற்கிருதத்தையும், ஆரிய புரோகிதர்களையும் நீக்குவதையும் வலியுறுத்தியது. பார்ப்பனர்களுக்கு பதிலாக தமிழில் தமிழர்களைக் கொண்டு குடும்பச் சடங்குகளையும் ஆன்மிக நிகழ்வுகளையும் நடத்திக் கொள்ள வேண்டும் என்று மறைமலை யடிகளார் வலியுறுத்தினார்.( அதாவது, சைவர்களைக் கொண்டு சைவ திருமறைகளை ஓதி நடத்த வேண்டும் என்றார்)

“அரசியல் இயக்கங்கள் செயல்படும் காலம் வந்தபின், பெரியார் பார்ப்பனிய எதிர்ப்பைப் பெரும் வீச்சில் கொண்டு சென்றார். பட்டி தொட்டியெங்கும் பார்ப்பனிய ஆதிக்க எதிர்ப்பு பரவியது. இதற்கெல்லாம் முன்னோடிகளாக, அடித்தளம் அமைத்தோராகத் தமிழறிஞர்கள் இருந்தார்கள் என்பதை இன்றையத் தமிழுணர்வாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று இப்போது 2014இல் கூறுகிறார் தோழர் மணியரசன்.

இதே கருத்தை 1929 இல் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் (இப்போது சைவ சித்தாந்தப் பெருமன்றம்) மாத இதழான ‘சித்தாந்தம்’ ஜூன் மாத இதழில், அவ்விதழ் ஆசிரியர் ம.பாலசுப்பிரமணிய முதலியார் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். “சுயமரியாதை இயக்கத்திலுள்ள நல்ல பகுதி களெல்லாம் மறைமலையடிகள் ஞானத் தந்தையாக அருள் சுரந்து இட்ட பிச்சையென்பது தமிழ்நாடு அறிந்ததே. இப்பிச்சை வாங்கிப் பிரச்சாரம் செய்பவர்கள் பிச்சையிட்ட பிதா செய்த நன்றியை மறப்பாராயின் அப்பிரச்சாரம் முழுமையும் கடலிற் பெய்த மழை போல் ஒரு பயனும் தராது போகும்.”

அன்று பாலசுப்ரமணிய முதலியார் எழுதியதை இன்று பெ.மணியரசன் பேசுகிறார், அவ்வளவுதான்.

பெ.மணியரசன் பெரியாருக்கு முன்னோடிகளாக புத்தரையோ, சித்தர் களையோ, அயோத்தி தாசரையோ, சமகாலம் எனினும், ஏன் அம்பேத்கரையோ கூறியிருந்தால்கூட புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் மறைமலை அடிகளை முன்னோடியாகக் கூறுவது சரியா?

இந்தி எதிர்ப்புக்கும் தனித்தமிழ் நாட்டு கொள்கைக்கும் பெரியாருக்கு இந்த தமிழறிஞர்கள் தான் முன்னோடியாக இருந்தார்களா?

‘1937’ இல் “சென்னை மாகாண முதலமைச்சராக ஆனவுடன் இராஜாஜி, 1938 இல் ஒரு பகுதி பள்ளிக் கூடங்களில் வெள்ளோட்டமாக இந்தியைக் கட்டாயப் பாடமொழியாக்கினார்.(பாடமொழியாக அல்ல; கட்டாயப்பாடமாகத்தான் ஆக்கினார்) அந்த இந்தித் திணிப்பைத் தமிழ் அறிஞர்கள் எதிர்த்தனர். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியார் கலந்து கொண்டு முன்னெடுத்தப் பின், அது பெரும் வீச்சைப் பெற்றது. தமிழகம் தழுவிய எழுச்சி ஏற்பட்டது” என்கிறார் பெ.மணியரசன். ஆக, இந்தி எதிர்ப்பிலும் தமிழறிஞர்கள் தான் முன்னோடிகள். பெரியார் பின்னோடியே என்பதைத்தான் வேறு வகையில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு தீங்கை, தீச்செயலை எதிர்க்க வேண்டும் என்று பலருக்குத் தோன்றும்; நினைப்பவர்களைவிட செயல்படுபவர்கள்தான் வெற்றிக்குக் காரணமாக இருப்பார்கள். நடைமுறையில் நாம் பலரைக் காண்கிறோம். நம்மிடம் பேசும் போதெல்லாம், ‘நீங்கள் சொல்வதெல்லம் சரிதான்’ என்பார்கள். ‘எனக்குப் பல ஆண்டுகளாகவே இந்த கருத்து உண்டு’ என்பார்கள். மனைவியை, கணவனை, குடும்பத்தை, தெருவை, ஜாதியை, ஊரை, கட்சியைக் காரணம் காட்டி ஜாதி ஒழிப்பு, ஜாதி மறுப்புத் திருமணம், பகுத்தறிவு, பொதுவுடைமை என்று பலவற்றில் பின்வாங்குவதைப் பார்க்கிறோம்.

அதனால்தான் ‘சிந்திக்காத மடையனும், சிந்தித்து சரி என்று உணர்ந்ததை நடைமுறைப்படுத்தாத அறிவாளியும் சரிநிகர் சமமானவர்களே’ என்கிறார்கள். இந்த எடுத்துக்காட்டு, இந்தி எதிர்ப்புப் போருக்காக அல்ல. பொதுவாகத்தான் கூறப்பட்டது.

இந்தி எதிர்ப்புப் போர் என்று பார்க்கிறபோதுகூட இந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டும் என்ற சிந்தனை கூட தமிழறிஞர்களுக்கு முதலில் வரவில்லை என்பது தான்.

சற்று விரிவாகப் பார்ப்போம்.

(அடுத்த இதழில்)

### கழகத்தின் களப்போராளி திருப்பூர் மூர்த்தி தாயார் முடிவெய்தினார்

**தி**ருப்பூர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் களப்போராளி பெரியார் தொண்டர் குமார் நகர் மூர்த்தி தாயார் ரத்தினாம்பாள் 27.06.14 அன்று அதிகாலை முடிவெய்தினார். குமார் நகர் மூர்த்தி, அவரின் தம்பி ரங்கநாதன் ஆகியோர் தமது தாயாரின் இறுதி நிகழ்வை சடங்குகள் துளியுமின்றி (மின் மயானத்தில் ஒலிக்கப்படும் பாடல் உள்பட) நடத்தினர்.



இறந்த ரத்தினாம்பாள் படத்திறப்பு மூர்த்தி இல்லத்தில் 29.06.14 அன்று மாலை 5 மணிக்கு நடைபெற்றது. படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மாநில செயலவைத் தலைவர் துரைசாமி, மாநில அமைப்பு செயலாளர் தாமரைக்கண்ணன், கோவை மண்டல செயலாளர் பல்லடம் விஜயன், கோவை புறநகர் செயலாளர் இராமச்சந்திரன், மதுரை யாழ் மொழி, அறிவியல் மன்ற மாநில அமைப்பாளர் சிவகாமி , சுசிலா, ஜெய் காந்தி, டாக்டர் பெரியார் செல்வி, மதுரை மண்டல அமைப்பு செயலாளர் ராவணன், கோவை மாவட்ட சு.க.ப.க செயலாளர் அ.ப.சிவா, முகில்ராசு, உடுமலை மலரினியன், மாநகர செயலாளர்குணசேகரன், ஜீவா நகர் குமார், மேட்டூர் பாலு, மாஸ்கோ நகர் பாலு, பல்லடம் வடிவேலு, பரிமளராசன் மற்றும் 50 க்கும் மேற்பட்ட கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

DATE OF PUBLICATION 23.07.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கோவையில் கழகத்தின் மக்கள் சந்திப்பு இயக்கம்

*10.6.2014* காலை 10 மணிக்கு காந்திபுரம் ஏ.மு.மு சாலையில் மக்கள் சந்திப்பு இயக்கத்தை கோவை மாநகர் மாவட்டத் தலைவர் நேருதாஸ் தொடங்கி வைத்தார். நிகழ்வில் மாநிலப் பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, கோவை புறநகர் மாவட்டத் தலைவர் மேட்டுப் பாளையம் இராமச்சந்திரன், பொள்ளாச்சி மாவட்டச் செயலாளர் நிர்மல்குமார், கோவை மாவட்டச் செயலாளர் பிரசன்னா, கோவை மாநகர பொருளாளர் கிருஷ்ணன், "தோழர் அறக்கட்டளை" சாந்தகுமார், வீரபாண்டிபாபு, கிணத்துக்கடவு இராமகிருஷ்ணன், வழக்கறிஞர் பன்னீர்செல்வம், பத்மநாபன், காவ லாண்டியூர் இராஜேந்திரன், காவ லாண்டியூர் இரகுபதி, பள்ளிபாளை யம் இரமேஷ், சென்னிமலை இசைக் கதிர், சத்தியராஜ், பல்லடம் வடிவேல், ஓட்டுநர் அவிநாசி, உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

முதல்நாள் நிகழ்ச்சியில் நிர்மல் குமார் துண்டறிக்கையை பொது மக்களுக்குத் தரும்போது, காவல் துறையினர் குறுக்கிட்டு, கருப்பு சட்டை அணிந்து கொண்டு, துண் டறிக்கை விநியோகம் செய்யக்கூடாது மீறினால் கைது செய்வோம் என்றனர். "எங்களைக் கருப்புச் சட்டை அணியக்கூடாது என்று சொல்ல உங்களுக்கு என்ன அதிகாரம் உள்ளது? நாங்கள் சிறைசெல்ல அஞ்சமாட் டோம், என்று கூறி நமது தோழர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, துண்டறிக்கை விநியோகித்தனர். பிறகு கணபதி, சரவணம்பட்டி பகுதியில் மக்கள் சந்திப்பு நடந்தது. சாந்தகுமார் ரூ1000/- நன்கொடையாக வழங்கினார்.

**11.6.2014** – இரண்டாம் நாள் மக்கள் சந்திப்பில் நமது தோழர்களைச் சந்தித்த மதுரையைச் சேர்ந்த கார்த்தி, அவரது நண்பர்கள் 20 பேருடன் சேர்ந்து, நமது இயக்கத்தில் இணைந்து பணியாற்ற விரும்புவதாகக் கூறினார். சின்னியம்பாளையத்தில் நடந்த மக்கள் சந்திப்பில் நல்ல வரவேற்பு இருந்தது.

**12.6.2014** – காலையில் புளிய குளம், ராமநாதபுரம் பகுதிகளில் மக்கள் சந்திப்பு நடந்தது. இதனிடையே, இராமநாதபுரம் பாரீஸ் மகாலில் வழக்கறிஞர் தர்மலிங்கம் திருமண நிகழ்வில் கலந்து கொண்ட தோழர்கள், மணமக்களுக்கு பெரியார் புத்தகங்களை கொடுத்து வாழ்த்தினர். பிறகு காளப்பட்டி பகுதியில் தோழர்கள் மக்களைச் சந்தித்தனர்.

**13.6.2014** – நான்காம் நாள் மக்கள் சந்திப்பு கருமத்தம்பட்டியில் நடந்தது. மாலை சூலூர் பகுதியில் மக்கள் சந்திப்பு நடந்தது. அப்பகுதியில் நமது தோழர்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது . சூலூர் தமிழ்ச்செல்வி நம்முடன் மக்கள் சந்திப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இரவுவரை மக்கள் சந்திப்பில் ஈடுபட்ட தோழர் களுக்கு சூலூர் தமிழ்ச் செல்வி இரவு உணவு வழங்கினார்.

**14.6.2014** – காலை ஒண்டிப் புதூர் பகுதியில் மக்கள் சந்திப்பு நடந்தது. இஸ்லாமிய தோழர் ஒருவர் நமது தோழர்களுடன் விவாதித்து, பிறகு நமது விளக்கத்தில் திருப்தி அடைந்து நம்மை தேநீர் அருந்தி விட்டுத் தான் போக வேண்டும் என்று வற்புறுத்தி தேநீர் வழங்கினார். மாலை ஹோப் காலேஜ் மற்றும் பீளமேடு பகுதிகளில் மக்கள் சந்திப்பு நடந்தது.

**15.6.2014** –காலையில் உக்கடம் பகுதியில் மக்கள் சந்திப்பு நடந்தது. மக்கள் சந்திப்பில் ஈடுபட்டிருந்த தோழர்களை கழகத் தலைவர் கொளத் தூர் மணி சந்தித்து உரையாடினார். டவுன்ஹால் பகுதியில் நடந்த சந்திப்பின்போது, அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவக்குமாரிடம், தவ்கீத்ஜமாத் அமைப்பைச் சார்ந்த சில முஸ்லிம் தோழர்கள், "இஸ்லாமிய மதத்தைப் பற்றி உங்கள் அமைப்பு சார்பில் வெளியிடப்பட்டுள்ள குறுந் தகடுகள் அல்லது புத்தகங்கள் உள்ளனவா என்று வினவினர். அப்படி நீங்கள் வெளியிடும் பட்சத்தில் அது குறித்து, உங்கள் அமைப்பினருடன் பொது விவாதம் நடத்த நாங்கள் தயாராக உள்ளோம் என்று கூறி, 10க்கு மேற்பட்ட புத்தகங்களை வாங்கினர். மாலையில் அன்னபூர்ணா கலையரங் கில் நடந்த, இயக்குநர் மணிவண்ணன் எழுதி, எழுத்தாளர் பாமரன் தொகுத்து வெளியிட்ட, "மணித்துளிகள்" நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட, நடிகர் சத்தியராஜ் பெற்றுக் கொண்டார். இந் நிகழ்வில் மக்கள் சந்திப்பு தோழர்களும் கலந்து கொண்டனர்.

**16.6.2014** – காந்திபுரம் 100 அடிரோடு பகுதியில் மக்கள் சந்திப்பு நடந்தது. "இந்துத்துவா" நண்பர்களும் நமக்கு நன்கொடை அளித்தனர். நிகழ்வின்போது கோவை மண்டலச் செயலாளர் பல்லடம் விஜயன், சு.க.ப.கவின் அ.பசிவா ஆகியோர் தோழர்களை உற்சாகப்படுத்தினர்.

**17.6.2014** – சாய்பாபா பகுதியில் நடந்த மக்கள் சந்திப்பின்போது, நமது தோழர்களைச் சந்தித்த கோபால் என்ற தோழர், "இக்கால இளைஞர்கள் சினிமா, புகை, மதுப்பழக்கம் என்று போய்க் கொண்டிருக்கையில், உங்களைப் போன்ற இளைஞர்கள், இதுபோன்ற பிரச்சாரங்களை செய் வது, என்னைப் போன்றவர்களுக்கு மனநிறைவைத் தருகிறது என்றார்.

**18.6.2014** – இடையர்பாளையம் பகுதியில் மக்கள் சந்திப்பு நடந்தது. ஒரு முடிதிருத்தும் கடையில் இருந்த ஹைதராபாத்தைச் சார்ந்த சகரியா என்ற வாடிக்கையாளர், தான் பெரி யாரைப் பற்றி கேள்விப்பட்டுள்ளதாக வும், பெரியார் புத்தகங்கள் தனக்கு தேவை என்றும் கூறி புத்தகங்களை வாங்கிக் கொண்டு, நன்கொடையும் அளித்தார். பரப்புரை செய்யும் இடங் களில் தோழர்கள் குருதிக் கொடை தேவைப்பட்டால் தங்களைத் தொடர்பு கொள்ளுமாறுகூறினர். பொதுமக்களும் தாங்களும் குருதிக் கொடை செய்ய தயாராக இருப்ப தாகவும், தேவைப்படும் போது தங்களைத் தொடர்பு கொள்ளுமாறும் கூறி, செல்பேசி எண் மற்றும் முகவரியைத் தந்தனர்.

**19.6.2014** – கணுவாய்பகுதியில், ஆர்.எஸ்.எஸ் அமைப்பைச் சார்ந்த ஒருவர், தோழர்களிடம், உங்கள் குழுவில் முஸ்லிம் அல்லது கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் உள்ளீர்களா என்று கேட்டார். தோழர் நிர்மல் குமார் அவரிடம், இங்கு இல்லை, ஆனால் எங்கள் அமைப்பில் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மதங்களைச் சார்ந்த தோழர்களும் உள்ளனர் என்று விளக்கினார். அகமணமுறை பற்றி பரப்புரை செய்யும்போது, சித்ரா என்ற பெண்மணி, தான் ஊனமுற்ற குழந்தைகளுக்கான பள்ளியில் பணி புரிந்ததாகவும், அங்கு வரும் பெரும் பாலான குழந்தைகள், ஜாதி உறவு களுக்குள் நடக்கும் திருமணத்தின் காரணமாக பிறப்பதை அங்கிருக்கும் போது தான் அறிந்து கொண்ட தாகவும், ஊனமுற்ற குழந்தைகளைச் சேர்க்க வேண்டி இருந்தால், தொடர்பு கொள்ளுமாறு கூறி, ஊனமுற்ற குழந்தைகளுக்கான பள்ளி மற்றும் அதன் தொலைதொடர்பு எண்ணைத் தந்தார்.

**20.6.2014** – பாப்பநாயக்கன் பாளையம் பகுதியில் நடந்த மக்கள் சந்திப்பின் போது ஈரோடு மாவட்ட அமைப்பாளர் சென்னிமலை செல்வ ராசுவின் விளக்கத்தில் மகிழ்ச்சி யடைந்த தோழர் ஒருவர், நமது முயற்சியைப் பாராட்டி ரூ.500/-ஐ நன்கொடையாக அளித்தார். மேலும் கல்லூரி மாணவர் ஒருவரும் ஆர்வ முடன் புத்தகங்கள் வாங்கியதோடு அல்லாமல், தான் நமது இயக்கத்தில் இணைய விரும்புவதாகக்கூறி, தனது செல்பேசி எண்ணை அளித்தார். வெங்கிட்டாபுரம் பகுதியில் நமது பரப்புரை நோக்கங்களைப் பாராட்டிய பெரியவர் நன்கொடை வழங்கியதோடு, கட்டாயப்படுத்தி நமது தோழர்களை மோர் சாப்பிட வைத்து வழியனுப்பினார்.

**21.6.2014** – கடைசி நாள் மக்கள் சந்திப்பின்போது, காவலாண்டியூர் ஈஸ்வரன் மற்றும் கொளத்தூர் சூரியகுமார் தலைமையில் வந்திருந்த 40-க்கும் மேற்பட்டதோழர்கள், ஏற்கனவே மக்கள் சந்திப்பில் ஈடுபட்டிருந்த நமது தோழர்களுடன் இணைந்து, 4 குழுவாகப் பிரிந்து, காந்திபுரம் கிராஸ் கட்ரோடு, உக்கடம் டவுன்ஹால், போத்தனூர், சுந்தரா புரம், பூ மார்க்கெட் பகுதிகளில் மக்கள் சந்திப்பில் ஈடுபட்டனர். மக்கள் சந்திப்புநடந்த 10 நாட்களும் நமது தோழர்கள் தங்குவதற்கான இடம் மற்றும் உணவு வசதியினை சசிக்குமார் ஏற்பாடு செய்திருந்தார்.

10 நாட்கள் கோவையின் ஒவ் வொரு பகுதியிலும் நமது தோழர்கள் செய்த பரப்புரை மக்கள் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அது மிகையல்ல.

**செய்தி : கிருஷ்ணன்**
**(கோவை மாநகரபொருளாளர்)**

## வன்கொடுமை சட்டத்துக்கு ஆதரவாக கழக சார்பில் மனுதாக்கல்

பட்டியல் இன மக்களுக்கு பாதுகாப்புக் கவசமாக இருக்கும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீக்கம் செய்யக் கோரி 'வழக்கறிஞர் சமூக நீதிப் பேரவை' என்ற பெயரில் செயல்படும் பா.ம.க. ஆதரவு அமைப்பு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது. வழக்கறிஞர் பாலு, இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்துக்கு ஆதரவாக திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தன்னையும் இணைத்துக் கொள்ளுமாறு மனு தாக்கல் செய்துள்ளார். வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண் ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். இதே போல் தீண்டாமை ஒழிப்பு முன்னணி, விடுதலை சிறுத்தைகள் ஆகிய அமைப்பு களும் வராகி என்பவரும் மனுதாக்கல் செய்துள்ளனர். தலைமை நீதிபதி அக்னி ஹோத்ரி, எம்.எம். சுந்தரேஷ் ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த வழக்கை விசாரிக் கிறது. 'வழக்கறிஞர் சமூக நீதிப் பேரவை' சார்பில் வழக்கறிஞர் விஜயன் வாதாடுகிறார்.


(முதல் பக்கத் தொடர்ச்சி)

(த.பெ.தி.க.), திருமுருகன் காந்தி (மே 17), அருண்சோரி (தமிழ்நாடு மக்கள் கட்சி) ஆகியோர் முற்றுகைப் போராட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினர். தேர்வாணைய ஆணைய அலுவலகம் அமைந்துள்ள பள்ளிக் கல்வி வளாகத்தின் வெளியே கொளுத்தும் வெய்யிலில் நடந்த இந்த முற்றுகைப் போராட்டத்தில் 350 பேர் திரண்டிருந்தனர். இதில் 100க்கும் அதிகமாக தமிழக வாழ்வுரிமை கட்சியைச் சார்ந்த பெண்கள் திரண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மண்டல செயலாளர் அன்பு தனசேகர், தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் உமாபதி, ஜான் மற்றும் கழகத் தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். கைதான அனைவரும் சென்னை இராயப்பேட்டையில் உள்ள சமூக நலக் கூடத்தில் வைக்கப்பட்டு மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 24th July 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜூலை 31, 2014 | புரட்சி 13 | முழக்கம் 29 | விலை: ரூ.3.00


## ஒரே காலத்தில் தமிழகம் தழுவி – திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தி வரும்

# 4 பரப்புரை இயக்கங்கள்






***த**மிழின உரிமை மீட்பு தொடர் கூட்டங்கள்; அகமணமுறை எதிர்ப்பு வாகனப் பரப்புரைப் பயணம்; மூடநம்பிக்கைகளுக்கு எதிராக கிராமம்தோறும் வாகனப் பரப்புரைப் பயணம், மக்கள் சந்திப்பு இயக்கம் என்று ஒரே நேரத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் பல்வேறு பகுதிகளில் பரப்புரை இயக்கங்களை நடத்தி வருகிறது. 50க்கும் மேற்பட்ட கழகச் செயல் வீரர்கள் இந்தத் தொடர் பரப்புரை இயக்கத்தில் தொடர்ந்து பங்கேற்று களப்பணியாற்றி வருகிறார்கள்.*

*திராவிடர் விடுதலைக் கழகத்தின் கோவை செயலவைத் தீர்மானங்களை விளக்கும் பரப்புரைக் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

முதல் கட்டமாக ஜூலை 15 - பழனி, ஜூலை 16 - காரைக்குடி, ஜூலை 18 - நெல்லை மாவட்டம், பாவூர் சத்திரத்திலும் நடந்தது. இரண்டாம் கட்ட பரப்புரைப் பயணம் ஜூலை 23 ஆம் தேதி மன்னார்குடியிலும், ஜூலை 24 - மயிலாடுதுறையிலும், ஜூலை 26 -சின்ன சேலத்திலும் நடந்தது. மூன்றாம் கட்டப் பயணம் 30 ஆம் தேதி தொடங்குகிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் சிவக்குமார் கூட்டங்களில் தொடர்ந்து பங்கேற்று வருகிறார்கள். ஆகஸ்டு 18 வரை இது நீடிக்கிறது.

தமிழ்நாட்டில் இயக்கும் மத்திய அரசு அலுவலகங்களில் 90 சதவீதத்துக்கு மேல் உ.பி., பீகார் மாநிலங்களைச் சார்ந்தவர்களே குவிந்து வருவதையும், வடமாநிலங்களில் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் ஊழல் முறைகேடுகளால் திட்டமிட்டு இவைகள் நடத்தப்படுவதையும், தமிழர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கிட அகில இந்திய தேர்வாணையத்தை ஒழித்து, மாநில அடிப்படையில் தேர்வாணையம் அமைக்க வலியுறுத்தி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கி உரையாற்றுகிறார். மராட்டிய மாநிலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. கருநாடக மாநிலத்தில் ஆடம்பரத் திருமணங்களுக்கு வரி விதித்து அந்தப் பணத்தை ஏழை மக்கள் திருமணச் செலவுக்கு உதவிடும் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதே போன்ற இரண்டு சட்டங்களையும் தமிழகத் திலும் கொண்டு வரவேண்டும் என்றும் காவிரி மேலாண்மை அமைத்தல் உள்ளிட்ட தமிழின உரிமைகளை வலியுறுத்தியும் தோழர் கொளத்தூர் மணி பேசி வருகிறார்.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தனது உரையில், “பார்ப்பன-பனியா பன்னாட்டு நிறுவனங்களின் பிடியில் இந்திய தேசியம் இயங்கி வருவதையும், பனியா-பன்னாட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் அதிகார சக்திகளாக பார்ப்பனர்களே இருக்கிறார்கள் என்றும் விளக்கி வருகிறார்.

சமஸ்கிருத வாரம் நடத்துவதற்கான சுற்றறிக்கை ஈழத் தமிழர் பிரச்சினையில் துரோகம், விவசாயம், கல்வி, இன்சூரன்ஸ், மருத்துவத் துறையில், பன்னாட்டுச் சுரண்டலுக்கு கதவு திறந்துவிட்டு, ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் முயற்சிகளையும் விடுதலை இராசேந்திரன், கூட்டங்களில் விரிவாக விளக்கிப் பேசுகிறார்.

**கூட்ட நிகழ்ச்சிகள் விவரம்:**

தமிழின உரிமை மீட்புப் பொதுக் கூட்டம் 24.07.2014 அன்று மயிலாடுதுறை, விஜயா தியேட்டர் அருகில் நடைபெற்றது. இப்பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மாநில பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் தனவேந்திரன், தமிழர் உரிமை இயக்கம் சுப்பு மகேஷ் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். மண்டல செயலாளர் இளையராஜா, மாவட்டத் தலைவர் மகேசு உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர் அன்பரசு ஒருங்கிணைத்தார்.

23.07.2014 புதன் கிழமை மன்னார்குடி பந்தலடி கீழ்புறத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப்பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாநில செயலவைத் தலைவர் துரைசாமி, கழக மாநில பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், தமிழ்நாடு மாணவர் கழக மாநில அமைப்பாளர் பா.சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு தலைமையேற்றார். நீடாமங்கலம் ஒன்றிய அமைப்பாளர் கு.செந்தமிழன் வரவேற்புரையாற்றினார்.

26.07.14 சனிக்கிழமை மாலை சின்ன சேலத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இப்பொதுக் கூட்டத்தில் கழகத்

(4 ஆம் பக்கம்)



## வினாக்கள்... விடைகள்...!

- சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும். – **ஞான தேசிகன்**

  அப்படியானால் ப. சிதம்பரம், ஜி.கே.வாசன், இளங்கோவன் அணிகளுடன்கூட கூட்டணி கிடையாதா?

- தமிழ்நாட்டில் ‘தீண்டாமை’ என்பது எல்லாம் அறவே கிடையாது. – **தந்தி டி.வி.யில் மருத்துவர் இராமதாசு**

  ஓ, அதுக்காகத்தான் ‘திராவிட கட்சிகள்’ தமிழகத்தை நாசமாக்கிவிட்டன என்கிறீர்களா? புரியுது! புரியுது!

- இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணை நடத்த - அய்.நா. நியமித்த குழு இந்தியா வருவதற்கு மோடி ஆட்சி ‘விசா’ மறுப்பு. – **செய்தி**

  ஸ்ரீராமபிரான் நடத்திய யுத்தத்துக்குப் பிறகு, இலங்கையில் எந்தப் போரும் நடந்தது இல்லை. இதுவே எங்க வெளிநாட்டு ‘இந்துத்துவா’ கொள்கை! புரிஞ்சுக்குங்க.

- ஜாதியமைப்பு மிகச் சிறப்பானது; அதற்கு எதிராக எந்த புகாரும் பழங்காலங்களில் வந்ததே இல்லை. – **வரலாற்று ஆய்வுக் கழகத் தலைவர் சுதர்சன் ராவ்**

  மோடிஜி, இப்படி ஒரு ஆசாமியை எந்தக் காட்டிலிருந்து பிடிச்சுட்டு வந்து இந்தத் தலைவர் சிம்மாசனத்தில் உட்கார வெச்சிருக்கீங்க? வரலாற்றை ஆராய்ந்து கிழிச்சிடுவாரு.

- இந்திய மொழிகள் எல்லாவற்றுக்குமே சமஸ்கிருதம்தான் தாய். – **மத்திய மனிதவளத் துறை சுற்றறிக்கை**

  அப்ப ஒரு ‘டவுட்டு’! தாயான அந்த மொழியை, தாய்க்குலம் கோயில்களில் ஓதுவதற்கு ஏன் தடை போடுறீங்க? சொல்லுங்க... சொல்லுங்க...

- இந்த ஆண்டு இறுதிக் குள்ளாவது இராஜேந்திர சோழனுக்கு அரசு விழா எடுக்க வேண்டும். – **‘தமிழ் இந்து’வில் ஆய்வாளர் கட்டுரை**

  எடுக்கலாம்; ஆனால், இராஜேந்திர சோழன் தனது மகள் அம்மங்காதவியை தெலுங்கு நாட்டுக்காரனான கீழைச் சாளுக்கிய அரசனுக்கு திருமணம் செய்து வச்சிருக்கானே! தூய தமிழ்த் தேசியவாதிகள் இதை ஏற்பார்களா? யோசித்துப் பாருங்க!

## சென்னையில் ‘தீவரைவு’ ஆவணப்படம் திரையீடு

*பூங்குழலி இயக்கிய ‘தீவரைவு’ - குறும்படம் ஆகஸ்டு 3 ஆம் தேதி மாலை 5 மணிக்கு சென்னை ‘கவிக்கோ’ அரங்கில் (6, 2வது முதன்மை சாலை, சி.ஐ.டி. காலனி, டி.டி.கே. சாலை, மயிலாப்பூர்) திரையிடப்படுகிறது.*

ஆவணப்பட குறுந்தகடு விற்பனைக்குக் கிடைக்கும். விலை ரூ 100/-

# பார்ப்பனர்களுக்கு அடிமையான சோழ மன்னர்கள்

## பழ. நெடுமாறன்

***இராஜஇராஜசோழன், இராஜேந்திர சோழன் போன்ற சோழ மன்னர்கள், தங்கள் தமிழ்ப் பெயர்களை வடமொழியில் மாற்றிக் கொண்டதோடு, பார்ப்பனியத்தை பரப்புவதில் முனைந்து செயல்பட்ட வரலாற்றை பழ.நெடுமாறன் தனது நூலில் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.***

தமிழகத்தில் மலர்ந்த பக்தி இயக்கம் பல காலகட்டங்களில் இந்தியாவின் பிற மாநிலங்களுக்குப் பரவியது என்னும் கருத்தை பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், அறிஞர் சுநீத் குமார் சாட்டர்ஜி போன்றோர் வெளியிட்டுள்ளனர்.

ஆனால், காலப்போக்கில் வர்ணாசிரம தர்மமும் வைதீக தர்மமும் படிப்படியாகத் தமிழகத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கின. பிற்காலச் சோழர் காலத்தில் வர்ணாசிரம தர்மம் மிக இறுக்கமாகப் பேணப்பட்டது என்பதற்குக் கல்வெட்டு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

பல்லவர் காலத்தில் தொடங்கி பிற்காலச் சோழர் காலம் வரை தமிழ்நாட்டில் ஏராளமான கற்கோவில்கள் எழுப்பப்பட்டன. அவற்றின் வெளிப்பாடுகளாக அரசர்களாலும் அவர்களின் குடும்பத்தினராலும் அரசு அதிகாரிகளாலும் பார்ப்பனர்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. வடநாட்டிலிருந்து ஏராளமான பார்ப்பனர்கள் வரவழைக்கப்பட்டு சதுர்வேதி மங்கலங்களில் குடிவைக்கப்பட்டனர். அவர்களுக்குக் கிராமங்கள் இறையிலி (வரிகள் இல்லாத) தானங்களாக அளிக்கப்பட்டன.

பக்தி இயக்கம் அதன் உச்சத்தை அடைந்தபோது சைவ சமயம் நிறுவனம் அடையத் தொடங்கியது. கோவில்களை மையமாகக் கொண்ட இந்த நிறுவனங்களின் ஆதரவில் பார்ப்பனர்களும் சோழ மன்னர்களும் செயல்பட்டார்கள். கி.பி.850 ஆம் ஆண்டிலிருந்து 11 ஆம் நூற்றாண்டு வரை சோழர்களின் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றது.

சங்ககாலச் சோழர்கள் கரிகாலன், நெடுங்கிள்ளி, கிள்ளிவளவன் போன்ற தமிழ்ப் பெயர்களைக் கொண்டிருந்தனர். ஆனால், பிற்காலச் சோழர்கள் விசயாலயன், பராந்தகன், இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் போன்ற வட மொழிப் பெயர்களை சூட்டிக் கொள்வதில் பெருமிதம் கொண்டார்கள். சோழர்களின் அரசாட்சியும் பார்ப்பனர்களால் நியாயப்படுத்தப்பட்டது. சோழ குலம் சூரிய குலத்தோடும் புராணங்கள் ஆதிக்கத்தோடும் இணைக்கப்பட்டது. வேளாண்குடியைச் சேர்ந்த சோழர்கள் பார்ப்பனர்களால் சத்திரியர்களாக்கப்பட்டு அவர்களின் முடிசூட்டும் விழாவைத் தாங்களே நடத்தும் உரிமையைப் பெற்றனர். பிரம்மதேய விவசாய நிலங்களின் உடைமையாளர்களாகப் பார்ப்பனர்கள் மாறினார்கள். சமயக் கிரியை ஆற்றும் தகுதி காரணமாகவும் நில உடைமையாளராக இருந்ததன் காரணமாகவும் அரசியல் செல்வாக்குக் காரணமாகவும் தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் தலைமைச் சாதியினராக மாறினார்கள்.

அதுமட்டுமல்ல, அதுவரை வடநாட்டு வைதீக மதம் தமிழ்நாட்டில் செல்வாக்கற்று ஒதுக்கப்பட்டிருந்தது. தென்னாட்டில் பரவியிருந்த சமண, பௌத்த மதங்களை அடக்க - ஒடுக்கச் செய்த முயற்சி தோற்றது. எனவே, சமயம் (காலம்) நோக்கிக் காத்திருந்த வைதீக மதத்தினர் தமிழ்நாட்டில் பரவி வந்த பக்தி இயக்கத்தோடு இரண்டறக் கலந்தனர். தமிழ்த் தெய்வங்களுக்கும் வைதீகத் தெய்வங்களுக்கும் புதிய தொடர்புகளையும் உறவுகளையும் கற்பித்தனர். தமிழ் முருகனுக்கு சுப்பிரமணியன், ஸ்கந்தன் முதலான புதுப் பெயர்களைச் சூட்டினர். வள்ளி என்னும் தமிழ் மனைவியோடு இருந்த முருகனுக்குத் தெய்வயானை என்னும் இந்திரன் மகளை மனைவியாகக் கொடுத்து ஆரிய தமிழர் தொடர்பை உறுதிப்படுத்தினர். தென்னாடுடைய சிவனும் வடநாட்டு உருத்திரனும் ஒன்றே எனக் கூறினர். சிசனத் தேவர் என வைதீர்களால் இழித்துரைக்கப்பட்ட சிவலிங்கத்தை உயர்ந்த தெய்வமாக ஏற்றுக் கொண்டனர். தமிழ்க் கொற்றவையைச் சிவனுடைய மனைவியாக ஆக்கிவிட்டனர். மாலவன் எனும் திருமால் வைதீகத் தெய்வமான விஷ்ணுவோடு இணைக்கப்பட்டார். ஆரியர்களுக்கே உரிய இந்திரன், சந்திரன், பலதேவன், சூரியன் முதலிய தெய்வங்கள் மறைக்கப்பட்டன. விநாயகர் முதலிய புதிய தெய்வங்கள் புதிதாகக் கற்பிக்கப்பட்டன. இவைகளுக்கு ஏற்ற முறையில் புதிய பாடல்கள் எழுதப்பட்டன. இவ்வாறு தமிழ்நாட்டுச் சைவ வைணவம் ஆகியவற்றோடு வைதீக மதம் இரண்டறக் கலக்கப்பட்டது. இதன் விளைவாகத் தமிழர்களின் தெய்வ வழிபாட்டில் பல மாறுதல்கள் புகுத்தப்பட்டன. தொன்றுதொட்டு இருந்து வந்த சிறு தெய்வ வழிபாடு இழிவாகக் கருதப்பட்டது. பூசை செய்யும் முறைகளும் வழிபாட்டு முறைகளும் மாற்றியமைக்கப்பட்டன.

**நன்றி : "உருவாகாத இந்தியத் தேசியமும் உருவான இந்துபாசிசமும்" நூலிலிருந்து பக்.66.**

## தடைகளைத் தகர்த்து – திருப்பூரில் கழகம் எடுத்த 'மே' தின பொதுக் கூட்டம்




திருப்பூரில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் உழைப்பாளர் தின பொதுக் கூட்டம் மாஸ்கோ நகரில் 29.6.2014 ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வரவேற்புரை சி.மாதவன், தலைமை து.பாலு, முன்னிலை க. அகிலன், ஜீவா நகர் குமார், மாநில செயலவைத் தலைவர் துரைசாமி, கோவை மண்டல செயலாளர் பல்லடம் விஜயன், சு.க.ப.க. மாவட்ட செயலாளர் அப.சிவா, முகில்ராசு, தமிழ்நாடு அறிவியல் மன்றம் மாநில அமைப்பாளர் சிவகாமி, நீதிராசன் ஆகியோர் உரையாற்றினர்.

தலைவர் கொளத்தூர் மணி, 'பெரியார் பார்வையில் உழைக்கும் மக்கள்' என்கிற தலைப்பில் சிறப்புரையாற்றினார். சி.முருகன் நன்றியுரையாற்றினார்.

பல்வேறு இன்னல்களுக்கிடையேயும், காவல்துறை அனுமதி மறுப்பு போன்ற தடைகளையும் தாண்டி, இப் பொதுக் கூட்டம் சிறப்பாக நடைபெற இப்பகுதி கழகத் தோழர்கள் மாநகர தலைவர் சம்பூகன், கணபதி, விஜய், ராம்கி, பிரவீண்குமார், ராகுல், குணா, நாகராஜ், சங்கர், சுவரெழுத்து பழனி பத்மநாபன் ஆகியோர் உழைத்தனர். முன்னதாக திராவிடர் கலைக் குழுவினரின் வீதி நாடகம் நடைபெற்றது. அகமணமுறையின் பாதிப்புகள் குறித்தும், ஜாதிய கொடுமைகள் குறித்தும் தோழர்களின் நாடகம் அப்பகுதி மக்களிடையே வரவேற்பைப் பெற்றது.

அகமண முறையினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த கழக வெளியீடான விழிப்புணர்வு புத்தகம் பெருமளவில் விற்பனையானது.

**'முன்னோடி – பின்னோடி' வாதங்களுக்கு மறுப்பு கட்டுரை அடுத்த இதழில்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

## 'திராவிடர் விடுதலைக் கழகத்தின்' நகர்வு புத்தகச் சந்தை

- புத்தக ஆர்வலர்களுக்கும், தோழர்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு!
- திராவிடர் விடுதலைக் கழகத்தின் நகர்வு புத்தகச் சந்தை முதல்கட்டமாக ஆகஸ்டு 10 ஞாயிறு அன்று பொள்ளாச்சியில் தொடங்கி, செப்டம்பர் 17இல் சென்னையில் முடிவடைய உள்ளது.
- திராவிடர் விடுதலைக் கழகத்தின் வெளியீடுகள் 10 முதல் 50 சதம் வரை குறைக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட உள்ளன.
- புத்தகச் சந்தையில் ரூ.400 மதிப்புள்ள 17 சிறு வெளியீடுகள் கொண்ட ஒரு தொகுப்பு ரூ.250-க்குக் கிடைக்கும்!
- 1925 முதல் 1938 வரையிலான பெரியாரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் தொகுக்கப்பட்டு 'குடிஅரசு' தொகுப்பு நூல்களாக வெளியிடப்பட்டன. ரூ.5300 மதிப்புள்ள 'குடிஅரசு', ஆங்கில 'ரிவோல்ட்' தொகுப்புகள் ரூ.3500-க்கு - முன்பதிவு விலையில் கிடைக்கும். மாவட்டப் பொறுப்பாளர்களின் உறுதியின் அடிப்படையில் தவணை முறையிலும் கிடைக்கும்.
- புத்தகச் சந்தைப் பயணத் தடத்தில் உள்ள மாவட்டப் பொறுப்பாளர்கள் தங்கள் பகுதியில் காவல்துறை அனுமதியும், நான்கு தோழர்கள் தங்குவதற்கான முன் ஏற்பாடும் செய்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.
- புத்தகச் சந்தைக்குரிய வாகனத்தில் இரண்டு தோழர்கள் விற்பனைக்காக இருப்பார்கள். மேலும் இரண்டு தோழர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள நமது தோழர்கள் மற்றும் ஆதரவாளர்களை வீடு வீடாக நேரடியாகக் கண்டு விற்பனையில் ஈடுபடுவார்கள். அதற்கு உதவியாக இரண்டு இரு சக்கர வாகனத்தை ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

**பயண வழித்தடம்:**

10.8.14 - ஞாயிறு - பொள்ளாச்சி
14.8.14 - வியாழன் - கோவை
17.8.14 - திங்கள் - பல்லடம்
20.8.14 - புதன் - திருப்பூர்
23.8.14 - சனி - கோபி
25.8.14 - திங்கள் - ஈரோடு
27.8.14 - புதன் - கரூர்
29.8.14 - வெள்ளி - திருச்செங்கோடு
31.8.14 - ஞாயிறு - சேலம்
02.9.14 - செவ்வாய் - மேட்டூர்
06.9.14 - சனி - தருமபுரி
07.9.14 - ஞாயிறு - காவேரிப்பட்டம்
08.9.14 - திங்கள் - ஊற்றங்கரை
09.9.14 - செவ்வாய் - திருவண்ணாமலை
10.9.14 - புதன் - கள்ளக்குறிச்சி
11.9.14 - வியாழன் - மயிலாடுதுறை
13.9.14 - சனி - சிதம்பரம்
14.9.14 - ஞாயிறு - புதுச்சேரி
15.9.14 - திங்கள் - சென்னை
17.9.14 - புதன் - நிறைவு

பயண வழித்தடத்தின் தேதிகளில் மாற்றம் செய்ய விரும்பும் மாவட்டப் பொறுப்பாளர்கள் ஆகஸ்டு 5 ஆம் தேதிக்கு முன்பு தகவல் தெரிவிக்குமாறும், மண்டல அமைப்புச் செயலாளர்கள் தங்கள் பகுதி பொறுப்பாளர்களை உடனடியாகத் தொடர்பு கொண்டு உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

**– தி. தாமரைக்கண்ணன்,**
**அமைப்புச் செயலாளர். (9787313222)**

## நாளேடுகள் வெளியிடும் வரலாற்றுப் புரட்டுகளுக்கு மறுப்பு

# தமிழகத்தில் முதல் ‘ஆலயப் பிரவேசம்’ நடத்தியது யார்?

***தமிழ்நாட்டில் முதன்முதல் தாழ்த்தப்பட்டோரை கோயிலுக்குள் அழைத்துச் சென்று போராடியவர் மதுரை வைத்தியநாத அய்யர் என்று உண்மைக்கு மாறான ஒரு வரலாற்றை சில நாளேடுகள் பதிவு செய்து வருகின்றன. கடந்த ஜூலை 8 ஆம் தேதி ஆலயப் பிரவேசம் நிகழ்ந்த நாள் என்று ‘தினத்தந்தி’ ஒரு கட்டுரை வெளியிட்டது. இதே தவற்றை ‘தினமணி’யும் தொடர்ந்து செய்து வருகிறது. இதை மறுத்து முதன்முதலாக கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தியது சுயமரியாதை இயக்கம் தான் என்ற வரலாற்றை ஆதாரங்களுடன் விளக்கி, மேட்டூர் கழகத் தோழர் மே.கா. கிட்டு, ‘தினத்தந்தி’ நாளேட்டுக்கு எழுதினார். ‘தினத்தந்தி’ வெளியிடாத அந்தக் கட்டுரையை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பதிவு செய்கிறது.***

கடந்த 08.07.2014 அன்று ‘தினத்தந்தி’யில் வி.கே. ஸ்தாணுநாதன் அவர்களால் எழுதப்பட்ட “ஆலய பிரவேசம் நிகழ்ந்த நாள்” கட்டுரையை வெளியிட்டிருந்தீர்கள்.

அதில், “1939 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8-ந் தேதி மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சகோதரர்கள் நால்வருடனும் அந்நாளில் கோவிலுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டு வந்த நாடார்களுடனும் வைத்தியநாத ஐயர் பக்தி விசுவாசத்தோடு மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் பிரவேசித்து சாமி தரிசனம் செய்தார்” என்று எழுதியுள்ளார் கட்டுரையாளர்.

இப்பொழுது மட்டுமல்ல, 23.02.1997 ஆம் ஆண்டு ‘தினமணி’யில் “ஆலயப் பிரவேசத்தின் முன்னோடி” என்ற தலைப்பிலும் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் நடந்ததுதான் முதல் கோவில் நுழைவுப் போராட்டம் என்றும், போராட்டத்தின் முன்னோடி வைத்தியநாதர் அய்யர் என்றும் எழுதியிருந்தார்.

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் நடத்திய கோவில் நுழைவுப் போராட்டம் பற்றிய உண்மைகளைத் தெரிந்தே திட்டமிட்டு மறுத்து வி.கே.ஸ்தாணுநாதனால் எழுதப்பட்ட கட்டுரைக்கு மறுப்புத் தெரிவித்து உண்மையான வரலாற்றை எழுதி, கடிதமாக பெரியாரியக்கத் தோழர்கள் அனுப்பினார்கள். மறுப்புக் கட்டுரையை ‘தினமணி’ நாளேடு வெளியிடவில்லை. குறைந்தபட்சம் வாசகர் கடிதம் பகுதியிலும்கூட மறுப்பை வெளியிடவில்லை.

மீண்டும் ‘தினமணி’ 08.06.2005 இல் அதே ஸ்தாணுநாதன் எழுதிய “வரலாறு படைத்த நிகழ்ச்சி” என்ற கட்டுரையில் மதுரையில் வைத்தியநாத அய்யர் நடத்திய கோவில் நுழைவுக் கிளர்ச்சிப் பற்றிய செய்தியை வெளியிட்டது. முன்பு எழுதிய கட்டுரையில் இருந்த அதே கருத்தை மீண்டும் வலியுறுத்தும் வகையிலேயே அந்தக் கட்டுரையும் அமைந்திருந்தது.

இதையெல்லாம் மறுத்து பெரியாரியக்கத் தோழர்களால் 2005 ஆம் ஆண்டு உடுமலைப்பேட்டை பெரியார் பாசறை வெளியீட்டின் மூலம் குத்தூசி குருசாமி நூற்றாண்டு நினைவாக ஒரு சிறு நூலையும் வெளியிட்டார்கள்.

கட்டுரையாளரின் பொய் வரலாறு ‘தினமணி’யிலிருந்து ‘தினத்தந்தி’க்கு மாறியிருக்கிறது அவ்வளவுதான். தொடர்ந்து ஒரே பொய் வரலாறை மாறி மாறி எழுதுகிறார்.

ஈழத் தமிழர் வரலாற்றை பிரசுரித்து அதை நீங்கள் புத்தகமாகவும் வெளியிட்டுள்ளீர்கள்.

இங்குள்ள தமிழர்களின் வரலாற்றை தவறாக உங்கள் இதழ்களில் இனிமேலும் வரக்கூடாது என்பதற்காகத்தான் இதை எழுதுகிறேன்.

இதை பிரசுரிப்பீர்கள் என்றும் நம்புகிறேன்.

- சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் 18.01.1926 இல் கோவில் நுழைவுக்கென்று சுசீந்திரம் கோவிலில் தான் கிளர்ச்சி துவக்கப்பட்டது.
- முதல் கோவில் நுழைவுப் போராட்டத்தைத் தொடங்கியவர் ‘திராவிடன்’ இதழின் ஆசிரியர் ஜே.எஸ்.கண்ணப்பர். இவர் 07.02.1927 இல் திருவண்ணாமலை கோவிலில் ஆதிதிராவிடர்களை அழைத்துச் சென்றார். அவரை கோவிலுக்குள் வைத்து பூட்டினர். அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு ஓராண்டுக்கும் மேலாக வழக்கு நடைபெற்றது. வழக்கு விசாரணையில் கண்ணப்பருக்குச் சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டது. (‘குடிஅரசு’ 6.5.1928)
- 1927 ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான ஜே.என். இராமநாதன் தாழ்த்தப்பட்டோரை அழைத்துக் கொண்டு திருச்சி தாயுமானவர். மலைக்கு படியேறிச் சென்றபோது அவர்கள் குண்டர்களால் தடியால் அடித்து பாறைப்படிகளில் உருட்டி விடப்பட்டார்கள். (‘கேசரி’ 71, 73 Irschik, 339)
- அன்றைய சுயமரியாதை இயக்க செயற்பாட்டாளர் கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமையில் 1927இல் சுமார் 1000 பேர் அனைத்துச் சாதியினருடன் மயிலாடுதுறை மயூரநாதசுவாமி கோவிலில் நுழையச் சென்றனர். நுழை வாயிலையும் கருவறையையும் கோவில் நிர்வாகிகள் பூட்டிவிட்ட போதிலும் பக்கவாட்டுக் கதவுகள் வழியாகச் சென்று ‘மணிக்கதவே தாழ் திறவாய்’ என்ற திருநாவுக்கரசர் பாடலை பாடினார்.
- 25.06.1928 இல் திருச்சி மலைக்கோயிலிலும் 12.08.1928இல் திருவானைக்கோவிலிலும் அத்தகைய முயற்சிகள் நடத்தப்பட்டன.
- தந்தை பெரியார் 1922 ஆம் ஆண்டு திருப்பூர் காங்கிரசு மாநாட்டில் கோவில் நுழைவு - பொது உரிமைகள் வேண்டுமெனத் தீர்மானம் கொண்டு வந்தவர்.
- 1929 மார்ச் 12-ந் தேதி “ஈரோடு கோட்டை ஈஸ்வரன் கோவிலுக்குள் ஆதி திராவிடர் தோழர்களையும் அனுமதிக்க வேண்டும்” என்று தேவஸ்தான கமிட்டி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர தேவஸ்தான கமிட்டித் தலைவரான தந்தை பெரியார் முன்னின்றார். அதற்கு அடுத்த நாளே பெரியார் கோவை சென்று விடுகிறார்.

தேவஸ்தானக் கமிட்டியின் தீர்மானத்தை குத்தூசி குருசாமி நடைமுறைப்படுத்தத் துணிந்தார். பெரியாரின் துணைவியார் நாகம்மையாரின் துணையோடு குத்தூசி குருசாமி, பொன்னம்பலனார் மற்றும் ஈரோடு கச்சேரி வீதி ஈஸ்வரன், மஞ்சமேட்டான் மகன் பசுபதி, கிருஷ்ணம்பாளையம் கருப்பன் ஆகிய 3 தாழ்த்தப்பட்ட தோழர்களை நெற்றியில் திருநீறு பூசச் செய்து முக்கிய தெருக்களின் வழியாக அழைத்துக் கொண்டுச் சென்று தேங்காய், பழம், பூ ஆகியவை அடங்கிய தட்டுடன் கோவிலுக்குள் நுழைந்தார்கள். குத்தூசி குருசாமியும் தோழர்களும் கோவிலுக்குள் இருக்கும்போதே வெளிக்கதவை இழுத்து மூடி விட்டனர். இரண்டு நாள்கள் பூட்டிய கதவைத் திறக்க மறுத்து விட்டனர். இரண்டு நாள்களுக்குப் பின் பெரியார் வந்த பிறகே கோவில் கதவு திறக்கப்பட்டது. குத்தூசி குருசாமி மற்றும் தோழர்கள் மீது வழக்கு போடப்பட்டது.

இது தொடர்பான வழக்குகள் குறித்த செய்திகளை ‘குடிஅரசு’ (21.4.1929) பதிவு செய்துள்ளது. 9 மாதங்கள் நடந்த விசாரணைக்குப் பிறகு ஈசுவரன், பசுபதி, கருப்பன் ஆகியோருக்கு ரூ.60 அபராதம் விதிக்கப்பட்டது. ஈசுவரன் மட்டும் அபராதம் கட்ட மறுத்து சிறை ஏகினார். ‘குடிஅரசு’ இதைப் பாராட்டி, ஆலயப் பிரவேச சரித்திரத்தில் தோழர் ஈசுவரன் பெயர் முதல் பெயராக இடம் பெறும் என்று பாராட்டி எழுதியது.

ஈரோடு கோவில் நுழைவு வழக்கில் ஈரோடு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்துச் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அதே காலகட்டத்தில் சுசீந்திரத்தில் கோவிலைச் சுற்றியிருந்த தெருக்களில் நடந்து சென்றதற்காக திருவாங்கூர் நீதிமன்றத்தால் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த 12 பேர் தண்டிக்கப்பட்டிருந்தனர். அந்த வழக்கும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டிருந்தது. இரண்டு வழக்குகளிலும் தண்டனையைத் தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஈரோடு மாநாட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில் பல்வேறு இடங்களில் கோயில் நுழைவுப் போராட்டங்களைச் சுயமரியாதை இயக்கத் தோழர்கள் மேற்கொண்டனர்.

ஈரோட்டில் கண்ணப்பரும், காரைக்குடியில் சொ.முருகப்பாவும் தலைச்சேரியில் டபிள்யூ.பி.ஏ. சவுந்தரபாண்டியனும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி, மயிலை கபாலீசுவரர் கோவில்களில் ‘திராவிடன்’ ஆசிரியர் சுப்ரமணியன், பண்டிதர் திரு ஞானசம்பந்தன் தலைமையிலும், ஆதி திராவிடர்கள் ‘ஆலயப் பிரவேசம்’ செய்து கைதானார்கள்.

சென்னைச் சட்டமன்றத்தில் 01.11.1932 இல் டாக்டர் சுப்பராயன் அவர்கள் கோவில் நுழைவு மசோதாவைக் கொண்டு வந்தார். அந்த மசோதாவை ஆதரிக்க வேண்டியது நீதிக் கட்சியினரின் கடமை என்று மசோதா வருவதற்கு முன்பே பெரியார் 30.10.1932 ‘குடிஅரசில்’ தலையங்கம் எழுதினார்.

இவ்வளவு நீண்ட நெடிய வரலாறுகள் இருக்கும்பொழுது 1939 ஆம் ஆண்டு செய்த செயலா முதன்மையானது?

யார் இந்த வைத்தியநாத அய்யர்?

வைத்தியநாத அய்யர், திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் (1922) பெரியார் கொண்டு வந்த தீண்டப்படாதார் கோவில் நுழைவுத் தீர்மானத்தை எதிர்த்தவர். இதை திரு.வி.க. தனது வாழ்க்கைக் குறிப்பில் பதிவு செய்துள்ளார். மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் இவர் நடத்திய ஆலயப் பிரவேசம், அன்று நடக்கவிருந்த மதுரை, இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக நடத்தப்பட்டது. கோவிலில் யாருக்கும் தெரியாமல், இரவு நேர கடைசி பூஜைக்குப் பிறகு, சில தாழ்த்தப்பட்டவர்களுடன் உள்ளே நுழைந்தார். இதற்கு உறுதுணையாக இருந்ததோடு கருவறையை பூட்டிவிட்டு ஓடிய பார்ப்பனர்கள் மீது நடவடிக்கையும் எடுத்தவர், கோவில் நிர்வாக அதிகாரியாக இருந்த ஆர்.எஸ். நாயுடு என்ற நீதிக்கட்சிக்காரர்.

வரலாற்றுப் பிழையான கட்டுரைக்கு வரலாற்று ஆதாரங்களோடு எழுதியுள்ளேன்.

தமிழ், தமிழ்நாடு, தமிழனுக்காக பத்திரிகை நடத்துபவராகிய நீங்கள் தமிழனுடைய வரலாற்றைத் தவறாகப் பிரசுரித்ததற்காக அந்த களங்கத்தைத் துடைக்கும் வண்ணம் இதை வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு கழகத் தோழர் மே.கா.கிட்டு ‘தினத்தந்தி’ ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## தஞ்சை மாவட்ட கழகக் கலந்துரையாடல் கூட்டம்

கடந்த 22/06/2014 ஞாயிற்றுக்கிழமை அன்று 6 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் தஞ்சை சரோஜின் அரங்கில் நடைபெற்றது. அதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார், பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மாதம் ஒருநாள் கலந்துரையாடல் கூட்டம் நடத்துவது
2. தஞ்சை மாவட்டத்தில் கழக அமைப்புகளை விரிவாக்கி பணியாற்ற ஏதுவாக கு.பாரி மற்றும் சித. திருவேங்கடம் ஆகிய இருவரையும் அமைப்பாளர்களாக நியமிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இதில் வடசேரி க.செ.சிவசுப்பிரமணியன், மா.பிரபாகரன், மா.கார்த்திகேயன், சுப.செயச்சந்திரன், மா.கரிகாலன் (நாச்சியார்கோயில்), அ. உதயக்குமார், அ. கோவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்

DATE OF PUBLICATION 30.07.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# தமிழின உரிமை-ஜாதி ஒழிப்பு-மூடநம்பிக்கைகளை விளக்கி களமிறங்கியது கழகம்






(முதல் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் கொளத்தூர்மணி, கழகப் பரப்புரை செயலாளர் தூத்துக்குடி பால்பிரபாகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தமிழ்நாடு அ றிவியல் மன்ற செயலாளர் ஆசைத்தம்பி தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் வெற்றிவேல், மாவட்டச் செயலாளர் பெரியார் வெங்கிடு, கரும்புலி தமிழன்பு மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக திராவிடர் கலைக் குழுவினரின் வீதி நாடகம் நடைபெற்றது. அகமணமுறையின் பாதிப்புகள் குறித்தும், ஜாதிய கொடுமைகள் குறித்தும் தோழர்களின் நாடகம் அப்பகுதி மக்களிடையே வரவேற்பைப் பெற்றது.

## பரப்புரைக் கூட்டங்களை நடத்திய தோழர்கள்

நங்கவள்ளி, மேச்சேரி : கிருஷ்ணன் இராசேந்திரன், சந்திரசேகர், கண்ணன், குமார், மனோஜ், சுதாகர், மாதேசு, தங்கராசு, சக்திவேல், மேட்டூர் அண்ணாதுரை, குமரப்பா, சீனிவாசன், மேச்சேரி அன்பழகன், காமராசு ஆகியோர்.

**கொளத்தூர் ஒன்றியம் :** சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், காவை. ஈசுவரன், சித்துசாமி, பழனசாமி, பச்சியப்பன், சென்னப்பன், மாரிசெட்டி, அபிமன்யு, காவை சசி, கபிலன் ஆதரவாளர்கள் நஞ்சுண்டாபுரம் சேகர், சுந்தரம், ராஜா.

பிரச்சார வாகன ஓட்டுநர்கள்: நங்கவள்ளி குமார், காவை. சவுந்தரராசன், அவினாசி.

**ஒளிபெருக்கி & சி.டி. புரஜெக்டர் அமைப்பு :** சென்னப்பன், சவுந்தரராசன், நஞ்சுண்டாபுரம் சேகர்.

**மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினர் :** கோவிந்தராசு, குமரப்பா, சீனிவாசன் ஆகியோர் பெரும்பாலான கூட்டங்களில் கலந்துகொண்டு பறை முழக்கம், இசை நிகழ்ச்சி நடத்தினர்.

### அகமண எதிர்ப்பு ஊர்திப் பரப்புரை

இது தவிர, அகமண முறை எதிர்ப்புப் பரப்புரைக் குழுவின் பயணம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் திண்டுக்கல் மாவட்டத்தில் கிராமம் கிராமமாக 10 நாள் நடந்தது ஜுலை 18 அன்று பழனியில் பயணம் தொடங்கியது. கிராமங்களில் தோழர்கள் முகாமிட்டு வீடு வீடாகச் சென்று ஜாதி மறுப்புத் திருமணம் புரிவோருக்கு தனி இடஒதுக்கீடு கோரும் கையெழுத்து இயக்கத்தை நடத்தி, கழக வெளியீடுகளை விற்பனை செய்தனர். மாலை நேரங்களில் அகமணமுறையின் சீர்கேடுகளை விளக்கிடும் வீதி நாடகம் நடத்தப்படுகிறது. கிராம மக்கள் திரண்டு வந்து பார்க்கிறார்கள்.

### மூடநம்பிக்கை எதிர்ப்புப் பரப்புரை

இந்த இரண்டு பரப்புரைகளைத் தவிர, மூடநம்பிக்கைகளை விளக்கி, சேலம் மேற்கு மாவட்டத்தில் கிராமம் கிராமமாக ஊர்திப் பரப்புரைப் பயணம் நடைபெற்றது.

முதற்கட்டமாக நங்கவள்ளி ஒன்றியம், மேச்சேரி, கொளத்தூர் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் சிறப்பாக நடைபெற்றது. இதில் அனைத்து இடங்களிலும் பெரியார் பெருந்தொண்டர் அய்யா சதாசிவம் உரையாற்றினார்.




ஜூன் 30 அன்று நங்கவள்ளியிலும், ஜூலை 1 இல் ஜலகண்டபுரத்திலும், 3இல் நங்கவள்ளி பேருந்து நிலையத்திலும், 4இல் மேச்சேரியிலும், 5இல் வெள்ளாரிலும், 6 ஆம் தேதி பொட்டனேரியிலும், 7 இல் கொளத்தூர் மூலக்கடையிலும், 8இல் செட்டியூரிலும், 9 இல் உப்புக்கல்லூரிலும், 10இல் பெரியார் நகரிலும், 11இல் கண்ணாமூச்சியிலும், 12 இல் இராமன்பட்டியிலும், 14 இல் பாலமலை செம்மம்பட்டியிலும், 14, 15இல் குருவரெட்டியூரிலும், 17இல் நீதிபுரத்திலும், 18இல் சின்னதண்டா சி.எஸ்.புரத்திலும், 20ஆம் தேதி பெரியதண்டா பகுதியிலும், 22ஆம் தேதி காவலாண்டியூரிலிருந்தும் மாலை 6 மணியிலிருந்து 9 மணி வரை பரப்புரைகள் நடந்தன.

அய்யா சதாசிவம் அனைத்துக் கூட்டங்களிலும் பங்கேற்று பேசினார். காவை இளவரசன், மேட்டூர் கோவிந்தராசு 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்தினர். நங்கவள்ளி அன்பு உரை மற்றும் மேட்டூர் டி.கே.ஆர். குழுவினர் இசை நிகழ்ச்சியும், சு.க.ப.க.வினரின் வீதி நாடகமும் ஆங்காங்கே நடந்தன.

அனைத்து ஊர்களிலும் பள்ளி மாணவ மாணவிகள், பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப் பித்தனர். கூட்டம் முடிந்த பின்பு பொது மக்களின் வினாக்களுக்கு தெளிவாக விளக்கமளிக்கப் பட்டது. அறிவியல் விளக்க மூட நம்பிக்கை ஒழிப்புப் படங்கள் சி.டி. புரஜெக்டர் மூலம் ஒளிபரப்பப்பட்டது.



**மக்கள் சந்திப்பு இயக்கம் :** இதுதவிர, மக்கள் சந்திப்பு இயக்கத்தையும் திருச்சி, கோவை மாவட்டங்களில் கழகம் நடத்தி முடித்துள்ளது. 3 ஆவது கட்டப் பயணத்துக்கு தயாராகி வருகிறது. கழகம் களப்பணிகளை முடுக்கி விட்டுள்ளது.

## கழகச் செயல்வீரர் மேட்டூர் ஆசைத்தம்பி முடிவெய்தினார்



திராவிடர் விடுதலைக் கழக சேலம் மேற்கு மாவட்ட பொருளாளரும், பெரியார் முழக்கம் சந்தா சேர்ப்புப் பொறுப்பாளருமான மேட்டூர் இரா.பெ. ஆசைத் தம்பி அவர்கள் கணைய நோய்க்காக ஈரோடு தனியார் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைப் பெற்று வந்தார். சிகிச்சைப் பலனளிக்காமல் 19.07.2014 அன்று அதிகாலை 3.00 மணிக்கு மரணமடைந்தார். அன்று மதியம் 1.00 மணிக்கு எந்தவித சடங்கும் இல்லாமல் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

கழகம் முன்னெடுத்துச் சென்ற அனைத்து போராட்டங்களிலும் தன் குடும்பத்தோடு பங்கெடுத்துக் கொண்டு சிறையும் சென்றவர் ஆவார். மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழுவின் பறைமுழக்கக் குழுவில் இணைந்து பொதுக்கூட்டம், மக்கள் சந்திப்பு இயக்கங்களில் பங்கேற்று வந்தவர். கழக வளர்ச்சிக்கு தன் செயல்பாட்டளவிலும், பொருளாதார வகையிலும் பெரும்பங்காற்றிய தோழர். அவரது இறுதி ஊர்வலத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, மண்டல அமைப்புச் செயலாளர்கள் கோபி இளங்கோ, மேட்டூர் சக்திவேல், சேலம், ஈரோடு மாவட்டத் தலைவர்கள், செயலாளர்கள், கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். தோழர் ஆசைத்தம்பிக்கு இளமதி என்ற மனைவியும், இளங்கதிர் என்ற மகனும் உள்ளனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சாலை விபத்தில் உயிரிழந்த கொளத்தூர் நகரக் கழகத் தலைவர் தோழர் இளஞ்செழியன் இவரது தம்பியாவார். செயலூக்கம் மிக்க தோழரை கழகம் இழந்து நிற்கிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 31st July 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN